# புதிய ஜனநாயகம்

**தொழிற்சங்க சட்டத் திருத்தம்:**

**பறிபோகும் தொழிலாளர் உரிமைகள்**



# இவர்தான் குற்றவாளி!

படிப்பகம்

www.padippakam.com




# வாசகர் கடிதம்

★ பட்டினியால் வாடும் நெசவாளர்களின் அவல நிலைக்கு, இலவச வேட்டி - சேலை திட்டம் நிறுத்தப்பட்டதுதான் காரணம் என்று பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் பரப்பி வந்த செய்தியையே உண்மையானது என்று கருதியிருந்தேன். அது எவ்வளவு தவறானது என்பதை பு.ஜ. உணர்த்தியது. கோ-ஆப்டெக்சிலும் கூட்டுறவு சங்கங்களிலும் தேங்கிக் கிடக்கும் ஜவுளிகளை அரசே கொள்முதல் செய்வதும், நெசவாளர்களுக்குத் தரவேண்டிய கூலி பாக்கியைத் தருவதும், ஜப்தி நடவடிக்கையை நிறுத்துவதும், சிட்டா நூலுக்கு அரசு விதித்துள்ள வரிகளை நீக்குவதன் மூலமாகவே நெசவாளர் பிரச்சினை முடிவுக்கு. வரும் என்பதையும், கஞ்சித் தொட்டியோ முட்டை பிரியாணியோ பிரச்சினைக்குத் தீர்வு அல்ல என்பதையும் கட்டுரை உணர்த்திய விதம், நெசவாளர்களிடம் நேரடியாக உரையாடியதைப் போன்ற உணர்வை ஏற்படுத்தியது.

முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம். என்ற ''மெகா'' தொடரின் மூலம் போலி கம்யூனிஸ்டுகள் தேய்ந்து காவியாய் மாறிய கதையைப் புரிந்து கொள்ள முடிந்தது. சிரிக்கும் போராட்டம், ஒப்பாரி போராட்டம், சுடுகாட்டில் ஆர்ப்பாட்டம் என்று போராட்டங்களையே கொச்சைப் படுத்தி, கம்யூனிஸ்டுகளுக்கே களங்கத்தை ஏற்படுத்திவரும் சி.பி.எம். பற்றிய முழுமையான சித்தாந்தப் புரிதலுக்கு வர இத்தொடர் பெரும் உதவியாக அமைந்திருந்தது. இத்தொடரை தனிவெளியீடாக கொண்டு வந்தால் பயனுடையதாக இருக்கும்.

**— தர்மராஜ், திருச்சி.**

★ செப்டம்பர் மாத பு.ஜ. இதழில் ''முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்.'' தொடர் கட்டுரை நிறைவு பெற்றதை அறிந்தேன். இக்கட்டுரையை நான் சில இதழ்களாகப் படித்தபோதிலும், தொடர்ச்சியாகப் படிக்க எனக்கு சில இதழ்கள் கிடைக்கப் பெறவில்லை. எனவே இத்தொடர் கட்டுரையைத் தொகுத்து ஒரு சிறு வெளியீடாகக் கொண்டு வந்தால் என்போன்ற வாசகர்களுக்கு மிகவும் பயனுடையதாக இருக்கும்.

**— கணேசமூர்த்தி, பரமக்குடி**

***(இதுபோல இன்னும் சில வாசகத் தோழர்களும் எமக்குக் கடிதம் எழுதியுள்ளனர். தோழர்களின் கோரிக்கையை ஏற்று ''முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்'' தொடர் கட்டுரையைத் தொகுத்து விரைவில் நூலாகக் கொண்டுவர ஆவன செய்கிறோம்.***

*— ஆசிரியர் குழு.)*

★ ''பட்டினியில் நெசவாளர்கள்; உல்லாசத்தில் ஜெயா'' என்ற கட்டுரை நான் அறியாத பல அரிய தகவல்களைத் தந்து நெசவாளர் பிரச்சினையைப் பற்றிய முழுமையான புரிதலைத் தந்தது. உலக வர்த்தகக் கழகத்தின் இரும்புப் பிடியில் வழக்குரைஞர்களும் தப்பவில்லை என்பதை ''நீதித் துறையிலும் தனியார்மயம்'' என்ற கட்டுரை எடுத்துக் காட்டியது. ரஜினி என்ற கழிசடை நாயகனை ''இதுதான் இன்றைய இந்தியா'' வெளிச்சம் போட்டுக் காட்டியது. சிறுவனாக இருந்த போதிலும் சமரசமின்றிப் போராடிய முனியசாமி மிகச் சிறந்த முன்னுதாரணமிக்கவன்.

**— பல்லவன், ஆலங்குடி.**

★ திறந்தவெளிச் சிறைச்சாலையாகும் தமிழ்நாடு என்ற தலையங்கக் கட்டுரையானது இன்றைய அடக்குமுறை ஆட்சியின் கோரத்தைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியது. தண்ணீர் தனியார்மயம் பற்றிய கட்டுரையானது நாட்டைக் கவ்வியுள்ள பேரபாயத்தை உணர்த்தியது. போதையிலிருந்து மீண்ட பாபா ரசிகர்களைப் பற்றிய பெட்டிச் செய்தியும் இதுதான் இன்றைய இந்தியாவும் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.

**— வாசகர்வட்டம், கோவை.**

★ செப்டம்பர் மாத பு.ஜ. இதழ் பிரச்சாரத்துக்கு பெரிதும் உதவியாக இருந்ததோடு, பரபரப்பாகவும் விற்பனையாகியுள்ளது. அமெரிக்க ஏகபோக எண்ணெய் நிறுவனத்தை எதிர்த்து நைஜீரிய நாட்டு கிராமப்புறப் பெண்கள் நடத்திய முற்றுகைப் போராட்டம் பற்றிய செய்தி, போராட்ட உணர்வூட்டியது. நிலப்பிரபுக்களைப் போல நீர்பிரபுக்கள் உருவாகி இயற்கை மூலாதாரங்களையும் கொள்ளையிடக் கிளம்பி விட்டதை பு.ஜ. எடுப்பாக உணர்த்தியது. சிவில் சட்டத் திருத்தம் மற்றும் வழக்கறிஞர்களின் போராட்டம் பற்றிய கட்டுரையும், எமது வாசகர் வட்டக் கூட்டத்தில் வழக்கறிஞர் நாகரத்தினம் அவர்கள் ஆற்றிய சிறப்புரையும், எமக்கு முழுமையான புரிதலைத் தந்துள்ளது.

**— வாசகர் வட்டம், சென்னை.**

## திண்ணியத்தில் வன்கொடுமை கண்டன ஆர்ப்பாட்டம்

**திருச்சி மாவட்டம் திண்ணியத்தில் தாழ்த்தப்பட்டோரை மலம்தின்ன வைத்த வன்கொடுமையானது, மனித இனத்திற்கு நேர்ந்த மிகப் பெரிய அவமானம். நாகரீகமிக்க மனித சமுதாயத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய மிகக் கொடூரமான சாதிவெறி அட்டூழியம். இக்கொடுஞ் செயலைக் கண்டித்தும் தாழ்த்தப்பட்டோர் மீது கேள்விமுறையின்றித் தொடரும் சாதிவெறித் தாக்குதல்களை எதிர்த்தும் சீர்காழி வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி கடந்த ஆகஸ்ட் 27-ஆம் தேதியன்று சீர்காழி பேருந்து நிலையம் அருகே எழுச்சிமிகு கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. சீர்காழி வட்ட வி.வி.மு. செயலர் தோழர் ரவி தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் தோழர்கள் அம்பிகாபதி, பூவிழியன் மற்றும் ஓய்வு பெற்ற நீதிபதி திரு. ப. கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். பகுதிவாழ் உழைக்கும் மக்கள் திரளாகப் பங்கேற்றும் நிதியுதவி அளித்தும் ஆதரித்தனர்.**

**— விவசாயிகள் விடுதலை முன்னணி, சீர்காழி வட்டம்.**

*அன்பார்ந்த வாசகத் தோழர்களே,*

*இந்த இதழோடு உங்கள் புதிய ஜனநாயகம் இதழ் 17-வது ஆண்டை நிறைவு செய்கிறது. நாடு மீண்டும் காலனியாக்கப் படுவதற்கு எதிராகவும் இந்துவெறி பாசிசத்துக்கு எதிராகவும் புதிய ஜனநாயகம் நடத்திவரும் போராட்டத்துக்கு உறுதியான ஆதரவளித்துவரும் உங்கள் அனைவருக்கும் எமது நன்றியையும் புரட்சிகர வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். பரந்துபட்ட மக்களிடம் அரசியல் விழிப்புணர்வூட்டும் மகத்தான கடமையை நிறைவேற்ற, உங்களது ஊக்கமான ஆதரவையும் உறுதியான ஒத்துழைப்பையும் அடித்தளமாகக் கொண்டு 18-வது ஆண்டில் எமது பயணத்தைத் தொடர உறுதியேற்கிறோம்.*

***— ஆசிரியர் குழு***



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 17

இதழ் 12

அக்டோபர் 2002

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10



மின் அஞ்சல் முகவரி:
puthiyajananayagam@hotmail.com

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அஞ்சல் பெட்டி எண். 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.


# காவிரி: தொடரும் துரோகம்

## மைய அரசின் ஆணை, அதிகாரங்களை ஏற்க மறுப்போம்!

காவிரி நீர்ப் பிரச்சினை தமிழகத்தின் நியாய உரிமைப் பிரச்சினை மட்டுமல்ல; வாழ்வா, சாவா என்கிற உயிராதாரமான பிரச்சினையாகும். ஏற்கனவே தெற்கே வைகையும், வடக்கே பாலாறு; தென்பெண்ணையும் வற்றிப் போய்விட்ட நிலையில் தமிழ்நாட்டின் பாதிக்கும் மேலான பகுதி வறண்ட தரிசு நிலமாகிப் போய்விட்டது. காவிரி நீரில் உரிமை மறுக்கப்படுமானால் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்கும் காவிரி பாசனப் பகுதி முழுவதும் பாலைவனமாகிவிடும் ஆபத்து நெருங்கி வருகிறது. ஆகவேதான் இது காவிரிப் பாசனப் பகுதி விவசாயிகளின் பிரச்சினை மட்டுமல்ல; தமிழ்நாடு முழுவதற்குமே ஓர் உயிராதாரமான பிரச்சினையாக உள்ளது.

அடுத்து, இயற்கை நியதிப்படியும், சர்வதேச நதிநீர் பங்கீடு முறையின் படியும் காவிரி நீரில் தனக்குரிய பங்கைப் பெறுவதற்கு தமிழ்நாட்டிற்கு உரிமை இருக்கிறது. ஒரு ஆறு உற்பத்தியாகும் நீர்பிடிப்பு - மேல் பகுதிக்கு எந்த அளவு உரிமை உள்ளதோ அதே அளவு வடிகால் பிரதேசத்திற்கும் உரிமை உண்டு. ஏனென்றால் ஆற்று நீர் பெருக்கெடுத்து, பெரும் வெள்ளமாகப் பாயும்பொழுது அதன் பாதிப்புகளையும் நாசகார விளைவுகளையும் வடிகால் பிரதேச மக்கள்தாம் எதிர்கொள்கின்றனர். சாதாரண காலங்களில் வடிகால் பிரதேசத்து மக்களுடைய பாசனத்துக்கு நீர்விட, நீர்ப்பிடிப்பு மேல்பகுதி மக்கள் மறுப்பார்களேயானால், வெள்ளப் பெருக்கின் போதும் அதை வடிகால் பகுதிக்குத் திறந்து விடக் கூடாது என்று மறுப்பதற்கு இவர்களுக்கு உரிமையுண்டு. எனவே, இரு பிரதேச மக்களுக்கு ஆற்று நீரில் சம உரிமை உண்டு. அதன்படி பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதுதான் இயற்கை நியதி.

கூடுதலான ஒரு விசயம்; இங்கே வடிகால் பிரதேச மக்கள் நீண்டகாலமாக ஆற்று நீரைப் பயன்படுத்தி வரும் பாரம்பரிய உரிமையும் உண்டு. இதுவும் தவிர, இரண்டு மாநிலங்களிடையிலான ஒப்பந்தப்படி ஆற்றுநீரைத் தேக்கி வைத்து புதிய அணைகள் கட்டுவதையும், புதிய பாசனப்பகுதிகளுக்கு விரிவுபடுத்துவதையும் மற்றொரு மாநிலத்தின் ஒப்புதலோடுதான் செய்யவேண்டும். அவ்வாறு தமிழகத்தின் ஒப்புதல் பெறாமலேயே கர்நாடகம் காவிரியின் கிளை ஆறுகள் மூன்றில் புதிய அணைக்கட்டுக்களைக் கட்டி, பாசனப்பகுதியை லட்சக்கணக்கான ஏக்கர் அளவுக்கு விரிவுபடுத்திக் கொண்டுள்ளது. அவற்றுக்கும் சேர்த்து இப்போது கர்நாடகம், காவிரி பாசனநீரில் உரிமை கோருகிறது. இது எந்த வகையிலும் நியாயமானதில்லை.

ஆகவே, எப்படிப் பார்த்தாலும், அதாவது இயற்கை நியதிப்படியும் சரி, இந்திய - சர்வதேச ஆற்றுநீர் பங்கீடு சட்ட நியதிகளின்படியும் சரி, தமிழகத்தின் தரப்பில்தான் நீதியும் உரிமையும் இருக்கிறது. எனவேதான் இயற்கை நியதி, சட்ட நியதி ஆகிய எதற்கும் கட்டுப்பட மறுத்து, காவிரிப் பிரச்சினையைத் தீர்க்கவே கூடாது என்று கடந்த 30 ஆண்டுகளாக இழுத்தடிக்கும் வேலையில் மட்டுமே கர்நாடகம் குறியாக இருக்கிறது. தீர்க்கமான, சட்ட ரீதியான முடிவைப் பெற தமிழ்நாடு முயற்சிக்கும் போதெல்லாம் இரு தரப்பு அல்லது மத்திய அரசு உட்பட முத்தரப்பு பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணலாம் என்று கூறி இழுத்தடிக்கிறது. இவ்வாறு தீர்வு காணாமல் இழுத்தடிக்கப்படும் ஒவ்வொரு நாளும் கர்நாடகத்துக்கு சாதகமானதாகவே இருக்கிறது. இப்படியே இழுத்துக் கொண்டே போனால், ஒவ்வொரு ஆண்டும் கர்நாடகம் பாசனத்து நீரைப் பயன்படுத்தி, அணைகளில் இருப்பு குறைந்து போகும்; தமிழகத்திற்கு நீர் விட முடியாமல் போகும் அல்லது நீர்வரத்து உறுதியில்லாத நிலையில் தமிழகத்தில் பயிரிடும் பகுதி குறைகிறது அல்லது தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை பெய்து அணைநீர் தேவையில்லாமல் போகிறது அல்லது வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. இவை எதுவானாலும் கர்நாடகத்துக்கு சாதகமாகி விடுகிறது.

காவிரியில் தமிழகத்துக்குள்ள நியாய உரிமையைப் பெற்றுத் தரவேண்டியவை அரசியல் ரீதியாக மத்திய அரசும், சட்டரீதியாக உச்சநீதி மன்றமும்தான். ஆனால் இவை இரண்டுமே தமது கடமை - பொறுப்பைத் தட்டிக் கழிக்கவும், தீர்வு காண வேண்டிய கடமை - பொறுப்பை ஒன்றுக்கொன்று தள்ளி விட்டு நழுவிக் கொள்ளவும் முயலுகின்றன. சுமார் 15 ஆண்டுகள் அரசியல் தீர்வு காண முடியாத நிலையில் ஒரு நடுவர் மன்றத்தை அமைக்கும்படி 1986-இல் மத்திய அரசிடம் தமிழக அரசு கோரியது. அக்கோரிக்கையும் கிடப்பில் போடப்பட்ட நிலையில், தமிழகத்தின் காவிரி நீர் பாசனப்பகுதி விவசாயிகள் சார்பாக உச்சநீதி மன்றத்திடம் நிவாரணம் கோரி வழக்குப்

தொடர்ச்சி 9-ஆம் பக்கம்

www.padippakam.com

# புலிகளின் இலட்சியம் புதை குழிக்குப் போனது

இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையில் கடந்த பிப்ரவரி 22-இல் ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் திட்டமிட்ட வேகத்தில் இல்லையானாலும் திட்டமிட்ட திசையில்தான் செல்லுகிறது. கடந்த செப்டம்பரில் இருதரப்புக்குமிடையே தாய்லாந்தில் நடந்த நேரடிப் பேச்சு வார்த்தை வெற்றிகரமாக அமைந்ததாக அவர்கள் அறிவித்தனர்.

இரு தரப்பும் ஒன்றை ஒன்று புரிந்து கொண்டதோடு, ஒன்று மற்றொன்றின் கவலைகளையும் புரிந்து கொண்டுள்ளதாக அறிவித்தனர். உள்நாட்டுப் போரில் இரு தரப்பும் பிடித்து வைத்துள்ள கைதிகளை கைமாற்றிக் கொள்வது, இடம் பெயர்ந்த மக்களை மீண்டும் குடியமர்த்துவது, போர் நிறுத்தத்தை பராமரிப்பது, இவற்றுக்காக கூட்டுக் கண்காணிப்புக் குழு அமைப்பது என்று முடிவாகியுள்ளது. போரில் சிக்குண்ட தமிழர் பிரதேசங்களில் மனிதாபிமான நடவடிக்கைகளையும் மறுநிர்மாண பணிகளையும் மேற்கொள்வது, அதற்கான பணிகளை முடிவு செய்து அமலாக்கக் கூட்டுப் பணிக்குழு அமைப்பது என்று முடிவாகியுள்ளது.

பேச்சு வார்த்தை முடிந்த கையோடு செய்தியாளர்களிடம் பேசிய புலிகளின் பிரதிநிதியும் அரசியல் ஆலோசகருமான ஆண்டன் பாலசிங்கம் பின்வருமாறு கூறினார்: ''தனித்தமிழீழம் என்ற கோரிக்கைக்காக விடுதலைப் புலிகள் செயல்படவில்லை. தமிழர்களுக்கான தனித்தாயகத்துக்கும் சுயநிர்ணய உரிமைக்கும்தான் பாடுபடுகிறோம்.

''தமிழர் பிரதேசத்துக்குத் தன்னாட்சி என்பது கூட்டாட்சியின் கீழ் தன்னாட்சி என்றும் பிரதேசத் தன்னாட்சி என்றும் பொருள்படும். தனித் தாயகம் என்றால் தனிநாடு என்று பொருள் அல்ல. குறிப்பிட்ட பிரதேசத்தை அங்கீகரிப்பது என்று அர்த்தம். எங்களைத் தனி தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டும் என்றே வலியுறுத்துகிறோம். அதேசமயம் தமிழர்களுக்கு மாநிலத்தில் தன்னாட்சி வழங்கப்படாவிட்டால் அரசியல் சுதந்திரம், தனிநாடு ஆகியவற்றுக்குப் போராடுவதே கடைசி வழி. தமிழ் மக்களின் விருப்பங்கள் பூர்த்தியாகும் வகையில் நிரந்தரத் தீர்வை நாங்கள் அடையும் வரையில் ஆயுதங்களைக் கைவிடும் எண்ணம் இல்லை.

''தமிழர் பகுதிக்கான நிர்வாக அமைப்பு குறித்து விரிவாகப் பேசவில்லை. ஆனால் அதற்கான அடித்தளத்தை அமைத்திருக்கிறோம். இடைக்கால நிர்வாக அமைப்பு ஒரு தீர்வல்ல. ஒரு வழிமுறை. நிர்வாகத்தில் புலிகளுக்கு மிகப் பிரதானப் பங்கு அளிக்கப்படவேண்டும்.''

''திராவிட நாடு'' கோரிக்கையைக் கைவிடுவதாக அறிவித்தபோது தி.மு.க. தலைவர் அண்ணாதுரை பேசியதை வரலாறு அறிந்தவர்கள் மறந்திருக்கமாட்டார்கள். ''திராவிட நாடு'' கோரிக்கையைத்தான் கைவிட்டிருக்கிறோம்; ஆனால், அதற்கான அடிப்படை அப்படியேதான் நீடிக்கிறது என்றார், அண்ணாதுரை. இப்போது தனிநாடு - தனிஈழம் கோரிக்கையைக் கைவிடுவதாகக் கூறிவிட்டு அதற்கு ஆண்டன் பாலசிங்கம் கொடுத்திருக்கும் விளக்கம் அப்போது அண்ணாதுரை பேசியதன் இன்னொரு பதிப்புதான் என்பதில் சந்தேகமில்லை.

விடுதலைப் புலிகளைப் பொருத்தவரை, இனி எதிர்காலத்தில் இலங்கை அரசுடன் நடத்தவிருக்கும் பல்வேறு பேரங்களில் கூடுதலான ஆதாயங்களைப் பெறுவதற்காக அவ்வப்போது இந்தத் தனி ஈழம் கோரிக்கை எழுப்பப்படலாம். மற்றபடி, தனிநாடு - தனிஈழம் மட்டுமல்ல; ஈழத் தமிழினத்தின் சுயநிர்ணய உரிமைக்காகவும் கூட உண்மையாகப் போராடப் போவதில்லை என்பது மட்டும் உறுதியாகி விட்டது.

''தமிழீழத் தாயகம் - புலிகளின் தாகம்'' என்ற அவர்களின் இலச்சினை முழக்கத்துக்கு இதுவரை தனிநாடு - தனி ஈழம் என்றுதான் பொருள் கூறி வந்தார்கள். இப்போது புது விளக்கம் தருகிறார்கள். ''ஈழத் தமிழர்களை ஒரு தனி தேசிய இனமாக அங்கீகரிப்பது; இலங்கையின் வட-கிழக்கு மாகாணங்களை ஈழத் தமிழர்களின் தாயகமாக ஏற்பது; பிரதேச சுயாட்சியுடன் கூடிய சுயநிர்ணய உரிமை'' - இவைதான் புலிகளின் இலச்சினை முழக்கத்துக்குப் பொருள் என்பதாக ஆண்டன் பாலசிங்கம் பேசி வருகிறார்.

ஆனால் இதன்மூலம் தேசிய இன சுயநிர்ணய உரிமைப் போராட்டத்துக்கு விடுதலைப் புலிகள் துரோகம் செய்கின்றனர் என்பதுதான் உண்மை. பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையைப் பெறுவதுதான் தேசிய இனப் போராட்டம் முன்வைக்கும் கோரிக்கையாகும். இதற்கு மாறானது, முரணானது, துரோகத்தனமானதுதான் பிரதேச சுயாட்சி என்று மார்க்சியம் - லெனினியம் தெளிவாகவே கூறுகிறது.

எந்தவொரு தேசிய இனமும் வேறொரு இனத்



**தாய்லாந்து சமாதான பேச்சு வார்த்தை: தனித்தமிழ் ஈழக் கோரிக்கையைக் கைவிட்டு இலங்கை அமைச்சர் பீரிசுடன் கைகுலுக்கும் பாலசிங்கம்.**



படிப்பகம்

www.padippakam.com

தோடு இணைந்து வாழுவதும், அல்லது பிரிந்து போவதும் அந்தத் தேசிய இனத்தின் விருப்பத்தைப் பொறுத்தது. அதற்காக, பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்துக் கொண்டு இரு தேசிய இனங்களும் இணைந்திருக்கும் நிலையை ஏற்பதுதான் சரியானது. அதற்கு மாறாக பிரதேச சுயாட்சியை ஏற்று அமலாக்கா விட்டால் சுயநிர்ணய உரிமைக்கு, அதாவது பிரிந்து போகும் உரிமைக்கு மீண்டும் போராடுவோம் என்று அறிவித்திருக்கிறார், பாலசிங்கம். இதற்கும் ''மாநில சுயாட்சி அல்லது மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் தரவேண்டும்; இல்லையானால் பிரிவினைப் போராட்டம் வெடிக்கும் அல்லது தனித் தமிழகத்துக்கான கோரிக்கை வலுக்கும்'' என்று திராவிடக் கட்சிகள் அவ்வப்போது சவடால் அடிப்பதற்கும் வேறுபாடில்லை.

கடந்த 20 ஆண்டுகளாக விடுதலைப் புலிகளும் அவர்களின் ஆதரவாளர்களான இந்தியத் தமிழினவாதிகளும் என்ன கூறிவந்தார்கள்? ஈழ தேசிய இனப் பிரச்சினைக்குத் தனிநாடு - தனிஈழம் காண்பதுதான் ஒரே தீர்வு; வேறு எந்தத் தீர்வும் இருக்கவும் முடியாது; அப்படி வேறெதையும் ஏற்கவும் முடியாது; இனிமேலும் சிங்களனும் தமிழனும் ஒரே நாட்டில் வாழவே முடியாது; அந்த அளவு பகை முரண்பாடு ஏற்பட்டு, அது நிரந்தரமாகி விட்டது என்று சாதித்தனர். சில மார்க்சிய - லெனினியக் குழுக்களும் கூட அப்படித்தான் வாதிட்டன.

ஆனால், புதிய ஜனநாயகம் மற்றும் அதன் சார்பு அமைப்புகள் மட்டுமே முற்றிலும் மாறான, வேறொரு மதிப்பீட்டையும் நிலைப்பாட்டையும் முன்வைத்து 20 ஆண்டுகளாக வாதாடி வந்தன. அதாவது, ஈழத்தமிழின விடுதலைப் போராட்டம் உடனடியாக முடிவுக்கு வரக் கூடியதில்லை. நீண்ட காலம் நடக்கக் கூடியது. அதன் நீண்ட கால வளர்ச்சிப் போக்கில் ஒடுக்கும் சிங்கள தேசிய இனம், ஒடுக்கப்படும் ஈழத் தமிழினம் இரண்டு தரப்பிலும் ஒட்டுமொத்த இலங்கை மற்றும் உலக அளவிலும் பாரிய மாற்றங்கள் நிகழக் கூடும். ஈழத் தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை சிங்கள தேசிய இனத்தின் ஒரு பகுதி ஏற்கக்கூடும். அதேபோல ஈழத்தமிழினமும் பிரிந்துபோவது, தனிநாடு காண்பதுதான் ஒரே தீர்வு என்பதைக் கைவிடக்கூடும். சிங்கள தேசிய இனத்தோடு சேர்ந்து



வாழ்வதை ஒப்புக் கொள்ள நேரிடும் என்று புதிய ஜனநாயகம் அமைப்பினர் வாதிட்டு வந்தோம்.

அதற்காக, ஈழ விடுதலைப் போரைத் தொடர்வது கூடாது; நிறுத்த வேண்டும் என்றும் வாதிடவில்லை. மாறாக இப்போரை உறுதியாகவும் சரியான திசைவழியில் - சரியான தலைமையில் நடத்துவது அவசியம். ஈழ விடுதலைப் போரின் இறுதி இலக்கு பிரிந்து போவதாகத்தான் இருக்க வேண்டும், வேறு தீர்வே கிடையாது என்றிருக்க முடியாது. சிங்கள தேசிய இனத்திடமிருந்து, ஒன்றுபட்ட இலங்கை நாட்டிலிருந்து பிரிந்து போவதா அல்லது இணைந்திருப்பதா



என்பதை உடனடியாகத் தீர்மானிக்க முடியாது. சுயநிர்ணய உரிமைக்கான ஈழ விடுதலைப் போரின் நீண்ட வளர்ச்சிப் போக்கின் இறுதியில் பிரிந்து போவதா, இணைந்திருப்பதா என்கிற இரண்டில் ஒன்று முடிவாகும். ஈழத் தமிழினம்தான் - விடுதலைப் புலிகள் போன்று ஏதாவது ஒரு அமைப்பு அல்ல - அதைத் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கவேண்டும் என்றும் வாதிட்டு வந்திருக்கிறோம்.

ஆனால், புலிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் என்ன பேசி வந்திருக்கிறார்கள்? ஈழப் போரில் புலிகள் எந்தவொரு சண்டையில் வெற்றி பெற்றாலும், ''இதோ விரைவில் ஈழம் மலரப் போகிறது; உலகத் தமிழருக்கு ஒரு தாயகம் பிறக்கப் போகிறது'' என்கிற கனவைப் படைத்தார்கள். கடைசியாக, ஆனையிறவு போரில் வென்று யாழ்ப்பாணத்தை புலிகள் முற்றுகையிட்ட போது, ''நாளையே ஈழ விடுதலையைச் சாதிக்கப் போகிறோம், யாழ் கோட்டையில் புலிகளின் கொடி பறக்கப் போகிறது!'' என்று கூறி தனிஈழ உதயத்துக்கு கட்டியம் கூறினார்கள். அந்த நிலையிலும் இழுபறி நீடிக்கும், தனி ஈழம் அமைவது நிச்சயமாகிவிடவில்லை என்பதை புதிய ஜனநாயகம் சுட்டிக் காட்டியது. தனிஈழம் அமையக் கூடாது என்பதற்காக அப்படி எழுதவில்லை. எதார்த்தம் அப்படி இல்லை என்கிற உண்மை மதிப்பீட்டையே எழுதினோம்.

''அப்போதே சொன்னோம் பார்த்தீர்களா? இதோ தனிஈழம் அமையவில்லை! தனிநாடு - தனிஈழம் என்கிற கோரிக்கையைப் புலிகள் கைவிட்டு விட்டார்கள் அல்லவா?'' என்கிற நோக்கில் - வாத அடிப்படையில் மேற்கண்டவற்றை நாம் எழுதவில்லை. வேறு இரண்டு உண்மைகளை எடுத்து வைக்கவே இங்கு இதை எழுதுகிறோம்.

ஈழத் தமிழினப் பிரச்சினையில் புலிகள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களால் முன் வைக்கப்பட்ட ''தனிநாடு - தனிஈழம்'' என்கிற தீர்வுக்கு சரியான மதிப்பீடு - அக்கறையின் காரணமாக, வேறுபட்ட - மாறுபட்ட தீர்வுகளை முன் வைத்த ''புதிய ஜனநாயகம்'' அமைப்பினர் மீது அவர்கள் என்னவெல்லாம் அவதூறு பரப்பி வந்தனர் என்று பழைய ஏடுகளைப் புரட்டிப் பாருங்கள். ''புதிய ஜனநாயகம்'' அமைப்பினர் உண்மையில் ஈழ இன விடுதலையை ஆதரிக்கவில்லை என்றும் ஈழ இனப் பிரச்சினையில் ''புதிய ஜனநாயகம்''



படிப்பகம்

அமைப்பை அதன் எதிரிகளான ''சோ'' முதலியவர்களோடு இணைவைத்தும், பார்ப்பன முத்திரை குத்தி இழித்தும் அவதூறு பேசி வந்தனர்.

எந்த அடிப்படையை முன்வைத்து ''புதிய ஜனநாயகம்'' அமைப்புக்கு எதிராக புலிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் அவதூறு பேசினரோ, அதே அடிப்படையை - தனிஈழம், தனிநாடுதான் ஒரே தீர்வு என்பதை அவர்கள் கைவிட்டு விட்டனர். அதேசமயம் இந்த மாற்றத்துக்கு என்ன காரணம் கூறுகிறார்கள்? ஒருபுறம் புறநிலைமைகள் மாறிவிட்டன, சிங்கள - தமிழின மக்கள் அமைதியை விரும்புகிறார்கள், போரினால் நாசமடைந்த ஈழப் பொருளாதாரத்தை புனர்நிர்மாணம் செய்வதும், ஈழத் தமிழர்களுக்கு மறுவாழ்வளிப்பதும் உடனடித் தேவையாக உள்ளது என்கின்றனர். மறுபுறம், இராணுவ ரீதியில் மட்டுமல்லாது, அரசு தந்திரம் - அரசியலில் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மேதாவித்தனத்துக்குக் கிடைத்துள்ள வெற்றிதான் தற்போதைய சமாதான முன்னெடுப்புகள் என்றும் வாதிடுகின்றனர்.

புறநிலைமைகளில் மாற்றங்கள் நிகழும்; அரசியல், பொருளாதார, இராணுவ நெருக்கடிகள் ஏற்படும்; இவற்றின் பிரதிபலிப்புகள் சிங்கள - தமிழின மக்களிடையே ஏற்படும் என்கிற மதிப்பீடு காரணமாகத்தான், புலிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் முன்வைத்திருந்த ''தனி ஈழம் தான் ஒரே தீர்வு'' என்கிற நிலைப்பாட்டை ''புதிய ஜனநாயகம்'' அமைப்பு ஏற்க மறுத்தது. இந்த உண்மையைப் பார்க்க மறுத்தும், எதிர்த்தும் சுத்த இராணுவக் கண்ணோட்டத்தையும், தமிழ் தேசிய இனவெறியையும், பாசிச அரசியலையும் புலிகள் மேற்கொண்டிருந்தனர். இப்போது எதார்த்தமான - புறவயமான மாற்றங்கள் என்பதன் மீது ''பழிபோட்டு'' நழுவிக் கொள்கின்றனர்.

இதைவிட பாரிய மோசடிதான், பிரபாகரனின் அரசியல் - அரசுதந்திர மேதாவித்தனம்தான் தற்போதைய சமாதான முன்னெடுப்புகள் என்கிற வாதம். புலிகள் - இலங்கை அரசாங்கத்துக்கிடையிலான சமாதான முயற்சிகளை கடுமையாக எதிர்ப்பதாகக் கூறப்படும் அதிபர் சந்திரிகா கூட புலிகளின் தற்போதைய அறிவிப்பை வரவேற்றுள்ளார். அதாவது பிரபாகரன் - ரணில் மட்டுமல்ல; சந்திரிகாவும் கூட இந்தச் சமாதான முன்னெடுப்புகளை உண்மையில் ஆதரிப்பவர்கள்தாம். ''சந்திரிகாவின் எதிர்ப்பு'' என்பதுகூட ரணில் - சந்திரிகாவுக்கு இடையிலான அரசியல் போட்டி - முரண்பாடுகளின் வெளிப்பாடுதான். இந்தியாவில் எல்லா ஓட்டுக் கட்சிகளும் உலகமயமாக்கம் - தனியார்மயமாக்கம் - தாராளமயமாக்கம் என்கிற புதிய பொருளாதாரக் கொள்கைகளை ஏற்கின்றன; ஆனால் அது அமலாகும்போது எதிர்க் கட்சிகள் சில சலசலப்புக்களை ஏற்படுத்துகின்றன. அதுபோலத்தான் சந்திரிகாவின் புலிகளுடனான பேச்சு வார்த்தை எதிர்ப்பும்.

சந்திரிகா உட்பட இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் ஈழ இனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதையே விரும்புகின்றனர். காரணம், உள்நாட்டு - வெளிநாட்டு நிர்பநதங்கள். குறிப்பாக, அமெரிக்க மேல்நிலை வல்லரசின் நெருக்குதல்கள்தாம் காரணமே தவிர, இவர்களின் சொந்த விருப்பு வெறுப்பு அல்ல என்பதுதான் உண்மை.



**இனப் பிரச்சினைக்கு சமாதான தீர்வு காண்பதிலும், இலங்கையை மறுகாலனியாக்குவதிலும் ஓரணியில் நிற்கும் சந்திரிகாவும், ரணிலும்: அமெரிக்க விசுவாசிகள்!**

''இதோ! நாளையே தமிழீழம் மலரப் போகிறது'' என்று நேற்று வரை மாயையை ஏற்படுத்தி வந்த விடுதலைப் புலிகளும் அவர்களின் ஆதரவாளர்களும், இன்று, ஈழத் தமிழினப் பிரச்சினைக்கு அமைதிவழியில் நிரந்தரத் தீர்வு ஏற்படப் போகிறது என்கிற புதிய நம்பிக்கையை விதைக்கிறார்கள். குறிப்பாக, புரிந்துணர்வு ஒப்பந்தமும், தொடரும் சமாதான முன்னெடுப்புகளும் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மிகப் பெரும் சாதனை என்று பிரச்சாரம் செய்கின்றனர்.

ஆனால், இந்த சமாதான முன்னெடுப்புகளின் பின்னணியில் இலங்கை முழுவதற்கும், குறிப்பாக ஈழத் தமிழினத்தின் சுயநிர்ணய உரிமைக்கு எதிரான, பல பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய பல்வேறு ஒப்பந்தங்களை விடுதலைப் புலிகளின் மறைமுக ஒப்புதலோடு இலங்கை அரசு கைச்சாத்திட்டு வருகிறது.

''1. அமெரிக்காவுடன் சுதந்திர வான்வெளி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் அமெரிக்காவின் சகல விமானங்களும் எந்தத் தேவைகளுக்காகவும் இலங்கையின் வான்வெளி எல்லைக்குள் பறந்து செல்லலாம். எந்த விமான நிலையத்தையும் பயன்படுத்தவும் எரிபொருள் நிரப்பவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2. திருகோணமலை நிலத்தடியில் உள்ள 100 எண்ணெய் குதங்களில் 15-ஐ இந்தியப் பெட்ரோலியக் கூட்டுத் தாபனத்திற்கு கொடுக்கவும், இலங்கையில் 100 பெட்ரோல் நிரப்பு விற்பனை நிலையங்களை நடத்தவும் புதுதில்லியில் இம்மாதம் கைச்சாத்தாகி உள்ளன.

3. இலங்கையில் பயங்கரவாத ஒழிப்புக்கு இராணுவ ஒத்துழைப்பு தரக்கூடிய கடல் பிராந்திய ஒப்பந்தம் ஒன்று சீனாவுடன் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கையின் கடற்பரப்பில் ஆழ்கடல் மீன் பிடிப்பதற்கும் சீனாவுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

4. ஐரோப்பிய நாடுகளில் இருந்துவரும் இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புவதற்கான ஒப்பந்தம் ஒன்று அண்மையில் பெல்ஜியத்தின் தலைநகரான பிரஸெல்ஸ்சில் கைச்சாத்திடப்பட்டது. இதன் காரணமாக, மூன்று லட்சம் இலங்கையர்கள் உடன் திருப்பி அனுப்பப்பட உள்ளனர்.

5. மேலும், அடுத்த மாதத்தில் அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட உள்ளது. இதன் மூலம் இராணுவ ஆயுத வழங்கல் - பயிற்சி, ஆலோசனைகள் அமெரிக்காவிடமிருந்து திட்டவட்டமானதாகப் பெறப்படும்.

6. இந்தியாவில் இலங்கையின் அதிரடிப்படைப் போலீசாருக்கு விசேட பயிற்சி வழங்கப்பட இணக்கம் காணப்பட்டுள்ளது. இதன் மூலம் வடக்கு கிழக்கிலிருந்து வரும் அதிரடிப்படைப் போலீசார் நவீன பயிற்சியும் படைக்கலன்களும் பெறுவார்கள்.

www.padippakam.com

7. ஏற்கனவே செய்து கொள்ளப்பட்டு நடைமுறையில் இருந்து வரும் இலங்கை - இந்திய வர்த்தக ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்படும்.

8. தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்குமிடையில் பாரிய பாலம் அமைக்கப்பட்டு திரிகோணமலைக்கான தரை வழி நெடுஞ்சாலை அமைக்கப்படும். திரிகோணமலை புதிய நிர்மாணம் செய்யப்படும். இது இந்தியாவால் மேற்கொள்ளப்படும். அதற்கான இணக்கம் காணப்பட்டுள்ளது.

9. காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை இந்தியாவிடம் கையளிக்கப்பட உள்ளது. அதன் மூலம் காங்கேசன் துறை துறைமுகமும் இந்தியாவிற்கு கையளிக்கப்படும்.

10. அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஜப்பான் ஆகியவற்றுடன் மேலும் விரிவான பொருளாதார வர்த்தக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுவதற்கு திட்டமிடப்பட்டு வருகின்றன.

[ஆதாரம்: ''புதிய பூமி'' (இலங்கையிலிருந்து வெளிவரும் அரசியல் பத்திரிகை) ஜூன் - ஜூலை 2002]

இந்த ஒப்பந்தங்கள் அனைத்தும், ஈழத்தோடு இலங்கை நாடு முழுவதையும் மறுகாலனியாக்குவதும், அமெரிக்க மேலாதிக்கத்தின் கீழ் வைப்பதும் ஆகும். கடந்த சில மாதங்களில் இலங்கை அதிபர் சந்திரிகாவும் பிரதமர் ரணிலும் அடுத்தடுத்து அமெரிக்கப் பயணம் மேற்கொண்டு அதிபர் புஷ்ஷை சந்தித்து அமெரிக்காவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை செய்து கொண்டு, ''மில்லினியம் சேலஞ்ச்'' திட்டத்தின் கீழ் பலகோடி டாலர் உதவி பெற வழிவகுத்தனர். இலங்கையின் அரசியல், இராணுவ பொருளாதார நலன்களை அமெரிக்க அதிபரின் காலடியில் சமர்ப்பித்தனர்.

சிங்களப் பேரின ஒடுக்குமுறையில் இருந்து ஈழத் தமிழினத்தை அமெரிக்காவின் மறுகாலனியாதிக்கம் மற்றும் மேலாதிக்கத்தின் கீழ் வைப்பதைத்தான் விடுதலைப் புலிகள் சாதித்திருக்கின்றனர். இதற்குக் கைம்மாறாக, ஈழத்தைப் புனர்நிர்மாணம் செய்வதற்கு, ஈழத் தமிழர்களுக்கு மறுவாழ்வளிப்பது என்கிற பெயரில் ஏகாதிபத்திய நிவாரணத் தொகையாக சில ஆயிரம் கோடி ரூபாய்கள் பெறப் போகிறார்கள். இடைக்கால நிர்வாகத்தினூடாக ஈழத்தை ஆளும் உரிமை பெறுவார்கள். ஆனால் ஈழத் தமிழர்களின் வாழ்வில் அமைதி மட்டும் திரும்பாது.

● ஆர்.கே.

# பட்டினியில் விவசாயிகள் பகற்கொள்ளையில் ஓட்டுண்ணிகள்

தனியார்மயம் - தாராளமயத்தை விரைவாக அமல்படுத்துவதன் மூலம் தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாக மாற்றப் போவதாக முழங்கினார் ஜெயலலிதா. ஆனால் நிலைமையோ 'உள்ளதும் போச்சுடா நொள்ளக் கண்ணா' என்பது போலாகி விட்டது. பல இலட்சக்கணக்கான விவசாயிகளும், நெசவாளிகளும் ஏற்கனவே குடித்துக் கொண்டிருந்த கால் வயிற்றுக் கஞ்சிக்கும் வழியின்றி பட்டினி சாவினை நோக்கி விரட்டப்பட்டுள்ளனர்.

திருச்சி, தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் ஐந்தரை லட்சம் ஏக்கர் குறுவை சாகுபடியும், பன்னிரண்டரை லட்சம் ஏக்கர் சம்பா சாகுபடியும் இவ்வாண்டு நடைபெறவில்லை. தண்ணீரில்லாமல் காவிரி வறண்டு போயிருப்பதாலும், சென்ற போகத்தில் விளைய வைத்த நெல்லை அரசு கொள்முதல் செய்யாததாலும் கடும் பஞ்சமும், வறட்சியும் வறுமையும் அம்மக்களின் மேல் திணிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்று சிறப்பிக்கப்பட்ட தஞ்சையில் விவசாயிகள் எலிக்கறியையும், அல்லிக் கிழங்கையும் தின்று காலம் தள்ளுகின்றனர்.

இந்த அவலத்தைக் கண்டும் அதில் எள்ளளவும் அக்கறையற்ற பாசிச ஜெயா அரசு பொடா சட்டத்தைக் காட்டி எதிர்கட்சிகளை ஒடுக்குவதன் மூலம் மக்களின் கவனத்தைத் திசை திருப்புகிறது.

இன்னொருபுறம், 'விவசாயத் தொழிலாளர்களுக்கான சிறப்பு வேலை வாய்ப்புத் திட்டம்' என்ற பெயரில் ரூ. 164.18 கோடி நிதியை ஒதுக்கி விவசாயிகளின் கண்ணீரைத் துடைப்பதாக கவர்ச்சிகரமாக அறிவித்துள்ளார் ஜெயலலிதா. இத்திட்டமும் எரிகிற வீட்டில் பிடுங்கிய வரை ஆதாயம் என்பதுபோல் ஆளும் கட்சி பொறுக்கிகளும், அதிகாரிகளும் கொள்ளையடிக்க உதவியதே தவிர, மக்களைச் சென்று சேரக் கூட இல்லை என்பதை திருவாரூர் - நாகை மாவட்டங்களில் கட்டிமேடு, கொக்கலாடி, கொற்கை, புத்தூர், ஓடாச்சேரி, திருவாய்மேடு, மனைக்குடி, அருந்தவம்புலம் ஆகிய கிராமங்களில் மக்களைச் சந்திக்கும்போது அறிந்து கொள்ள முடிந்தது.

**வறட்சி நிவாரணத் திட்டம்: கரைவேட்டிகள் கொள்ளையடித்தது போக விவசாயிக்கு எஞ்சியது எலிக்கறிதான்.**



www.padippakam.com

பெரும்பாலான விவசாய திட்டங்கள் மத்திய - மாநில அரசுகளின் கூட்டு நிதியில்தான் செயல்படுத்தப்படுகின்றது. தமிழக அரசு அறிவித்திருக்கும் 'விவசாயத் தொழிலாளர் வேலை வாய்ப்புத் திட்டம்' கூட புதிய திட்டமல்ல. ஏற்கனவே மத்திய அரசு 'சுவர்ண கிராமி ரோஜ்கார் யோஜனா' என்ற பெயரிலும் வேறு சில பெயர்களிலும் செயல்படுத்தி வருவதுதான். இதற்கு உலக வங்கி மற்றும் சில தனியார் (டோனிடா) நிதி நிறுவனங்களும் உதவி வருகின்றன. இப்போது ஜெயா அரசு செய்திருப்பதெல்லாம் பழைய திட்டத்தையே மீண்டும் பெயரை மாற்றி அறிவித்து மக்களை முட்டாளாக்கியிருப்பதுதான். உண்மையில் மாநில அரசின் நிதி வெறும் பத்து சதம்தான் என்று அம்பலப்படுத்துகிறார் திருவாரூர் பகுதி தி.மு.க. செயலர் கல்யாணம்.

இத்திட்டம் ஜூன் முதல் செப்டம்பர் மாதம் வரை நடைமுறைப்படுத்தப்படும். இதன்படி ஒவ்வொரு ஒன்றியத்துக்கும் 80 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது. குளம் தூர் வாருவது, களம் கட்டுதல் வாய்க்கால் சுத்தம் செய்வது, கட்டிடம் கட்டுவது, காட்டாமணக்கு செடிகளை அழிப்பது முதலான பணிகள் இத்திட்டத்தின் கீழ் வருகிறது. இதில் பங்கேற்கும் விவசாய தொழிலாளர்களுக்கு ரூ. 54/- தினக் கூலியாகத் தரப்படுகிறது.

இத்திட்டப் பணிகள் நடைபெறுகிற எந்த ஊரில் சென்று விசாரித்தாலும், ''மூணு நாள் வேலை செய்திருக்கிறோம். இன்னும் இரண்டு நாள் முடிஞ்சுடும். ஐம்பது ஐம்பது பேராக பிரிஞ்சு நூறு பேர் இரண்டு குளத்தைத் தூரெடுத்தோம். அதோட வேலை முடிஞ்சது. இனி சும்மா இருக்க வேண்டியதுதான்'' என்று உண்மையைப் போட்டு உடைக்கின்றனர் விவசாயிகள். செப்டம்பர் இறுதி வரை வேலை என்பது எங்கும் இல்லவே இல்லை.

பதினைந்து இலட்சம் விவசாயக் கூலி தொழிலாளர்களும் பத்து இலட்சம் சிறு விவசாயிகளும் பரிதாபகரமான நிலைமையில் வாடும்போது, ஒரு பஞ்சாயத்துக்கு நூறு பேர், ஐந்து முதல் பத்து நாள் வேலை என்பது யானை பசிக்கு எள்ளுருண்டை கொடுத்த கதைதான். மொத்தத்தில் 50,000 முதல் ஒரு லட்சம் பேருக்கு அதிகபட்சமாக பத்து நாள்தான் வேலை என்பது ஒருபுறமிருக்க, அதிலும் அதிகாரிகள் அடிக்கும் கொள்ளைக்கு அளவேயில்லை.

பஞ்சாயத்து தலைவர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், மாவட்ட கவுன்சிலர்கள் மூலமாக இத்திட்டப் பணிகளை அரசு செயல்படுத்துகிறது. அவற்றிலும் அ.தி.மு.க. பஞ்சாயத்து ஒன்றியம், மாவட்டங்களுக்குத்தான் முன்னுரிமை.

கொக்கலாடி பஞ்சாயத்து தலைவர் இந்திரா, இப்போதுதான் போடப்பட்ட நடுத்தெரு ரோட்டையே, புதிய திட்டம் என்ற பெயரில் வெறும் ரூ.4000 மட்டும் செலவு செய்துவிட்டு திட்டத் தொகை ரூ. 16 ஆயிரத்தில் ரூ. 12 ஆயிரத்தைச் சுருட்டி விட்டார். குளம் தூர் வாருவதாக நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக் கொண்டு, சொந்த குளத்தைத் தூர் வாரி விட்டு ஒதுக்கீடு பெற்ற அரிசியைக் கூலியாக கொடுத்திருக்கிறார். பாலன் என்ற ஒப்பந்தக்காரர் மூலம் வாய்க்கால் வெட்டியதற்கு இருபத்தைந்தாயிரம் கூட செலவு செய்யவில்லை. ஆனால் ஒதுக்கப்பட்ட நிதி ஒன்றரை லட்சம் என்று இந்த பகற்கொள்ளையை மக்கள் அம்பலப்படுத்துகின்றனர்.



**வேலையில்லை; வாழ்வில்லை; தரிசாகிக் கிடக்கும் நஞ்சை நிலத்தில் கலங்கித் தவிக்கும் கூலி விவசாயி.**

கடும் வறட்சி காலத்தில் இந்த வேலையாவது கொடுக்கப்படுகிறதே என்று பூரித்துப் போகிறார்கள் பஞ்சாயத்துத் தலைவர்கள். உண்மை நிலைமையோ இதற்கு நேர்மாறாகவே உள்ளது. ஆண் - பெண் வேறுபாடு இல்லாமல் எல்லா விவசாயத் தொழிலாளர்களுக்கும் ரூ. 54/- கூலியானது 5 கிலோ அரிசியாகவும், ரூ. 25.70-ஐ பணமாகவும் பிரித்துத் தரப்படுகிறது. பல ஊர்களில் அரிசி குறைவாக உள்ளதாகக் கூறி இரண்டு மூன்று கிலோ அரிசியைத் தருவதில்லை. சில பஞ்சாயத்துகளில் வேலையை மட்டும் வாங்கிக் கொண்டு பணத்தை இரண்டு நாட்களுக்கு பிறகே தருகிறார்கள்.

ஆளும் கட்சி, அதிகாரிகளின் இந்த ஊழல்களைக் கண்டபிறகும் ஏதும் செய்ய முடியாத இயலாமையை ''நான் ஒருநாள் குளம் வெட்ட போனேன். நாங்க 43 பேர் குளம் வெட்டினோம். ஆனா நோட்டுல 63 பேர் என்று எழுதியிருந்தது. 43 பேருக்கு ரூ. 50/- கூலியைக் கொடுத்து அனுப்பிட்டாங்க! மீதி என்னாச்சுன்னு அவங்களுக்குத் தான் தெரியும்'' என்று ஆதங்கத்தோடு வெளிப்படுத்துகிறார் வேதையன் என்ற புத்தூர் கிராம விவசாயி.

இந்தச் சந்தர்ப்பத்தைக் கூட தனக்கு சாதகமாக மாற்றிக் கொள்ள தவறவில்லை நிலவுடைமையாளர்கள். ''நாங்க பொம்பளைக்கு அறுபது ரூபாய், ஆம்பளைக்கு எழுபத்தைந்து ரூபாய் கூலி கொடுப்போம். இப்ப இந்த திட்டத்தில அரசே ஐம்பத்தைந்து ரூபாய்தான் தருது. இனி சம்பா வேலைக்கு தனியாரும் இதே கூலி ரூ. 55/-ஐதான் தருவோம். அதுக்கு இதுவே ஒரு முன் மாதிரி'' என்கின்றனர்.

1987-க்கு பிறகு நாடு முழுவதும் மிகப் பெரும் பஞ்சமென்று ஆங்கில பத்திரிக்கைகள் ஆய்வுக் கட்டுரைகள் எழுதுகின்றன. ஆனால் இதற்கு முன் ஏற்பட்ட பஞ்சம் வறட்சிகளுக்கும் இப்போது ஏற்பட்டிருக்கும் நிலைமைக்கும் முக்கியமான வேறுபாடு உண்டு. அது உலகமயமாக்கம் என்ற ஆக்டோபஸ் பிடியில் சிக்கி திவாலானதன் நேரடி விளைவாய் நம் நாட்டின் மீது திணிக்கப்பட்டுள்ளது என்பதுதான்.

உலகமயமாக்கத்தால் திவாலான அர்ஜென்டினாவின் வழியில் நமது நாட்டிலும் பாதிக்கப்பட்ட பல கோடி தொழிலாளர்களும், விவசாயிகளும் வீதியில் இறங்கி உணவுக் கலகம் செய்வார்கள். அந்த நாள் வெகு தொலைவில் இல்லை.

**- பு.ஜ. செய்தியாளர்கள், தஞ்சை.**

www.padippakam.com

**தலையங்கம் தொடர்ச்சி**

போட்டனர். தானே தீர்ப்புக் கூறுவதில் இருந்து நழுவிக் கொண்ட உச்சநீதி மன்றம் ஒரு மாதத்தில் நடுவர் மன்றம் அமைக்கும்படி மத்திய அரசுக்கு ஆணையிட்டது. 1990-இல் நடுவர் மன்றமும் அமைக்கப்பட்டது. இந்த முடிவுகளை ஏற்க மறுத்த கர்நாடகம், நடுவர் மன்றம் தீர்ப்புக் கூறுவதை 12 ஆண்டுகளாக இழுத்தடிக்கும் பல உத்திகளை மேற்கொண்டு வருகிறது.

நடுவர் மன்ற ஆய்வு - விசாரணைகள் பல ஆண்டுகள் நீடிக்கும் என்பதால் இடைக்கால நிவாரணம் கோரி நடுவர் மன்றத்தையே தமிழக அரசு அணுகியது. தனக்கு அதிகாரமில்லை என்று அது மறுத்தபோது, மீண்டும் உச்சநீதி மன்றப் படியேறி, அதன் ஆணை அடிப்படையில் இடைக்கால நிவாரணம் அளிக்கும்படி நடுவர் மன்றம் நிர்பந்திக்கப்பட்டது. அதன்படி ஆண்டுக்கு 205 கோடி கன அடி (டி.எம்.சி.) நீர் தமிழகத்துக்கு வழங்க வேண்டும் என்ற தீர்ப்பும் வந்தது. அதை ஏற்று அரசுப் பதவிதழில் வெளியிட்டு அமலாக்க வேண்டிய மத்திய அரசு அவ்வாறு செய்யாமல் கிடப்பில் போட எத்தணித்தது; நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை ஏற்க முடியாது எனக் கர்நாடக அரசும் ஒரு அவசரச் சட்டம் பிறப்பித்தது. மத்திய அரசு தானே முடிவெடுத்துச் செயல்படுவதற்குப் பதில் உச்சநீதி மன்றக் கருத்துக் கேட்டது. அரசிதழில் வெளியிடும்படி அது தீர்ப்புச் சொன்னதும் அவ்வாறே செய்த மத்திய அரசு, அதை அமலாக்க விழையவில்லை.

அடுத்த மூன்று ஆண்டு நல்ல மழை பெய்ததால் தமிழக ஆட்சியாளர்கள் (ஜெயா - சசி கும்பல்தான்) தமிழகத்தைக் கொள்ளையடிப்பதில் மூழ்கிப் போனார்கள். தமிழகத்தின் உயிராதாரப் பிரச்சினையை மறந்து போனார்கள். 1995-96-ஆம் ஆண்டு கடும் வறட்சி ஏற்படவே தமிழக அரசு உச்சநீதி மன்றத்தை அணுகியது. அதுவோ, நடுவர் மன்றத்திடம் போகும்படி கூறியது. நடுவர் மன்றமோ 30 டி.எம்.சி. நீர் கோரியதற்கு, 11 டி.எம்.சி. தரும்படி தீர்ப்புக் கூறியது. கர்நாடகமோ நடுவர் மன்றத்தின் இந்தத் தீர்ப்பை அமலாக்க மறுத்து கர்நாடகாவில் வாழும் தமிழர்களுக்கு எதிராக கலவரம் - தாக்குதலில் இறங்கியது. தமிழக அரசு மீண்டும் உச்ச நீதி மன்றப் படியேறியது. உச்சநீதி மன்றமோ, மீண்டும் தீர்ப்புக் கூறாமல், அரசியல் தீர்வு காணும்படி நர்சிம்மராவின் தலைமையிலான மத்திய அரசிடம் பொறுப்பை ஒப்படைத்து, நழுவிக் கொண்டது. கல்லூளிமங்கனான நரசிம்மராவ் முடிவெடுக்காமல் இருக்கவே, ஜெயலலிதா உண்ணாவிரதமிருந்தார். அவருடன் அரசியல் கூட்டு - குடும்ப நண்பர் என்ற உறவு காரணமாக ராவ் அரசு ஒரு தற்காலிக முடிவு செய்து, 6 டி.எம்.சி. தண்ணீர் விடும்படி ஆணையும் கமிட்டியும் போட்டது. 30 டி.எம்.சி. தண்ணீர் கேட்டு, பெரும் கலவரம், உண்ணாவிரதம், அரசியல் நிர்பந்தம் ஆகியவற்றுக்குப் பிறகு 6 டி.எம்.சி. நீர் திறந்து விடப்பட்டது. கமிட்டி முடிவு இரகசியமாக வைக்கப்பட்டது.

இது மீண்டும் குழப்பத்திற்கே வழிவகுத்தது. நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பும் அமலாக்கப்படவில்லை - நடுவர் மன்றத்தின் மற்றுமொரு இடைக்கால ஆணையும் அமலாக்கப்படவில்லை. நீதிமன்ற சட்டப்பூர்வ தீர்ப்புக்கு மாறாக, அரசியல் தலைமையின் தீர்ப்பும் வருகிறது. எது சரியான, மேலான தீர்ப்பு? எதை அமலாக்குவது நிச்சயமானது? யாரிடம் நீதியும் உரிமையும் கோருவது? என்கிற இதே குழப்பம் இப்போதும் எழுந்துள்ளது.

இதற்கிடையே நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை அமலாக்குது குறித்து தமிழக அரசு தொடுத்த வழக்கிற்கு தீர்ப்புக் கூறாமலேயே, ஏதாவது செய்யும்படி உச்சநீதி மன்றம் கேட்டுக் கொண்டது. அதன்பேரில் அதிகாரிகள் - தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்ட ''காவிரி ஆறு ஆணையம்'' ஒன்றை அமைப்பது என்கிற திட்டத்தை மத்திய அரசு அறிவித்தது. அதையும் கர்நாடக அரசு ஏற்க மறுத்து அரசியல் ரீதியிலான ஆணையம் ஏற்படுத்தும்படி நிர்பந்தித்தது.

இதை ஏற்ற வாஜ்பாயி தலைமையிலான மத்திய அரசு, கர்நாடகம், தமிழகம், புதுவை மற்றும் கேரள மாநிலங்களின் முதல்வர்களையும், பிரதமரையும் கொண்ட காவிரி ஆறு ஆணையம் அமைத்தது. இதற்கு உதவுவதற்காக அதிகாரிகள் - நிபுணர்களைக் கொண்ட காவிரி நிர்வாக கமிட்டியும் அமைக்கப்பட்டது. வாஜ்பாய் அரசில் பங்கேற்கும் கருணாநிதி துரோகத்தனமான இந்த முடிவை ஏற்றதோடு, உச்சநீதி மன்றத்தில் நிலுவையில் இருந்த வழக்கையும் விலக்கிக் கொண்டார். இந்த காவிரி ஆறு ஆணையம் என்பதே கர்நாடக அரசுக்குச் சாதகமான விதிமுறைகளைக் கொண்டது. நான்கு மாநிலங்களும் ஒருமனதாக ஏற்கும் முடிவுகளைத்தான் அது அமலாக்க முடியும். இல்லையானால் ஆணையத் தலைவரான பிரதமரின் முடிவே இறுதியானது. அதையும் எந்த

**காவிரிப் பிரச்சினையைத் தீர்க்கக் கோரி பிரதமரைச் சந்தித்து முறையிடும் தமிழக முதல்வர் ஜெயா மற்றும் கர்நாடக முதல்வர் கிருஷ்ணா.**




படிப்பகம்

www.padippakam.com

ஒரு மாநிலமும் அமலாக்க மறுத்தால், ஆணையம் ஒன்றும் செய்ய முடியாது. இதைப் பயன்படுத்தி ஆணைய முடிவைக் கூட அமலாக்க மறுக்கிறது கர்நாடக அரசு.

நடுவர் மன்றத்தின் இடைக்கால தீர்ப்பை அமலாக்குவது என்கிற பெயரில் வாஜ்பாயி - கருணாநிதி அரசுகள் செய்த ஏற்பாடுகளை அரசியல் காரணங்களுக்காக ஜெயலலிதா ஏற்க மறுத்து, நிராகரித்தார். ஆனால், ஜெயலலிதா மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு எந்த நடவடிக்கையும் செய்யவில்லை. இந்த ஆண்டு காவிரி நீர்ப்பிடிப்பு - கர்நாடகப் பிரதேசங்களில் மழை குறைந்து பற்றாக்குறை ஏற்பட்டது. பாதி அளவே கர்நாடக அணைகளில் நீர் இருந்தும், நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி தமிழகத்துக்கு நீர் விட வேண்டிய பொறுப்பை மதியாது வழக்கம் போல விரிவான பகுதியில் கர்நாடகம் சாகுபடி செய்தது. நடுவர் மன்றத் தீர்ப்பும், ஆண்டுதோறும் 205 டி.எம்.சி. தண்ணீர் தமிழகத்திற்கு வழங்கவேண்டும் என்று மட்டுமே உள்ளது; வறட்சி காலங்களில் நிலைமையைப் பொறுத்து நீர் விடும்படி கறாராக வரையறுக்காமல் உள்ளது.

இந்த நிலையில், காவிரி ஆறு ஆணையத்தைக் கூட்டும்படி தமிழகம் கோரியது. கர்நாடக அரசும் பிரதமரும் கூட்டுச் சேர்ந்து கொண்டு ஆணையத்தைக் கூட்டுவதைத் தாமதித்ததோடு, தமிழகத்துக்கு பாதகமாக தாமதப்படுத்தும் வேலையில் இறங்கினர். தமிழக அரசு விக்ரமாதித்தன் வேதாளம் கதையாக, மீண்டும் உச்சநீதி மன்றத்துக்குப் போனது. காவிரி ஆணையம் இறுதி முடிவு செய்ய வேண்டும் என்கிற நிபந்தனைக்குட்பட்டு நாள்தோறும் 1.25 டி.எம்.சி. நீர் உடனே திறந்து விடும்படி உத்தரவிட்டது. கர்நாடகா உடனே அவ்வாறு செய்யாமல் சிலநாள் தாமதித்து அரைகுறை அளவு நீர் திறந்துவிட்டுவிட்டு, அவசர அவசரமாக ஆணையத்தைக் கூட்டும்படி பிரதமரிடம் கோரியது. ஆணையத்தைக் கூட்டி அவசர முடிவு எடுக்கும்படி தமிழகம் கோரிய போது வேண்டுமென்றே தள்ளிப் போட்டு தாமதித்த பிரதமர், உச்சநீதி மன்ற உத்தரவை அமலாக்கும் நிர்பந்தம் காரணமாக, கர்நாடகம் கோரியதும் 24 மணி நேரத்தில் கூடி 0.9 டி.எம்.சி. எனக் குறைந்த அளவு நீர்விடும்படி தீர்ப்புக் கூறினார்.

இதற்கிடையே கர்நாடகாவில் காவிரி பாசனப் பகுதி விவசாயிகள் போராட்டம் வெடித்துத் தீவிரமாகி, பிற பகுதிகளுக்கும் பரவியது. தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் திறந்து விடக் கூடாதென்ற போராட்டத்தில் விவசாயிகளோடு மாணவர்கள், வழக்கறிஞர்கள், எழுத்தாளர்கள், சினிமாக்காரர்கள், கடைசியாக போலீசுக்காரர்கள் என்று விரிவடைந்து கொண்டே போகிறது. ஒரு துளி தண்ணீர் கூட கொடுக்க முடியாது என்பதில் கர்நாடகம் பிடிவாதமாகி விட்டது; இறுகியும் விட்டது. கபினி அணையில் ஒரு விவசாயி குதித்துத் தற்கொலை செய்து கொண்டதைக் காரணம் காட்டி, சிறிதளவு திறந்து விடப்பட்ட காவிரி நீரையும் அடியோடு நிறுத்தி விட்டது. உச்சநீதி மன்றம், காவிரி ஆறு ஆணையம் ஆகியவற்றின் முடிவுகளை மறுக்கும் கர்நாடக முதல்வர் உட்பட ஐந்து பேர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் போடப்பட்டுள்ளது. இது ஒருபுறம் நடக்க, தனது உத்தரவையும் கர்நாடகம் அமலாக்க மறுப்பதைக் கண்டு கொள்ளாமல் இருக்கும் வாஜ்பாயி தலைமையிலான ஆணையம், மேலும் பிரச்சினையை இழுத்தடிக்கும் நோக்கில் காவிரி கண்காணிப்புக் குழு - ஆய்வு என்று கர்நாடகத்துக்கு சாதகமாக நடந்து கொள்கிறது.

**காவிரி என்ன, எந்தவொரு பிரச்சினைக்கும் ஒரு பெரும் சக்தியாக மக்கள் ஒன்று திரண்டு விடக் கூடாது, தனது சொந்த அரசியல் பலத்தைக் கொண்டு எதையும் சாதித்துக் காட்டுவதே சரியானது என்கிற ஆணவத்தில் மூழ்கிக் கிடக்கிறது பாசிச ஜெயா கும்பல்.**

கர்நாடக மாநிலம் எப்போதும் மத்தியில் ஆளும் அனைத்திந்திய கட்சிகளையே தேர்தல்களில் வெற்றி பெற வைக்கிறது. ஆகவே, மொத்தமாக, அதிக எண்ணிக்கையில் எம்.பி.க்களைப் பெறும் நோக்கத்திலேயே கர்நாடகாவுக்குச் சாதகமாக அவை உள்ளன. அந்தக் கட்சிகள் இங்கே, சிறியவையாகவும், மாநிலக் கட்சிகளைச் சார்ந்தும் உள்ளன. அதுவும் தவிர, கர்நாடகாவில் உள்ளதைப் போல தமிழக ஓட்டுக் கட்சிகள் காவிரி உட்பட மாநில நலனுக்காக எந்தவொரு பிரச்சினையிலும் ஒன்றுபட்டு நிற்கவில்லை. எனவே, தமிழக மக்களுக்குப் பாதகமான எந்த நடவடிக்கை எடுத்தாலும் அதனால் அனைத்திந்திய தேர்தல் கட்சிகளுக்கு நட்டமும் இல்லை. அதைத் தட்டிக் கேட்கும் துணிவும் மாநில ஓட்டுக் கட்சிகளுக்கும் கிடையாது. ஆளும் இரண்டு திராவிடக் கட்சிகளும் மத்திய அரசு எதுவானாலும் அதன் தயவையே நாடி நிற்கின்றன.

காவிரி நீரைத் திறந்து விடுவதால் பாதிக்கப்படுவோம் என்று அஞ்சும் விவசாயிகள் கர்நாடகாவில் போராடுகிறார்கள். ஆனால் அதனால் ஏற்கனவே பாதிக்கப்பட்டு அல்லற்படும் காவிரி பாசனப்பகுதி தமிழக விவசாயிகள் அடையாள எதிர்ப்பு - கண்டனம் - முணுமுணுப்பு என்கிற நிலையிலேயே உள்ளனர். அங்கே நடிகர்கள் - போலீசுக்காரர்கள் கூட விவசாயிகளுக்கு ஆதரவாக களத்தில் குதித்துள்ளனர். இங்கே காவிரிக்காக உண்ணாவிரதமிருக்க முயன்ற நடிகருக்கு தடை விதிக்கப்படுகிறது. அறவழியில் முழக்கமிடும் மாணவ - மாணவிகள் மீதும் கொலைமுயற்சி வழக்கு, அரசியல் எதிர்ப்பாளர்கள் மீது ''பொடா'' என்று பாசிச பேயாட்சி நடக்கும் தமிழகத்தில், காவிரி பிரச்சினைக்காகப் போராடும் துணிவு எந்த ஓட்டுக் கட்சியிடமும் இல்லை.

தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் பாசிச பேயாட்சி காரணமாக தமது சொந்தப் பிரச்சினைகளுக்காகக் கூட போராட முடியாமல் ஒடுக்கப்படுகின்றனர். எல்லாப் பிரிவு மக்களையும், எல்லாவகையிலும் அடக்கி ஒடுக்கும் பாசிச ஜெயா தலைமையில், காவிரி போன்ற உயிராதாரமான, நியாயவுரிமைப் பிரச்சினைக்காக மட்டும் மக்கள் அணிதிரளுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. காவிரி என்ன, எந்தவொரு பிரச்சினைக்கும் ஒரு பெரும் சக்தியாக மக்கள் ஒன்று திரண்டுவிடக் கூடாது, தனது சொந்த அர்சியல் பலத்தைக் கொண்டு எதையும் சாதித்துக் காட்டுவதே சரியானது என்கிற ஆணவத்தில் மூழ்கிக் கிடக்கிறது பாசிச ஜெயா கும்பல். இந்த உண்மையை அம்பலப்படுத்துவதோடு, எப்போதும் அநியாயமான முறையில் தமிழகத்துக்கு விரோதமாக, கர்நாடகத்துக்கு ஆதரவாக மத்திய அரசு நடந்து கொள்வதை முன்னிறுத்தி தமிழக மக்கள் போராட அணிதிரளவேண்டும். மத்திய அரசுக்கு எதிராக, ஒத்துழையாமல் அதன் ஆணைகளை ஏற்க மறுப்பது, வரி செலுத்த மறுப்பது, அதன் அதிகார அமைப்புகள் இங்கே இயங்குவதை எதிர்ப்பது, புறக்கணிப்பது, முடக்குவது என்ற முறையில் போராடுவதற்கு தமிழக மக்களைத் தட்டி எழுப்ப வேண்டும். ●


படிப்பகம்

# தனியார்மயத்தின் படுதோல்வி

# பிரிட்டிஷ் இரயில்வே தரும் படிப்பினை


பிரிட்டனின் தலைநகர் லண்டனிலிருந்து மான்செஸ்டர் நகரை நோக்கி அந்த ரயில் சென்று கொண்டிருந்தது. அந்த ரயில் லண்டனிலிருந்து மிகத் தாமதமாகப் புறப்பட்டதால் பயணிகள் முகத்தைச் சுளித்தனர். ரயில் பெட்டிகளும் இருக்கைகளும் தூய்மைப்படுத்தப்படாமல் அழுக்கேறிக் கிடந்தன. கழிப்பறையோ நாறியது. அந்த ரயிலும் உரிய நேரத்திற்குள் செல்லாமல் பலமணிநேரம் தாமதமாகப் போய்ச் சேர்ந்தது.

பயணிகள் மான்செஸ்டரில் இறங்கியதும் ரயில் நிலைய மேலாளரிடம் கோபமாக முறையிட்டனர். அவரோ, ''எங்களது நிறுவனம் ரயில் நிலையத்துக்கு மட்டுமே பொறுப்பு; உங்கள் புகார்களை ரயிலை இயக்கும் நிறுவனத்திடம் கூறுங்கள்'' என்றார். அந்த நிறுவனமோ, ''நாங்கள் ரயில் வண்டியை இயக்குவதற்கு மட்டும்தான் பொறுப்பு. சிக்னல் கிடைக்காததால் ரயில் தாமதமாகியுள்ளது. நீங்கள் சிக்னல் நிறுவனத்திடம் முறையிடுங்கள்'' என்றனர். ''அது ஒருபுறமிருக்கட்டும்; இருக்கைகளும் கழிப்பறைகளும் சுத்தம் செய்யப்படவில்லையே'' என்று பயணிகள் கேட்டபோது, ''இது எங்கள் பொறுப்பு அல்ல; பெட்டிகளையும் இருக்கைகளையும் பராமரிப்பது வேறொரு நிறுவனம்; கழிப்பறைகளைச் சுத்தம் செய்வது இன்னொரு நிறுவனம்; நீங்கள் அவர்களிடம் புகார் செய்யுங்கள்'' என்றனர். ஏனென்றால், பிரிட்டனில் ரயில்வே துறையானது ஏற்கனவே தனியார்மயமாக்கப்பட்டு பல நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது.

பிரிட்டனில் பிளாட்பாரத்துக்கு ரயில் வரும் நேரத்தை வைத்து பயணிகள் தங்கள் கைக்கடிகாரத்தைத் திருத்திக் கொள்வார்கள்; அவ்வளவு துல்லியமாக சரியான நேரத்துக்கு ரயில்கள் வரும் என்று புகழ்பெற்ற பிரிட்டிஷ் ரயில்வே துறை இப்படிச் சீரழிந்து விட்டதே என்று புலம்பியபடியே பயணிகள் தங்கள் புகார்களை புகார் பெட்டியில் போட்டார்கள். நல்லவேளை! இப்படி புகார் செய்தவர்களை நம்ம ஊர் சினிமா தியேட்டர் முதலாளிகளைப் போல அடியாட்களை வைத்து அந்த பிரிட்டிஷ் தனியார் முதலாளிகள் மிரட்டவில்லை.

பிரிட்டனில் நீண்டகாலமாக அரசுத் துறை நிறுவனமாக இயங்கிவந்த ரயில்வே துறையைத் தனியார்மயமாக்கி மறுசீரமைப்பு செய்யப் போவதாக 1994-இல் அரசு அறிவித்தது. ரயில்வே துறை தொடர்ந்து நட்டத்தில் இயங்குவதால் அதை ஈடு செய்ய தனியார்மயமாக்குவதாகவும், அரசுத்துறைகள் தொடர்ந்து தோல்வியடைந்து வருவதால் இக்கொள்கையைக் கைவிட்டு தனியார்மயமாக்க தீர்மானித்துள்ளதாகவும் அரசு அறிவித்தது. அதைத் தொடர்ந்து ரயில்வே துறையில் முதலீடு செய்யப்படுவது நிறுத்தப்பட்டு தனியார் முதலாளிகளுக்குத் தாரை வார்க்கப்பட்டன. ரயில்வே தண்டவாளம், ரயில் நிலையம், சிக்னல் நிலையம், மின்சார விநியோகம், ரயில் பெட்டிகள், பயணிகள் ரயில் - சரக்கு ரயில் போக்குவரத்து, கட்டண வசூலிப்பு, பராமரிப்பு என துறைவாரியாகப் பிரிக்கப்பட்டு 1996-இல் பிரிட்டிஷ் ரயில்வே துறையானது முழுமையாக தனியார் முதலாளிகளின் பொறுப்பில் இயங்கத் தொடங்கியது.

இத்தனியார் நிறுவனங்கள், தேவைக்கு அதிகமாக உள்ளதாகக் கூறி, ரயில்வே தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்தன. தமது இலாப விகிதம் குறைந்து விட்டதாகக் கூறி, எஞ்சிய தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் பிற சலுகைகளைக் குறைத்தன. அதன்பிறகு செலவுகள் அதிகரித்துவிட்டதாகக் கூறி ரயில் தண்டவாளங்களைப் புதுப்பித்தல், பராமரித்தல் முதலானவற்றைப் புறக்கணித்தன. படிப்படியாக சேவைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டன. ரயில்கள் தாமதமாவதும் திடீரென ரத்து செய்யப்படுவதும் தொடர்கதையானது. ஹாட்ஃபீல்டு எனுமிடத்தில் தண்டவாள விரிசலால் ரயில்கள் மோதிக் கொண்டு விபத்து நடந்தது.




பின்னர் விபத்து குறித்து விரிவான விசாரணை நடந்தபோது, ஆயிரக்கணக்கில் தண்டவாளங்கள் விரிசல் கண்டிருப்பதும், அவை பராமரிக்கவோ, புதுப்பிக்கப்படவோ இல்லை என்பதும் தெரிய வந்தது. இவற்றைச் சீரமைக்க பல ஆயிரம் கோடி டாலர்களை ஒதுக்குமாறு தனியார் முதலாளிகள் அரசிடம் கோரினர். அரசாங்கமோ என்ன செய்வது என்று புரியாமல் கையைப் பிசைந்தது. தண்டவாளங்கள் முறையாகப் பராமரிக்கப்படாததால் விரைவு ரயில்கள் மெதுவான வேகத்தில் இயக்கப்பட்டன. பல ரயில்கள் தாமதமாயின. கோடைக் காலத்தில் அதிக வெப்பம் காரணமாக தண்டவாளங்கள் மேலும் பாதிப்படைந்ததால், பல ரயில்கள் ரத்து செய்யப்பட்டன.

இதன் எதிர்விளைவாக சாலைப் போக்குவரத்தில் நெரிசல் பிதுங்கி வழியத் தொடங்கியது. பழைய போக்குவரத்து முறைகளைக் (ரயில், பேருந்து) கைவிட்டு மக்கள் நவீன கார்களை உபயோகிக்கத் தொடங்கி விட்டனர் என்றும் இது தனியார்மயத்தின் சாதனை - பொருளாதாரத்தின் பாய்ச்சல் என்றும் முதலாளித்துவப் பொருளாதாரவாதிகள் பிதற்றத் தொடங்கினர். அமெரிக்காவைப் போல, பொது மக்கள் சேவைக்கான ரயில், பேருந்து போக்குவரத்து இல்லாத அளவுக்கு பிரிட்டன் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறிவிட்டது என்றனர். ஆனால் சாலை போக்குவரத்து நெரிசலால் புகை மூட்டமும் மாசு பெருக்கமும் விபத்துகளும் தீவிரமடையத் தொடங்கின.

ஆறாண்டுகளாக ரயில்வே துறையை உறிஞ்சிக் கொழுத்த தனியார் பெருமுதலாளிகள், இனிமேலும் கொள்ளையடிக்க முடியாத அளவுக்கு ரயில்வேயின் அடிக்கட்டுமான துறைகள் சிதிலமடைந்த நிலையில், ரயில்வே துறையை முறையாக இயக்க அரசாங்கம் உதவி செய்ய வேண்டுமெனக் கோரினர். ''நெட்வொர்க் ரயில்'' என்ற தனியார் நிறுவனம் ரயில் போக்குவரத்துக்காக மட்டும் 2100 கோடி டாலர் அளவுக்கு உதவியைக் கோரியது.

தொடர்ச்சி 23-ஆம் பக்கம்

www.padippakam.com

### இரண்டாவது தொழிலாளர் ஆணையப் பரிந்துரை:

# தொழிலாளர்கள் நவீன கொத்தடிமைகள்தான்!

**நா**ன் பெரியதொரு தொழிற்சாலையில் நிரந்தரத் தொழிலாளியாகப் பணியாற்றுகிறேன். 8 மணிநேரவேலை; மருத்துவ விடுப்புச் சலுகை; கைநிறைய சம்பளம் – போனசு என்று சந்தோசமாக இருக்கிறேன் என்று எந்தவொரு தொழிலாளியும் இனி கனவுகளில் மிதக்க முடியாது.

இனி எவருக்கும் நிரந்தர வேலை கிடையாது; எல்லோரும் கொத்தடிமைகள்; எந்தவொரு நிறுவனமும் யாருடைய அனுமதியுமின்றி ஆட்குறைப்பு செய்து தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டியடிக்கலாம்; நினைத்தபோது ஆலையை மூடி தொழிலாளர்களைப் பட்டினிக்குத் தள்ளலாம். இப்படி கொடிய பரிந்துரைகளை இரண்டாவது தேசிய தொழிலாளர் ஆணையம் அண்மையில் அரசுக்கு அளித்துள்ளது.

1751 பக்கங்களைக் கொண்ட இப்பரிந்துரை அறிக்கை, கடந்த செப்டம்பர் 7 ஆம் நாளன்று அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது. மத்திய தொழிலாளர் அமைச்சர் சாகிப்சிங்வர்மா இதனை வெளியிட்டு பத்திரிகையாளர்களிடம் பேசுகையில், ஆணையத்தின் பரிந்துரைகள் அரசின் உயர்ந்தபட்ச ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், இதனடிப்படையில் நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடரிலேயே புதிய சட்டத்திருத்தங்கள் கொண்டுவரப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஆளும் இந்துவெறி பா.ஜ.க. கூட்டணி அரசு 1999–ஆம் ஆண்டு அக்டோபர் 15 அன்று இரண்டாவது தேசிய தொழிலாளர் ஆணையத்தை அமைத்தது. 1977–இல் மொரார்ஜி தேசாய் தலைமையிலான அரசில் சில மாதங்களுக்குத் தொழிலாளர் அமைச்சராக இருந்ததைத் தவிர, வேறு எந்த தொழிற்சங்க அனுபவமோ, தொழிலாளர்களுடன் தொடர்போ இல்லாத ரவீந்திரவர்மா என்பவரை இதன் தலைவராக நியமித்தது. முதலாவது தேசிய தொழிலாளர் ஆணையம் உச்சநீதி மன்ற நீதிபதி தலைமையில் அமைக்கப்பட்டதைப் போல, இரண்டாவது தொழிலாளர் ஆணையமும் அமைக்கப்பட வேண்டும் என பல மத்திய தொழிற்சங்கங்கள் வலியுறுத்திய போதிலும் பா.ஜ.க.அரசு அதை ஏற்கவில்லை. மேலும் இந்த ஆணையத்திற்கு தொழிலாளர் பிரதிநிதிகளாக மத்திய தொழிற்சங்கப் பிரதிநிதிகள் நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் ஏற்கவில்லை. பின்னர், அதிருப்திகள் அதிகரித்ததால் பா.ஜ.க.வின் தொழிற்சங்கமான பி.எம்.எஸ். மட்டும் நியமனம் பெற்றது. அதன் பிறகு காங்கிரசின் ஐ.என்.டி.யு.சி.யும் அகமதாபாத்திலுள்ள ஒரு தொழிற்சங்கத்தின் பிரதிநிதியும் இடம் பெற்றார்கள். இதர பெரிய தொழிற்சங்கங்களுக்குப் பிரதிநிதித்துவம் தரப்படவில்லை.

இப்படி ஜனநாயக விரோதமாக– சதிகார முறையில் உருவாக்கப்பட்ட இந்த ஆணையம், தொழிலாளர் நலன் பற்றியோ, வேலைக்கு உத்திரவாதம், சமூக பாதுகாப்பு பற்றியோ எவ்வித ஆய்விலும் ஈடுபடக்கூடாது என்று தொடக்கத்திலேயே பா.ஜ.க. அரசு கட்டுப்பாடுகளை விதித்தது. அதற்கு மாறாக, புதிய பொருளாதாரக் கொள்கைகளுக்கு ஏற்புடையதாகவும். உலகமயமாக்கலுக்கு இசைவாகவும் தொழிலாளர் சட்டங்களில் என்னென்ன மாற்றங்களைச் செய்யலாம்? நேரடி அந்நிய முதலீடு இந்தியாவுக்கு வர எத்தகைய தொழிலாளர் சட்டங்கள் தடையாக உள்ளன? எந்தெந்த சட்டங்களை ரத்து செய்ய வேண்டும்? - முதலானவற்றைப் பற்றி ஆலோசனைகளை மட்டும் அளிக்குமாறு கோரியது. அதனடிப்படையில் பன்னாட்டு ஏகபோக முதலாளிகள் இடையூறு ஏதுமின்றி பகற்கொள்ளையடிக்கவும், தொழிலாளர்களின் அற்ப சொற்ப உரிமைகளையும் பறித்து கொத்தடிமைகளாக்கவும் இந்த ஆணையம் பரிந்துரைகளை அளித்துள்ளது.



இரண்டாவது தேசிய தொழிலாளர் ஆணையத்தின் பரிந்துரைகளின் படி,

✱ இனி எந்தவொரு தொழில் நிறுவனமும் லே–ஆப் அறிவிக்கவோ, ஆட்குறைப்பு செய்யவோ முன் அனுமதி பெறத் தேவையில்லை.

✱ தொழிலாளியின் வேலைநேரம் 8 மணி நேரம் என்பது இனி 9 மணி நேரமாக்கப்படும். தக்க வசதிகள் செய்து கொடுத்து பெண்களையும் இரவு நேர ஷிப்ட்களில் அமர்த்தலாம்.

✱ சட்டப்படி வேலை (Work to rule) மற்றும் மெதுவாக வேலை செய்தல் (Go slow) ஆகிய உள்ளிருப்புப் போராட்டங்களில் தொழிலாளர்கள் ஈடுபடுவது தவறான செயலாகும். இதன் காரணமாக நிர்வாகம் தொழிலாளர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கலாம்.

✱ ஊதியக் குழு (Wage Board) ஊதிய நிர்ணயம் இனி எந்தத் தொழிலுக்கும் தேவையில்லை. சர்க்கரை, சிமெண்ட், பஞ்சாலை முதலான தொழில்களுக்கு இந்திய அளவிலும் மாநில அளவிலும் வகுக்கப்படும் ஊதிய நிர்ணயமுறை ரத்து செய்யப்பட வேண்டும்.

✱ தற்போதுள்ள பி.எஃப்; கிராஜூட்டி, மருத்துவ ஈட்டுத் தொகை முதலான சமூகப் பாதுகாப்பு முறைகள் ரத்து செய்யப்பட்டு புதிதாக நிர்ணயிக்கப்பட சமூகப் பாதுகாப்புத் திட்டம் கொண்டு வரப்படும்.

✱ தற்போது நடைமுறையிலுள்ள பல்வேறு சட்டப் பிரிவுகளின் கீழ் வரும் ஊதியம், போனசு, வேலைநிலைமை, பணிபாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டங்கள் முதலானவை மாற்றியமைக்கப்படும். ஒருங்கிணைந்த முறையில் ஒரே சட்டமாக உருவாக்கப்படும்.

✱ தொழிலாளர்களுக்கான விடுமுறை நாட்கள் குறைக்கப்படும். தேசிய விடுமுறை 3 நாட்களும் மாநில அளவில் கூடுதலாக 2 நாட்களும் சேர்ந்து மொத்தம் 5 நாட்கள் மட்டுமே விடுமுறை தரப்படும்.

✱ அத்தியாவசியப் பணிகளில்



படிப்பகம்

www.padippakam.com

வேலைநிறுத்தம் செய்யக் கூடாது. இதர துறைகளில் இரகசிய வாக்கெடுப்பு நடத்தி 51 சதவீத தொழிலாளர்களின் ஆதரவு இருந்தால் மட்டுமே வேலை நிறுத்தம் செய்ய முடியும்.

✱ நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தை நடத்தும் தொழிற் சங்கங்கள் மொத்தத்தில் 66%க்கு அதிகமான தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டிருக்க வேண்டும். நிர்வாகத்துடன் தொழிற்சங்கங்கள் இனி கூட்டு பேரம் நடத்தும் உரிமை கிடையாது.

✱ 100 பேர் கொண்ட தொழிலகம் சட்ட விதிமுறை கட்டாயத்துக்கு உட்பட்டது என்கிற முந்தைய நடைமுறை கைவிடப்படும். 300 தொழிலாளர்களுக்கு மேற்பட்ட தொழிலகங்களுக்கு மட்டுமே இனி சட்ட நிபந்தனைகள் பொருந்தும்.

✱ ஏற்றுமதிக்கான தொழிற்பேட்டை மையங்களில் தொழிலாளர் சட்டங்கள் கறாராக செயல்படுத்தப்பட மாட்டாது. அம்மையங்களைச் சட்டத்தின் ஆளுகையிலிருந்து விடுவித்துவிட வேண்டும்.

✱ போனஸ் கணக்கிடும் முறையும், போனசின் அளவும் மாற்றப்படும். உற்பத்தியுடன் இணைந்ததாக ஊதியம் நிர்ணயிக்கப்படும்.

—பானை சோற்றைப் பதம் பார்த்தாற் போல இவை சில உதாரணங்கள்தான்.

2001–02 ஆண்டுக்கான மத்திய வரவு செலவு அறிக்கையை (பட்ஜெட்) சமர்ப்பித்தபோது அன்றைய நிதியமைச்சரான யஷ்வந்த் சின்ஹா, இரண்டாம் தொழிலாளர் ஆணைய அறிக்கை வருவதற்கு முன்னரே, தனது உரையில் பல்வேறு தொழிலாளர் சட்டத் திருத்தங்களை முன்மொழிந்தார். பி.எஃப் வட்டி விகிதமும் குறைக்கப்பட்டது. 100பேரும் அதற்கு மேலும் தொழிலாளர்களைக் கொண்டுள்ள தொழிற்சாலைகளை மூடவோ, ஆட்குறைப்பு செய்யவோ நிர்வாகம், அரசிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்று தற்போதைய தொழில் தகராறு சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளதை மாற்ற வேண்டும் என்று குதித்தார். இதை 1000 பேருக்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட ஆலைகளுக்கு மட்டுமே பொருந்துமாறு செய்யப் போவதாக கொக்கரித்தார். அவர் அறிவித்தபடியே இப்போது இரண்டாவது தொழிலாளர் ஆணைய அறிக்கை வெளிவந்துள்ளது.

1926–ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்திய தொழிற்சங்க சட்டம்தான் இன்றுவரை நடைமுறையில் உள்ளது. இச்சட்டப்படி, ஒரு தொழில் நிறுவனத்தில் பணியாற்றும் 7 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் ஒரு தொழிற் சங்கமாகத் திரண்டு தமது சங்கத்தைச் சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டதாகப் பதிவு செய்யக்கோரி விண்ணப்பிக்க முடியும். ஆனால், தொழிலாளர் ஆணையத்தின் பரிந்துரைகளின்படி, இனி 7 தொழிலாளிகள் சங்கமாக அணிதிரண்டால் அதை அரசு ஏற்காது. குறிப்பிட்ட தொழில் நிறுவனத்தின் மொத்தத் தொழிலாளர்களில் 10% பேரை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள சங்கத்தை மட்டுமே அரசும் நிர்வாகமும் அங்கீகரிக்கும். இதன் மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்களின் எண்ணிக்கையைக் குறைத்து, தொழிலாளர்களின் சங்கம் சேரும் உரிமையையும் பறித்துவிட ஆளும் பா.ஜ.க.கூட்டணி அரசு முயற்சிக்கிறது.



உதாரணமாக, போக்குவரத்துத் துறையில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். இவர்கள் மாநிலத்தின் பல பகுதிகளில் பணியாற்றும் நிலையில், இவர்களில் 10% பேரை—அதாவது 10,000 பேரை ஒரு சங்கம் தனது தலைமையின் கீழ் அணிதிரட்டுவது என்பது மிகவும் சிரமமானது. இந்நிலையில் எந்தச் சங்கமும் அங்கீகாரம் பெறவோ, நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தை நடத்தவோ வழியில்லாமல் முடமாக்கப்படும்.

டி.வி.எஸ். போன்ற மருந்தளவுக்குக் கூட உரிமைகள் இல்லாத பெருமுதலாளித்துவ தொழில் நிறுவனங்களில், தற்போதைய சட்டப்படி 7 பேரைச் சங்கமாக அணிதிரட்டுவதே பெரும்பாடாக உள்ளது. நிர்வாகத்தின் எடுபிடி சங்கங்களைத் தவிர மற்ற சங்கங்களில் சேருவோர் பழிவாங்கப்படுவதும், குண்டர்களை வைத்து தாக்குவதும் சர்வ சாதாரணமாக உள்ளது.

இந்நிலையில் 10% தொழிலாளர்கள் இருந்தால்தான் சங்கத்தை அங்கீகரிக்க முடியும் என்று சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டால், இத்தகைய நிறுவனங்களில் நிர்வாகத்தின் எடுபிடி–கருங்காலி சங்கத்தைத் தவிர வேறு எந்த சங்கமும் இருக்கவே முடியாது. வெள்ளைக்காரன் காலத்தில் இருந்த தெழிற்சங்க உரிமை கூட இன்றைய 'சுதந்திர' இந்தியாவில் கிடையாது எனுமளவுக்கு வெள்ளைக்காரன் காலத்தைவிட கொடூரமான ஆட்சிதான் இன்று நிலவுகிறது. தொழிற் சங்க சட்டம் மட்டுமின்றி தொழிற்தகராறு சட்டம், ஒப்பந்தத் தொழிலாளர் சட்டம், சம்பள–போனசு பட்டுவாடா சட்டம் முதலான அனைத்தும் இதே நோக்கத்தோடு திருத்தப்பட உள்ளன.

மொத்தத்தில் உலகவங்கி, ஐ.எம்.எஃப்; உலக வர்த்தகக் கழகம் ஆகியவற்றின் கட்டளைகளுக்கேற்ப நாட்டை மீண்டும் காலனியாக்குவது, தொழிலாளர் சட்டங்களைத் திருத்தியமைப்பது, தொழிற்சங்க–ஜனநாயக உரிமைகளைப் பறிப்பது என சட்ட பூர்வமாகவே பாசிச சர்வாதிகாரத்தைத் திணிக்க ஆளுங் கும்பல் மூர்க்கமாகக் கிளம்பிவிட்டது.

தொழிலாளிக்கு அரசியலே வேண்டாம் என்று கூலிக்கும் போனசுக்குமான பொருளாதாரவாதப் போராட்டங்களை மட்டுமே நடத்தி வந்த தொழிற்சங்கங்கள் இத்தாக்குதல்களை எதிர்கொள்ள முடியாமல் கையைப் பிசைந்து கொண்டு நிற்கின்றன. இத்தொழிற்சங்கங்களின் அரசியல் கட்சிகள் அனைத்தும் மறுகாலனியாதிக்க பொருளாதார சீர்திருத்தங்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரிக்கின்றன. இத்தகைய தொழிற்சங்க துரோகத் தலைமையை நிராகரித்து விட்டு, விரிந்த பார்வையுடன் அனைத்து உழைக்கும் மக்களுடன் ஒன்றிணைந்து மறுகாலனியாதிக்கத்துக்கு எதிரான இரண்டாவது சுதந்திரப் போரை நடத்தாமல் இத்தகைய தாக்குதல்களைத் தொழிலாளி வர்க்கம் முறியடிக்க முடியாது. சங்கமே செயல்பட முடியாதபோது இனி தொழிலாளிகள் கூலிக்கும் போனசுக்கும் போராடக் கூட வழியில்லை. சங்கம் செயல்பட ஜனநாயக உரிமை வேண்டும். அதுவே பறிக்கப்படும்போது தொழிலாளி வர்க்கம் ஓர் அரசியல் புரட்சியில் இறங்கி, உழைக்கும் மக்களுக்கான தமது சொந்த அரசை நிறுவுவதைத் தவிர இனி வேறு வழியுமில்லை.

● பாலன்



படிப்பகம்

www.padippakam.com

## உ.வ.க. - உலக வங்கி - ஐ.எம்.எஃப். - பன்னாட்டு நிறுவனங்களின்

# மறுகாலனியாதிக்க பயங்கரவாதத்தை முறியடிப்போம்!

உலக வங்கியின் கைக்கூலி ஜெயா நாலு கால் பாய்ச்சலில் அவ்வங்கியின் கட்டளைகளைத் தமிழகத்தில் அமல் படுத்தி வரும் இவ்வேளையில், மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து செப்டம்பர் 14 அன்று திருச்சி நகரில், **''உலக வர்த்தகக் கழகம் - உலக வங்கி - ஐ.எம்.எஃப் - பன்னாட்டு கம்பெனிகளின் மறுகாலனியாதிக்கப் பயங்கரவாதத்தை முறியடிப்போம்!''** எனும் தலைப்பில் கருத்தரங்கமொன்றை நடத்தின.

மக்கள் கலை இலக்கியக் கழக மாநில இணைச் செயலர் தோழர். காளியப்பன் தலைமையேற்று நடத்திய இக்கருத்தரங்கில், தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் தஞ்சை மாவட்டச் செயலாளர் குருசாமி, தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் டாக்டர். சிவசாமி, தமிழ்நாடு முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாநிலத் தலைவர் திரு. சக்திவேல், சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரி பேராசிரியர் சிவக்குமார், அரசுக் கல்லூரி ஆசிரியர் மன்றத்தின் மாநிலச் செயலர் பேராசிரியர் சாந்தாராம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்க மாநிலச் செயற்குழு உறுப்பினர் தோழர். சுந்தர பாண்டியன், கரூர் மாவட்டக் கைத்தறித் தொழிலாளர் சங்கத் தலைவர் தோழர் சோமு, வழக்கறிஞர் பானுமதி ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் சிறப்புரையாற்றினார்கள்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆதிச்சபுரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயக் கூலிப் பெண்கள் தங்கள் கிராமத்தில் நடந்த பட்டினிச் சாவு பற்றியும், விவசாயிகளின் வாழ்க்கை அவலம் பற்றியும் கருத்தரங்கில் எடுத்துக் கூறினார்கள். திருச்சி, ஈ.வெ.ரா. கல்லூரியில் படிக்கும் மாணவர் பெருமாள், கல்லூரிகளும், தாழ்த்தப்பட்ட மாணவர் விடுதிகளும் அரசிடம் இருக்கும் பொழுதே, ஏழை மாணவர்கள் உயர்கல்வி படிப்பதற்குப் போராட வேண்டிய அவலத்தை எடுத்துக் கூறினார்.

பத்தாண்டுகளுக்கு முன்பு ஏகாதிபத்தியங்கள் திணிக்கும் தனியார்மயம் - தாராளமயம் - உலகமயத்தை எதிர்ப்பது என்பது புரட்சிகர அமைப்புகளின் தனியான குரலாக இருந்தது. ஆனால், இன்று, தொழிலாளர்கள், விவசாயிகள், நெசவாளிகள், சிறு உற்பத்தியாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனத் தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் தாராளமயத்தின் பாதிப்புகளை உணர்ந்து போராடத் தொடங்கியிருக்கிறார்கள். ''இப்படிப் போராடும் மக்களின் கருத்துக்களைக் கூற வைப்பதே இக்கருத்தரங்கின் நோக்கம்'' எனத் தலைமை உரையில் தோழர். காளியப்பன் குறிப்பிட்டார்.

''ஒரு போராட்டம் வெற்றியடைய வேண்டுமானால் இரண்டு பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும். ஒன்று, எதிரியார் என்பதைத் துல்லியமாகக் கணிக்க வேண்டும்; இரண்டு, பிரச்சினையை எப்படிப் பார்ப்பது என்பதிலும் தெளிவு இருக்க வேண்டும்'' எனக் குறிப்பிட்ட கருத்தரங்கத் தலைவர் தோழர். காளியப்பன், தற்பொழுது நடைபெற்று வரும் பல்வேறு பிரிவு மக்கள் போராட்டங்களின் பலவீனங்களையும் சுட்டிக் காட்டினார்.

''போராடும் மக்கள், தங்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதல்களை வெறும் பொருளாதாரப் பிரச்சினையாக, தங்களின் துறை சார்ந்த பிரச்சினையாக மட்டுமே பார்க்கிறார்கள்; போராடும் பல்வேறு தரப்பு மக்களிடையேயும் ஒற்றுமை இல்லை; ஒரே துறை சார்ந்த ஊழியர்கள், தொழிலாளர்களிடமும் ஒற்றுமை இல்லை. பதவிக்கு ஒரு சங்கம் எனத் தனித்தனியாகப் பிரிந்து கிடக்கிறார்கள். தாராளமயத் தாக்குதல் பிரச்சினையை ஜெயா - கருணாநிதி; வாஜ்பாயி - சோனியா எனச் சுருக்கிப் பார்க்கிறார்கள்'' என்றார்.

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகத் தங்களுக்குள் அடித்துக் கொள்ளும் ஓட்டுக் கட்சிகள், உலக வங்கியின் கட்டளைகளை நிறைவேற்றுவதில் ஒற்றுமையாக இருக்கின்றன. பல்வேறு தரப்பு மக்களைப் பாதிக்கும் பல்வேறு விதமான பிரச்சினைகளுக்கு இடையே ஒரு தொடர்பு இருக்கிறது. ஆனால், போராட்டங்களோ தனித்தனியாக நடக்கின்றன.

**கருத்தரங்கில் கூடியிருந்த ஒரு பகுதியினர். (உள்படம்) கருத்தரங்கத்தைத் தொடங்கி வைத்து தலைமை உரையாற்றும் தோழர். காளியப்பன்.**





படிப்பகம்

www.padippakam.com

ஆரம்பப் பள்ளி வகுப்புகளில் ஒற்றுமையை வலியுறுத்தக் கூறப்படும் சிங்கம் - காளை மாடு கதையை எடுத்துக் கூறிய தோழர். காளியப்பன், ''மக்கள் தனித்தனியாகப் போராடும் நிலை மாறவேண்டும்'' எனத் தனது தலைமை உரையில் வலியுறுத்தியதோடு, ''துறை சார்ந்த போராட்டங்கள் வெற்றியடையாது; அப்படி நம்புவது பாமரத்தனம்'' என்றார்.

இந்தத் தாக்குதல்கள் வெறும் பொருளாதாரப் பிரச்சினையல்ல. நாடு மறுகாலனியாக்கப்படுகிறது என்பதுதான் பிரச்சினையின் அடிப்படை'' என வலியுறுத்தினார் தோழர். காளியப்பன்.

# இனியா ஆபத்து வரப் போகிறது?

*— தோழர். சுந்தரபாண்டியன், மாநிலச் செயற்குழு உறுப்பினர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கம்.*



''சென்ற தேர்தலின் பொழுது வாஜ்பாயி ஒரு கோடி பேருக்கு வேலை கொடுப்போம் எனக் கூறி ஓட்டுக் கேட்டார். இப்பொழுது அதைப் பற்றிக் கேட்டால், ஒரு கோடி பேரின் வேலையைப் பறிப்போம் என்பது தவறாக அச்சாகி விட்டது என்பார்கள்'' என ஓட்டுக் கட்சிகளின் தேர்தல் வாக்குறுதி மோசடிகளை அம்பலப்படுத்திய தோழர். சுந்தர பாண்டியன் ''ஜெயா–கருணாநிதி, வாஜ்பாயி–சோனியா இவர்களிடையே வேறுபாடு உண்டா? உண்மையான எதிரி யார்?'' என்ற கேள்விகளை எழுப்பினார்.

''தொழிற்சங்கங்களில் வெளிப்படையாகப் பேச முடிவதில்லை. இலஞ்சம் வாங்கிக் கொண்டு, அரசு ஊழியர்–மக்கள் ஒற்றுமை பற்றிப் பேச முடியாது என்றார், அவர்.

தட்டச்சர், இளநிலை உதவியாளர் பதவிகளுக்குப் புதிதாக ஆளெடுப்பது கிடையாது. வாகன ஓட்டுநர்களை நியமிப்பதற்குப் பதிலாக, அரசு, அதிகாரிகளிடம் மாதம் பன்னிரெண்டாயிரம் ரூபாயைக் கொடுத்துவிடும். அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு, அவர் வாகன ஓட்டுநரை மாதச் சம்பளத்திற்கு நியமித்துக் கொள்ள வேண்டும்; வாகனத்தையும் பராமரித்துக் கொள்ள வேண்டும். காவலர் பதவிகளை அரசு தனியார் செக்யூரிட்டி நிறுவனங்களிடம் கொடுத்துவிட்டது. இப்படி புதிதாக ஆளெடுப்பதற்குத் தடை போட்டுள்ள அரசு. போலீசுக்கும், இராணுவத்திற்கும் ஆளெடுப்பதை மட்டும் நிறுத்தவில்லை'' எனக் குறிப்பிட்டு, ஆட்சியாளர்களின் மக்கள் விரோதத் தன்மையை அம்பலப்படுத்தினார், தோழர் சுந்தரபாண்டியன்.

''கருப்புப் பணம், வரி ஏய்ப்பு, வாராக் கடன் ஆகிய சட்ட விரோதக் கொள்கைகள் மூலம் முதலாளிகள் குவித்து வைத்துள்ள பணத்தைக் கைப்பற்றாத ஜெயா, 'கஜானா காலி' என ஒப்பாரி வைத்து, கூலி விவசாயிகளிடமிருந்து இருப்பதையும் தட்டிப் பறிக்கிறார்''

''அர்ஜெண்டினா நாட்டில் நடந்தது போல இங்கும் கலகங்கள் நடக்க வேண்டும். ஆனால், தொழிற்சங்க இயக்கங்களோ கொச்சைத்தனமான போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். வீ.ஆர்.எஸ்.க்குப் பயந்து ஏழு நாட்களும் வேலை பார்க்கிறோம் எனப் பேரம் நடத்துகிறார்கள்'' எனத் தொழிற்சங்க இயக்கங்களின், அரசு ஊயர்களின் சமரசத்தை அம்பலப்படுத்திய தோழர். சுந்தர பாண்டியன்,

''மக்கள் சர்வாதிகார மன்றங்களைக் கட்டியமைப்போம் என்ற முழக்கம் நம்பிக்கை தருவதாக இருக்கிறது. இந்த முழக்கத்தை ஆபத்தாகப் பார்த்து ஒதுங்குபவர்களிடம், இனியா ஆபத்து வரப் போகிறது? என்ற கேள்வியை எழுப்ப வேண்டும்'' என்றார்.

# தனியார்மயமாகும் கல்வி: ஏழை மாணவர்களுக்கு ஏகலைவனின் கதிதான்

*— பேரா. சிவக்குமார், மாநிலக் கல்லூரி, சென்னை.*



''ஒடுக்குமுறைக் கல்வியைதான் அரசு வழங்கிக் கொண்டு இருக்கிறது. அதைக் கூட இப்போது வழங்க மறுக்கிறார்கள். கல்வி, தனியார்மயமாவது மட்டுமல்ல, காவிமயமும் ஆகி வருகிறது.'' எனக் கல்வித்துறையைக் கவ்விக் கொண்டுள்ள இரட்டை அபாயத்தைப் பற்றிக் குறிப்பிட்ட பேரா.சிவக்குமார், ''பொதுக் கல்வி என்பது போராட்டத்தின் மூலமாகப் பெற்ற பலன். கல்வியைத் தனியார்மயமாக்குவதன் மூலம், ஏழை மாணவர்களுக்கு ஏகலைவனுக்கு நேர்ந்த கதியை உருவாக்குகிறார்கள்'' என்றார்.

''தமிழகத்தில் பி.காம். பட்டப்படிப்பை படித்து முடித்து வேலையில்லாமல் இருப்பவர்களின் எண்ணிக்கை கிட்டதட்ட 1,96,000; அறிவியல் மற்றும் கலை பட்டப்படிப்பை முடித்து விட்டு வேலையில்லாமல் இருப்பவர்கள் 2,59,000. விவசாயப் பட்டப்படிப்பைமுடித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்கள் 4,144. வேலையில்லாமல் இருப்பவர்களின் எண்ணிக்கை அடுத்த பத்தாண்டுகளில் இந்தியாவில் ஏழு கோடியைத் தொட்டு விடும் எனக் கூறப்படுகிறது.''

''இந்த வேலையில்லாதவர்களின் எண்ணிக்கையைக் காட்டி, கல்லூரி எதற்கு எனக் கேட்கிறார்கள். கல்லூரிக் கல்வியை, ஒழுங்கமைக்கப்பட்ட (organised) கல்வியை ஒழித்துக் கட்டிவிட்டு, அஞ்சல் வழிக் கல்விக்கு ஊக்கம் தரப்படுகிறது'' என உயர்கல்வியில் நடந்து வரும் மாற்றங்களைக் கோடிட்டுக் காட்டினார்.

''கல்வி தனியாரிடம் போனால் ஆரோக்கியமான போட்டி உருவாகும் என்கிறார்கள். பூலாங்குறிச்சியில் உள்ள அரசுக் கல்லூரியில் 10 மாணவர்களை வைத்துக் கொண்டு இயற்பியல் வகுப்புகளை நடத்துகிறோம். தனியார் இப்படியெல்லாம் நடத்த மாட்டார்கள். தமிழ்நாட்டில் பல தனியார் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் வந்துவிட்டன. அவை பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்தும் மானியத்தை வாங்கிக் கொள்வதோடு, மாணவர்களிடமும் கட்டணம் என்ற பெயரால் கொள்ளையடிக்கின்றன'' எனக் கூறி, கல்வியில் தனியார் நுழைவதால் ஆரோக்கியமான போட்டி இருக்காது; தட்டிக் கேட்க முடியாத கொள்ளைதான் நடக்கும் என அம்பலப்படுத்தினார்.

''ஆரம்பப் பள்ளி நிலையில் 1.73 கோடி தாழ்த்தப்பட்ட மாணவர்கள் படிக்கிறார்கள். இவர்களுள் நடுநிலைப் பள்ளி வரை வருபவர்கள் 54 இலட்சம்தான். மேல்நிலைப் பள்ளிக்குச் செல்லும் தாழ்த்தப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 24 இலட்சம் தான். கல்லூரிக் கல்வியை எடுத்துக் கொண்டால், இந்த எண்ணிக்கை இன்னும் சுருங்கி, மூன்று இலட்சமாகி விடுகிறது. இந்த நிலையில் கல்வி முழுக்க முழுக்கத் தனியார்மயமாகும்பொழுது, இவர்கள் உதிரிப் பாட்டாளிகளாக மாறுவார்கள்'' என எச்சரித்த பேரா.சிவக்குமார், ''ஆசிரியர் சங்கங்களின் நோக்கம், மாணவர்களுடன் இணைந்து சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும்'' என்றார்.



படிப்பகம்

www.padippakam.com

## சமூக சிந்தனை வளர தமிழ் மொழிக்கல்வி தேவை

*- திரு.சக்திவேல், மாநிலத் தலைவர், தமிழ்நாடு முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் கழகம்.*



''டி.வி.யில் தங்கள் முகம் தெரிய வேண்டும் என்பதில் தலைவர்கள் குறியாக இருக்கிறார்கள்'' எனத் தொழிற்சங்கத் தலைமையின் சுய விளம்பர மோகத்தை உடைத்துப் பேசிய திரு. சக்திவேல், ''சமீபத்தில் வெளிவந்திருக்கும் உச்சநீதி மன்றத் தீர்ப்பு கல்வி காவிமய மாவதைத் தடுக்கவில்லை'' எனச் சுட்டிக் காட்டினார்.

''ஆங்கிலம் படித்தால் வேலைக்குப் போகலாம் எனக் கூறிக் கொண்டு மெட்ரிகுலேஷன் பள்ளிகள், நர்சரி பள்ளிகள், அடிமை மோகத்தை வளர்க்கின்றன. வியாபாரமான கல்வியால் வியாபார நோக்கம்தான் வளரும். சமூக சிந்தனை வளர தமிழ் மொழிக் கல்வி அவசியம்.'' கல்வி பெரும்பான்மை மக்களிடமிருந்து அந்நியப் பட்டு நிற்கிறது'' எனக் குறிப்பிட்ட அவர், ''தனியாரிடமிருந்த பஞ்சாலைகளை அரசு எடுத்துக் கொண்டு, ''என்டைஸ்'' என்ற நிறுவனத்தை ஏன் உருவாக்கியது? தனியாரால் நல்ல நிர்வாகத்தைத் தர முடியவில்லை என்பதால்தான்'' என உதாரணத்தோடு தனியார்மய மோகத்தையும் அம்பலப்படுத்தினார்.

## ஆரம்பக் கல்வியின் அவலங்கள்

*- திரு. குருசாமி, தஞ்சை மாவட்டச் செயலாளர், தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி.*



''கல்வி, சமூக மாற்றத்திற்கான கருவி. ஆனால், தற்போதைய கல்விக்கும் வாழ்க்கைக்கும் சம்மந்தமில்லை. பாடத்திட்டம் அந்நியமாக இருக்கிறது'' என இன்றைய கல்வி முறையின் அறிவியலுக்கு விரோதமான தன்மையைக் குறிப்பிட்டுப் பேசிய திரு.குருசாமி,

''ஆறு வயதில் இருந்து 14 வயதிற்குள் உள்ள அனைத்துச் சிறுவர்களுக்கும் அடிப்படைக் கல்வி அளிக்க வேண்டும்'' என அரசியல் சாசனச் சட்டம் கூறுகிறது; ஆனால், 1985-இல் ராஜீவ் காந்தி கொண்டு வந்த நவோதயா பள்ளிகள் இதற்கு எதிரானது'' என்றார்.

''20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர்; 36 மாணவர்களுக்கு இரண்டு ஆசிரியர்கள்; 54 மாணவர்களுக்கு மூன்று ஆசிரியர்கள்; 74 மாணவர்களுக்கு நான்கு ஆசிரியர்கள்; 94 மாணவர்களுக்கு ஐந்து ஆசிரியர்கள்'' என்பதுதான் முறையானது. ஆனால், இன்று அரசு ஐந்து ஆசிரியர் பள்ளிகளை இரண்டு ஆசிரியர் பள்ளிகளாக மாற்றிக் கொண்டுள்ளது'' என ஆரம்பப் பள்ளியின் அவலத்தைப் பற்றிக் குறிப்பிட்ட அவர், ''சமீபத்தில் உச்சநீதி மன்றம் கொடுத்திருக்கும் தீர்ப்பு கல்வியில் இந்து மதவாதத்தையும், மூட நம்பிக்கையையும் புகுத்த வழி வகுக்கும்'' என எச்சரித்தார்.

## சங்கம் இல்லாத இடங்களில்தான் போராட்ட உணர்வு அதிகம்

*— தோழர். சோமு, தலைவர், கரூர் மாவட்டக் கைத்தறித் தொழிலாளர் சங்கம்.*



''இரண்டாம் உலகப் போர் முடிந்த பின் இந்தியா இருந்த நிலையில், இப்பொழுது நாடு உள்ளது'' என இன்று இந்தியாவில் எழுந்து வரும் போராட்டச் சூழலை வருணித்த தோழர். சோமு, ஏகாதிபத்திய திட்டங்களினால் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ''பாதிக்கப்பட்ட அனைவரும் ஒன்று சேர்ந்து போராட வேண்டிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இது நல்ல அறிகுறி. ஒன்று சேராமல் சமுதாய மாற்றத்தைக் கொண்டு வர முடியாது'' என்றார்.

''சங்கம் இல்லாத இடங்களில்தான் போராட்டமும், போராட்ட உணர்வும் அதிகம் இருக்கிறது'' எனக் கூறி, தொழிற்சங்க இயக்கங்களின் பலவீனத்தைச் சுட்டிக் காட்டிய அவர், போராட்ட உணர்வு அதிகமுள்ள பகுதிகளைச் சேர்ந்த பெண்கள், ''போராட்டத்தைத் தவிர வேறு வழியில்லை; நாம் செத்தாலும் பிள்ளைகளாவது வாழட்டும் எனக் கூறுவதாக''க் குறிப்பிட்டார்.

''தமிழகத்திலுள்ள ஐந்து இலட்சம் கைத்தறிகளில் மூன்றே முக்கால் இலட்சம் கைத்தறிகள் கூட்டுறவு சங்கங்களில் உள்ளன. ஆனால், கூட்டுறவு சங்கங்களோ நெசவாளியே இல்லாத போலி உறுப்பினர்களின் மூலம், ஆளுங்கட்சியின் கொள்ளைக்கூடாரமாகி விட்டது. கைத்தறிக்காக ஒதுக்கப்பட்ட 22 இரகங்கள், இன்று பதினொன்றாகக் குறைக்கப்பட்டு விட்டது. தாராள இறக்குமதியால் கைத்தறிப் பட்டுத் தொழில் கூட நசிவடைந்து வருகிறது'' எனப் பாதிப்புகளைப் பட்டியல் இட்ட தோழர். சோமு, இதற்குத் தீர்வாக,

''கைத்தறி ஒதுக்கீடு சட்டம் கறாராக அமல்படுத்தப்பட வேண்டும்; கண்காணிப்பில் நெசவுத் தொழிலாளிக்கு உறுப்பினர் தேவை; கூட்டுறவு சங்கங்களில் நெசவாளி இல்லாத போலி உறுப்பினர்களை நீக்கவேண்டும்; சங்கங்களுக்கு நிதி ஆதாரம் தேவை; தேங்கிய துணிகளை கோ-ஆப்டெக்ஸ் வாங்க வேண்டும்; நெசவாளர்களுக்குத் தரப்படும் கடனுக்கான வட்டியைக் குறைக்க வேண்டும்; 60 வயதை அடைந்த நெசவாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும். ஓய்வூதியம் வழங்காததால் பல நெசவுத் தொழிலாளர்கள் வயதான காலத்தில் பிச்சையெடுத்து வயிற்றைக் கழுவுகிறார்கள். தனியாரிடம் வேலை செய்யும் நெசவாளர்களைக் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்க வேண்டும்'' எனக் குறிப்பிட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

# சிவில் சட்டத் திருத்தம்: சட்டபூர்வ கட்டடப் பஞ்சாயத்து

## - வழக்குரைஞர் பானுமதி, திருச்சி.



"சட்டத்தில் மாற்றங்கள் கொண்டு வருவதால், எனக்கென்ன என்று பலர் கேட்கிறார்கள்" எனக் குறிப்பிட்ட வழக்குரைஞர் பானுமதி, சிவில் சட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதன் பின்னணி பற்றியும், இம்மாற்றங்களால் நீதித்துறை முற்றிலுமாக பணமூட்டைகளின் கைப்பாவையாக மாறப் போவது பற்றியும் தனது உரையில் எடுத்துக் கூறினார்.

"இந்த மாற்றம் திட்டமிட்டு செய்யப்படுகின்ற மாற்றம்; உலக மயமாதலின் பாதிப்பு இது; உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைப் படி பல்வேறு சேவைத் துறைகளில் தனியார் நுழைவதைப் போல, சேவைத்துறையின் கீழ் வரும் வழக்குரைஞர் தொழில் மற்றும் நீதி மன்றத்திலும் தனியார்மயம் நுழைகிறது" என்றார்.

"வழக்குரைஞர்கள் சட்டத்தில் கொண்டு வரப்படும் மாற்றத்தினால், இனி வழக்குரைஞர் தொழிலில் பன்னாட்டு நிறுவனங்கள் நுழையும். இந்தியாவில் ஒருவர் சட்டப்படிப்பை முடித்தவுடனேயே ஒரு டேபிள், நாற்காலியைப் போட்டுக் கொண்டு, நாலு வக்காலத்தை வைத்துக் கொண்டு அலுவலகத்தைத் தொடங்கி விடலாம். ஆனால், அமெரிக்காவில் இப்படி கிடையாது. அங்கே, வழக்குரைஞர் தொழில் நிறுவனமயமாகி இருக்கிறது. இந்தியாவில் சட்டப்படிப்பை முடித்தவுடன் பார் கவுன்சிலில் பதிவு செய்கிறோம்; அமெரிக்காவில் சட்டப்படிப்பை முடித்தவர்கள், எந்த நிறுவனத்தில் வழக்குரைஞர்களாகப் பதிவு செய்வது என யோசனை செய்வார்கள். அப்படிப்பட்ட நிறுவனங்கள்தான் இந்தியாவில் நுழையப் போகின்றன. இதனால் சாதாரண மக்கள் வழக்குரைஞர்களை அணுக முடியாத நிலை ஏற்படும்" என வழக்குரைஞர் தொழிலில் ஏற்படவுள்ள மாற்றங்களைத் தொட்டுக் காண்பித்தார்.

"சிவில் சட்டத்தில் கொண்டு வரப்படும் மாற்றங்கள், நீதி பரிபாலன முறையை, அதாவது, சட்டப்படி விசாரித்துத் தீர்ப்பு வழங்க வேண்டிய முறையையே மாற்றுகிறது. இந்த சிவில் சட்டத் திருத்தம் தற்பொழுதுள்ள மக்கள் நீதிமன்றங்களை (லோக் அதாலத்) நிரந்தர நீதிமன்றங்களாக மாற்றுகிறது. இங்கு விரைவாகத் தீர்ப்பு கிடைக்கலாம்; ஆனால், நியாயமானத் தீர்ப்பு கிடைக்குமா?"

"நிரந்தர மக்கள் நீதிமன்றத்தில் ஒரு நீதிபதியும், இரண்டு உள்ளூர் பிரமுகர்களும் தீர்ப்பு வழங்குவார்கள். இந்த உள்ளூர் பிரமுகர்கள் ஆளுங்கட்சிக்காரர்களாகவோ, ஆளுங்கட்சிக்கு நெருக்கமானவர்களாகவோதான் இருப்பார்கள்."

நமது நாட்டில் நீதிபதிகளின் நியமனத்தை சூட்கேசின் கனம்தான் தீர்மானிக்கிறது. சென்னை உயர்நீதி மன்றத்தில் ஜகதீசன் என்ற நீதிபதி டான்சி வழக்கை விசாரிக்கக் கூடாது என வழக்குரைஞர்களே போராடினார்கள். உச்சநீதி மன்றத்தில் வழக்கு போட்டார்கள். திருச்சியில் பி.டி. செல்வம் என்ற சப்-ஜட்ஜ் இருக்கிறார். இவர், வழக்கில் ஆஜராகும் வழக்குரைஞர்கள் தன்னைத் தனியாகச் சந்தித்தால்தான் வழக்கையே விசாரணைக்கு எடுத்துக் கொள்வார். சமீபத்தில் அம்பலமான பெட்ரோல் பங்க் ஊழலில் ஓய்வு பெற்ற நீதிபதிகளுக்கும் பங்கு இருக்கிறது. இதுதான் நீதிபதிகளின் இலட்சணம்.

"சிவில் சட்டத் திருத்தத்தின்படி உருவாக்கப்படும் நிரந்தர மக்கள் நீதிமன்றங்களில், விசாரித்துத் தீர்ப்பு வழங்க வேண்டியதில்லை. வழக்குத் தொடுப்பவர் இந்த நீதிமன்றத்திற்கு வர வேண்டியதில்லை. அவரைக் குறுக்கு விசாரணை செய்ய முடியாது. சாட்சிகளிடம் கூட நீதிமன்றத்தில் விசாரணை நடத்த வேண்டிய அவசியம் இல்லை. கமிசனராக நியமிக்கப்படும் வழக்குரைஞர், தனக்கு விருப்பப்பட்ட நேரத்தில், இடத்தில் சாட்சிகளை விசாரித்து, நீதிபதிக்கு ஓர் அறிக்கையைக் கொடுத்து விடலாம். பொய்ச் சாட்சிகளைக் கண்டுபிடிக்கவே முடியாது. நீதிபதி, விசாரித்துத் தீர்ப்பு வழங்குவதற்குப் பதிலாக, வழக்குரைஞர்கள் கொடுக்கும் அறிக்கைகளைப் படித்துப் பார்த்து தீர்ப்பு வழங்குவார். இத்தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ய முடியாது.

"போலீசு, தாதாக்கள், ஆளுங்கட்சிக்காரர்கள் செய்து வரும் கட்டப் பஞ்சாயத்து, சிவில் சட்டத் திருத்தத்தின்படி சட்டபூர்வமாக்கப் பட்டுள்ளது. ஏற்கனவே, குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களில் விசுவ இந்து பரிசத் இப்படிப்பட்ட விசாரணைகளை நடத்தி நீதிமன்றங்களை முடக்கிவிட்டன. இந்தக் கட்டப் பஞ்சாயத்து முறை இந்தியா முழுவதும் பரவப்போகிறது" என சிவில் சட்டத் திருத்தத்தால் ஏற்படப் போகும் அபாயங்களை விவரித்த வழக்குரைஞர் பானுமதி, "நீதிமன்றங்களின் சுயேச்சைத் தன்மையை முற்றிலுமாக ஒழித்துக் கட்டுவது; மக்களை நுழைய விடாமல் நீதிமன்றங்களை இழுத்து மூடுவது - இவைதான் இச்சட்டத் திருத்தத்தின் நோக்கம்" எனக் குறிப்பிட்டார்.

"இச்சட்டத் திருத்தத்தை எதிர்த்தும், தமிழக அரசு அறிவித்துள்ள நீதிமன்றக் கட்டண உயர்வை எதிர்த்தும் வழக்குரைஞர்கள் நடத்திய போராட்டத்தில் கைது செய்யப்பட்ட வழக்குரைஞர்களுக்குப் பிணையோ, குற்றம் சாட்டப்பட்ட வழக்குரைஞர்களுக்கு முன் ஜாமீனோ வழங்க நீதிமன்றம் மறுத்துவிட்டது. இது, போலீசும் நீதிமன்றமும் வழக்குரைஞர்களின் மீது கை வைக்காது என நம்பிக் கொண்டிருந்த வழக்குரைஞர்களின் மாயையை உடைத்துவிட்டது" என வழக்குரைஞர்களின் போராட்டத்தின் விளைவுகளைச் சுட்டிக் காட்டிய அவர், "வழக்குரைஞர்கள் போராட்டத்தை மக்களிடம் எடுத்துச் செல்லவில்லை" என அதன் பலவீனத்தையும் சுட்டிக் காட்டினார்.

"சிவில் சட்டத் திருத்தத்தை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது; வழக்குரைஞர்கள் போராட்டத்தைக் கைவிட்டால்தான் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்வோம் என உச்சநீதி மன்றம் மிரட்டுகிறது; இந்த வழக்கில் ஒப்புக்குச் சப்பாணியாகத் தீர்ப்பு வரலாம். ஆனால், சட்டத் திருத்தத்தை முற்றிலுமாகக் கைவிடமாட்டார்கள். ஏனென்றால், பன்னாட்டு நிறுவனங்களுக்காகதான் இச்சட்டத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது"

இந்திய அரசியல் சாசனத்தில் இந்தியா ஜனநாயக நாடு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது; ஆனால், இங்கே ஜனநாயகம் இல்லை. சோசலிச நாடு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது; ஆனால், இங்கே சோசலிம் இல்லை. எனவே, சட்டத்தை நம்பிப் பலனில்லை. ஒன்றுபட்ட போராட்டம்தான் தீர்வு" என வழக்குரைஞர்களை மக்களுடன் இணைந்து போராட அறைகூவல் விடுத்தார், வழக்குரைஞர் பானுமதி.



படிப்பகம்

www.padippakam.com

# ஒன்றுபட்டுப் போராடாமல் இருப்பது சமூக அநீதி



## — பேராசிரியர். சாந்தாராம், மாநிலச் செயலர், அரசுக் கல்லூரி ஆசிரியர் மன்றம், தமிழ்நாடு.

''தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மறியல், உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்; உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் போராட்டத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள்; கல்லூரி ஆசிரியர்களின் போராட்டம் நடந்து ஓய்ந்திருக்கிறது'' எனத் தமிழகக் கல்வித் துறையில் நிலவி வரும் போராட்டச் சூழலைக் குறிப்பிட்டுத் தனது உரையைத் தொடங்கிய பேராசிரியர். சாந்தாராம், ''சில விசயங்களை வெளிப்படையாகப் பேச வேண்டியிருக்கிறது; அதற்கான மேடை இது. ஏனென்றால், ஆசிரியர் சங்கங்களைச் சரி செய்ய வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது'' எனச் சுட்டிக் காட்டினார்.

''திருச்சியில் உள்ள ஈ.வெ.ரா அரசுக் கல்லூரியில் தற்பொழுது 1000 ரூபாய் கட்டணத்தில் ஒரு மாணவன் கணினி முதுகலை பட்டயப் படிப்பை (PGDCA) முடித்துவிடலாம்; ஆனால், இக்கல்லூரி பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்படுவதால், இனி இந்தப் படிப்பிற்கான கட்டணம் 15,000 ரூபாயாக உயர்ந்து விடும்'' எனக் குறிப்பிட்ட அவர், ''அக்கல்லூரியில் பயிலும் 2,200 மாணவர்களுள், 1631 மாணவர்கள் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள். 250 மாணவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்கள்; 19 மாணவர்கள்தான் மேல்சாதியைச் சேர்ந்தவர்கள்'' என்ற புள்ளி விவரத்தையும் எடுத்து வைத்தார். இதன் மூலம், அரசுக் கல்லூரிகளைப் பல்கலைக்கழகத்துடன் இணைப்பதால் பாதிக்கப் படப் போவது தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஏழை மாணவர்கள்தான் என்பதை ஆணித்தரமாக நிறுவினார்.

''அரசுக் கல்லூரிகளைப் பல்கலைக் கழகத்துடன் இணைப்பது அக்கல்லூரிகளை மூடிவிடுவதுதான்'' என அம்பலப்படுத்திய பேரா.சாந்தாராம், கிராமப்புறங்களிலுள்ள ஐந்து ஆசிரியர் பள்ளிகளை, ஈராசிரியர் பள்ளிகளாக மாற்றிவரும் தமிழக அரசின் மக்கள் விரோதப் போக்கையும் தோலுரித்தார்.

''தமிழகத்தின் அடித்தட்டு மாணவர்களுக்குக் கல்வியுரிமை மறுக்கப்படுவது திடீரென்று இன்று வரவில்லை; 1985 தொடங்கி பதினெழு ஆண்டுகாலமாக இருந்துவரும் புற்றுநோய் இது''

''எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் கல்வி அமைச்சராக இருந்த பொன்னுசாமி, திருச்சியில் உள்ள ஈ.வெ.ரா. அரசுக் கல்லூரியில் ஆசிரியராக வேலைபார்த்து வந்தபொழுதே, மணப்பாறையில் இருந்து முறுக்கு வாங்கிக் கொண்டு வந்து விற்கும் சைடு பிசினஸ் நடத்தி வந்தான். முறுக்கு வியாபாரத்துக்குத் தோதாக ஒயின் ஷாப்புகளையும் எடுத்து நடத்தி வந்தவன் அவன்.''

''தி.மு.க. அமைச்சர் பேரா. அன்பழகன் எதையுமே செய்யாமல், மூக்கை நொண்டிக் கொண்டே போய்விட்டார்''.

''இன்று கல்வி அமைச்சராக இருக்கும் தம்பிதுரை முழு கல்வி வியாபாரி. தருமபுரி பகுதியில் அதியமான் கலை - அறிவியல் கல்லூரி, பொறியியல் கல்லூரி உள்ளிட்ட ஏழு கல்லூரிகளை நடத்தி வருகிறார். பெங்களூர், பீகாரில் கூட அவருக்குக் கல்லூரிகள் உண்டு. இங்கே உள்ளவனுக்குத் தெரிந்துவிடக் கூடாது என்பதற்காகவே அரியானா மாநிலத்தில் சட்டக் கல்லூரியைத் தொடங்கி இருக்கிறார். இப்படிப்பட்ட கல்வி வியாபாரிகள்தான் கல்வி அமைச்சர்கள்'' என அம்பலப்படுத்திய பேரா.சாந்தாராம், இந்தப் பதினேழு ஆண்டுகளில் ஆசிரிய இயக்கங்களில் ஏற்பட்டுள்ள சமரசம், பின்னடைவையும் சுட்டிக் காட்டினார்.

''அரசுக் கல்லூரி ஆசிரியர் கழகம் 1985–க்குப் பின் அரசை எதிர்த்து, கல்வி வியாபாரமாக்கப்படுவதை எதிர்த்துப் போராட்டம் நடத்தவில்லை. மாறாக, இந்தப் பதினேழு ஆண்டு காலமும் சங்கத் தலைமை தன்னை முன்னிலைப் படுத்திக் கொள்வதில்தான் குறியாக இருந்தது. தமிழ்நாடு அரசுக் கல்லூரி ஆசிரியர் கழகத்தின் தலைவராக இருந்த சி.சுப்பிரமணியன், இன்று பாரதியார் பல்கலைக்கழகத்தின் பதிவாளராக இருக்கிறார் என்றால், அவர் தமிழக அரசுடன் சமரசமாக நடந்து கொண்டதுதான் காரணம்.''

''இந்தச் சமரசத்தின் காரணமாக, இன்னொருபுறம், கல்லூரி ஆசிரியர்களைக் கொத்தடிமைகளாக நடத்தும் கௌரவ ஆசிரியர் பதவிகளைக் கல்லூரிகளில் புகுத்தி விட்டது தமிழக அரசு. இந்த ஆண்டில் செப்டம்பரில் 750 கௌரவ ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதில் ஒதுக்கீடு சலுகை கிடையாது. பி.எச்.டி. படித்து முடித்த இந்த ஆசிரியர்கள், ஒரு மணி நேரம் வகுப்பு நடத்தினால் சம்பளம் நூறு ரூபாய். மாதம் 3500 ரூபாய் கிடைத்தாலே பெரிய விசயம். வேறு எந்த சலுகையும் கிடையாது. சுயநிதிக் கல்லூரிகளில் இருக்கும் வேலை உத்திரவாதம் கூட இந்தக் கௌரவ ஆசிரியர்களுக்கு கிடையாது.''

''அரசுக் கல்லூரிகளைப் பல்கலைக் கழகங்களுடன் இணைப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்த அரசுக் கல்லூரி ஆசிரியர் கழகத்தைத் தமிழக அரசு அழைத்தது. போராட்டத்தில் இருக்கும் ஒரு

**போலீசாரால் கொடூரமாகத் தாக்கப்பட்ட மேலூர் அரசுக் கல்லூரி மாணவர்கள்.**





படிப்பகம்

www.padippakam.com

சங்கத்தை மட்டும் பேச்சுவார்த்தைக்கு அழைப்பது சரியில்லை என நாங்கள் (அரசுக் கல்லூரி ஆசிரியர் மன்றம்) கல்வியமைச்சர் தம்பிதுரையிடம் கூறிய பொழுது, அமைச்சர், 'அவர்கள், எங்களைப் பேச்சுவார்த்தைக்கு அழையுங்கள் என லெட்டர் கொடுத்திருக்கிறார்கள். நீங்களும் கொடுங்கள்; அழைக்கிறோம்' என்றார். போராட்டத்தில் இருக்கும் எங்களுக்கு அப்படிபட்ட பழக்கம் இல்லை என நாங்கள் மறுத்து விட்டோம். அதன் பின்பு, தமிழக அரசு எங்களையும் பேச்சு வார்த்தைக்கு அழைத்தது.''

கல்லூரி ஆசிரியர்கள் போராட்டத்தில் இறங்கிவிட்டார்கள் என்பதற்காக அரசு எங்களைப் பேச்சு வார்த்தைக்கு அழைக்கவில்லை. அனைத்து அரசுக் கல்லூரிகளையும் சேர்ந்த மாணவர்கள் போராட்டத்தில் குதித்து விட்டார்கள் என்ற அச்சத்தின் காரணமாகத்தான் கல்லூரி ஆசிரியர்களைப் பேச்சுவார்த்தைக்கு அரசு அழைத்தது.

''பேச்சு வார்த்தையின் பொழுது ஜெயா, நீங்கள் ஆசிரியர் சங்கச் செயலரா, மாணவர் சங்கச் செயலரா' என மிரட்டினார். 'ஆசிரியர் இல்லாமல் மாணவன் இல்லை; மாணவன் இல்லாமல் ஆசிரியர் இல்லை' என நாங்கள் (அரசுக் கல்லூரி ஆசிரியர் மன்றப் பிரதிநிதிகள்) எதிர்ப்பு தெரிவித்தோம்.''

''நான் மக்களிடம் இதைச் சொல்வேன்'' என்கிறார் ஜெயா. இதன் பொருள் ஸ்டிரைக் தொடர்ந்தால் உள்ளே புகுந்து உதைப்பேன் என்பதுதான். இந்த மிரட்டலுக்குப் பின் தமிழ்நாடு ஆசிரியர் கல்லூரி கழகத்தின் பிரதிநிதிகள் போராட்டத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்வதாகக் கூறி விட்டு, போராட்டக் காலத்திற்கான சம்பளத்தைப் பற்றி பேசத் தொடங்கினார்கள். எதையும் மனதில் வைத்துக் கொள்ளாதீங்க அம்மா என்று ஜெயாவிடம் வேண்டியும் கொண்டார்கள்.''

''தொடக்க கல்வி தொடங்கி கல்லூரி வரை ஆசிரியர் சங்க இயக்கங்களில் இப்படிபட்ட இரு போக்குகளைக் காண முடியும். தொழிலாளர்கள், ஊழியர்களுடன் இணைந்து போராடும் பேரமைப்பை உருவாக்க வேண்டும் என்று சொன்னால், சங்கத் தலைமையோ தங்களின் அடையாளம் (Identity) போய்விடும் என்கிறது.''

''மேலூரிலும், மதுரையிலும் மாணவர்களும், மாணவிகளும் போலீசிடம் அடிபட்டுக் கொண்டிருக்கும் பொழுது, வியாசர்பாடியில் போலீசு வீடு புகுந்து மாணவர்களைத் தேடிக்கொண்டிருக்கும் பொழுதுதான் கல்லூரி ஆசிரியர்களின் போராட்டம் திரும்பப் பெறப்பட்டுள்ளது. மேலூரில் மாணவர்கள் மீது போட்ட வழக்குகளைத் திரும்பப் பெற மறுக்கிறது அரசு. இந்த நிலையில் விஜய பாஸ்கர் எம்.எல்.ஏ. மாணவர்களை அழைத்துக் கொண்டுபோய், ஜெயாவிடம் பேச்சு வார்த்தை நடத்துகிறார். அவனெல்லாம் மாணவனே இல்லை. கல்லூரி திறக்கும்பொழுது தகராறு எழும்.''

''மாணவனுக்கு வேலை இல்லை, குழந்தைக்கு கல்வி இல்லை என்பதுதான் இன்றைய நிலை. ஆசிரியர்கள் மட்டும் போராட்டம் நடத்தி வெற்றி பெற முடியாது. ஒன்றிணைந்து போராடுவதற்கான வாய்ப்பு அருமையாக உள்ளது. ஆசிரியர்கள் மாணவனின் தவறைச் சுட்டிக் காட்டுவது போல, ஆசிரியர்களின் தவறைச் சுட்டிக் காட்டும் உரிமை மாணவனுக்கு உண்டு. ஓராண்டு கல்வி பாழாய் போனாலும் பரவாயில்லை; வேலை போனாலும் பரவாயில்லை என்ற உறுதியோடு இந்த அநீதியை எதிர்த்துப் போராட வேண்டும்.''

**''ஆசிரியர்களின் தவறைச் சுட்டிக் காட்டும் உரிமை மாணவனுக்கு உண்டு. ஓராண்டு கல்வி பாழாய்ப் போனாலும் பரவாயில்லை; வேலை போனாலும் பரவாயில்லை என்ற உறுதியோடு இந்த அநீதியை எதிர்த்துப் போராட வேண்டும்.''**



# ஒரு தாழ்த்தப்பட்ட ஏழை மாணவனின் உள்ளக் குமுறல்

**எம் பேரு பெருமாள். நான் திருச்சி ஈ.வெ.ரா. கல்லூரியில் இயற்பியல் மாணவன். கல்லுடைக்கும் தொழிலாளர் குடும்பத்தில் இருந்து படிக்க வந்திருக்கேன். கல்லுடைக்கும் போது அடிபட்டு எங்கப்பா இறந்து போயிட்டாரு. இப்ப எங்க அம்மாதான் கல்லுடைச்சு குடும்பத்தக் காப்பாத்துது.**

**12-ஆம் வகுப்பு வரை படிச்சது போதும்னு வீட்ல சொன்னாங்க. நான்தான் படிப்பில உள்ள ஆர்வத்தில மூணு மாசம் கல்லுடைச்சு, அந்தப் பணத்தை வச்சுக் கல்லூரியில சேர்ந்தேன்.**

**விடுதி இலவசம்னு சொன்னாலும், விடுதியில் சேர்றதற்கு 2500 ரூபாய் பணம் கொடுத்தேன். இது போக, அட்மிஷனுக்குன்னு சொல்லி இருநூறு ரூபா வாங்கினாங்க. விடுதியில இருக்கிற 200 மாணவனும் 2500 ரூபாய் கொடுத்திருக்கோம். இந்தப் பணத்தை வார்டனும் சமூக நலத்துறை அதிகாரிகளும் பங்கு போட்டுக்கிறாங்க.**

**விடுதி வார்டன் மாதமொன்றுக்கு அடிக்கும் கொள்ளை 50,000 ரூபாய் தேறும். கண்ணு முன்னால இந்த அநியாயம் நடந்தும் தட்டிக் கேட்க முடியல. தைரியமா தட்டிக் கேட்கும் மாணவனுக்கு வார்டன் நூறு ரூபா கொடுத்துத் தண்ணி போடச் சொல்வாரு. இல்லைன்னா, கைத்தடிகளைத் தூண்டி விட்டு அடிப்பாரு.**

**விடுதியில் கக்கூஸ் வசதி கேட்டு நாங்க போராடினோம். வார்டனே ஆட்கள வைச்சு தாசில்தார் மேல கல்லெறிஞ்சு விட்டு, எங்க மேல பழிய போட்டு, போலீசு ஸ்டேஷனுக்கு இழுத்துகிட்டு போனாங்க.**

**நான் சேரும்போது கல்லூரிக் கட்டணம் 900 ரூபாய். இனி இது 15,000 ரூபாயாகும். எங்க அம்மாவுக்கு அறுபது வயது. ஒருநாள் வேலை செஞ்சா அவுங்க கூலி முப்பது ரூபாய். இந்த நிலைமையில நான் எப்படி படிக்க முடியும்?**

●○●


படிப்பகம்

www.padippakam.com



# உலக வர்த்தகக் கழகத்தின் சனிப் பார்வை

## — டாக்டர். சிவசாமி, தலைவர், தமிழக விவசாயிகள் சங்கம், தமிழ்நாடு.

“வறட்சி... காவிரியில் தண்ணீர் வர வில்லை... விவசாயம் பட்டுப் போய்விட் டது” எனத் தமிழக விவசாயத் தொழிலின் இன்றைய அவல நிலையைக் குறிப்பிட்ட தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் டாக்டர். சிவசாமி, “காவிரியில் தண்ணீர் வந்தால், விவசாயத்தை அழி யாமல் காப்பாற்ற முடியுமா?” என்று கேள்வியை எழுப்பினார். அதற்கு விடை யாக, “உலக வர்த்தகக் கழகத்தால் விவ சாயம் அழிகிறது” என்பதை, தமிழக விவசாயிகளை அச்சுறுத்திவரும் மிகப் பெரும் அபாயத்தைத் தனது உரை யெங்கும் சுட்டிக் காட்டினார்.

“இரண்டு ஆண்டுகளாகவே தமிழ கத்தில் சரியாக மழை இல்லை. கிரா மத்தில் குடிக்கக்கூடத் தண்ணீர் இல்லை. கடந்த ஆண்டே வறட்சி மாநிலமாக அறி வித்திருக்க வேண்டும். ஆனால், ஜூன் மாதம் வரை ஜப்தி நடந்தது. ஜப்தியைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்பதற்கா கவே வறட்சி மாநிலமாக அறிவிக்க மறுக் கிறார்கள்” என ஜெயா கும்பலின் விவ சாய விரோதப் போக்கை அம்பலப்படுத் திய டாக்டர். சிவசாமி, “கிராமங்களுக்கு இரண்டு சமயங்களில்தான் கார் வரும். ஒண்ணு எலெக்சன் டைம்; அதைவிட்டா, ஜப்தி பண்ணுவதற்குத் தான்”. “கிராமப் புற விவசாயிகள் ரேசன் அரிசி வாங்கக் கூடப் பணம் இல்லாமல், பட்டினி கிடக்கும் பொழுதுதான் ஜப்தி நடக்கிறது. முதல்ல நிலவள வங்கி அதிகாரி வருவான்; அப்புறம் கூட்டுறவு வங்கி” என விவசாயிகள் மீது தொடுக்கப்படும் பொருளாதாரத் தாக்குதல்களை வேத னையோடு குறிப்பிட்டார்.

“இந்தக் கூட்டுறவு வங்கிகளோட வேலையே விவசாயிகளோட சொத்துக்க ளை ஜப்தி பன்றதுதான். இந்தக் கூட்டுறவு வங்கியில் ஒரு விவசாயி பத்தாயிரம் ரூபாய் லோன் போட்டா, பிரசிடெண் டுக்கு 1000 ரூபாய் கமிஷன் கொடுக் கணும்; இன்னொரு 1000 ரூபாய்க்கு ஷேர் (பங்கு) வாங்கிக்கணும். எட்டா யிரம் ரூபாய்தான் கைக்கு வரும். வறட்சி காலத்துல கடன் கேட்டா, இந்த எட்டா யிரம் ரூபாயில் நாலாயிரம் ரூபாய்க்கு உரம் வாங்கணும். வெள்ளாமையே இல்லாதபொழுது உரத்த வெச்சுக்கிட்டு என்ன பண்றது? உரக் கடையில வந்த விலைக்கு விற்க வேண்டியதுதான்.”

“கூட்டுறவு வங்கி, நாபார்டு வங்கியில் 5%-க்குக் கடன் வாங்கி, அதை விவசாயிகளுக்கு 13%-க்கு கட னாத் தருது. கடன்கட்ட முடியாட்டா, அப ராத வட்டியெல்லாம் போட்டு 25%க்கு வந்துடுது. அதனால, வேளாண் கூட்டு றவு சங்கத்தை ஒழின்னு போராட்டம் நடத்தப் போறேன்” என்றார்.

திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள வத்த லக்குண்டுல பெரிய தென்னை விவசா யியைப் பார்த்தேன். 10 ஏக்கர் நிலம் அவ ருக்கு இருக்கு. இரண்டு கேணி, இரண்டு போர் அவர் தோட்டத்துல இருக்கு. ஆனா, இன்னிக்குக் குடிக்கக் கூடத் தண்ணியில்லை. தென்னையெல்லாம் பட்டுப் போச்சு. தண்ணியில்லாததால வீட்டுல இருந்த மாடு, ஆடு, கோழி எல்லாத்தையும் ஒவ்வொண்ணா வித்துட் டாரு. “நெசவாளிகளைப் போல நாங்களும் கஞ்சித் தொட்டிக்குப் போராட வேண்டியதுதான்” என அந்தத் தென்னை விவசாயி தன்னிடம் கூறிதாகச் சொன்ன டாக்டர். சிவசாமி, “இந்த வறட்சி பெரிய விவசாயி, சின்ன விவசாயி என்ற வேறுபாடையெல்லாம் ஒழித்துக் கட்டி விட்டதாகக்” குறிப்பிட்டார்.

“தமிழகத்தில் 50 சதவீத தென்னை மரம் பட்டுப் போச்சு. ஆனாலும், தேங்காய் விலை உயரல; தேங்காய் எண்ணெய் விலை உயரல. காரணம், கொப்பறை இறக்குமதி!”

“சமீபத்துல தென்னை மரத்தை யெல்லாம் சிலந்திப் பூச்சி தாக்கியது. இதுக்கும், உலக வர்த்தகக் கழகத்திற்கும் சம்பந்தம் இருக்குமோன்னு எனக்கொரு சந்தேகம். ஏன்னா, கோக்கிற்குப் போட்டியே நம்மூர் இளநீர்தான்.”

“ஒரு கறவ மாட்டை வெச்சுக்கிட்டுப் பொழைக்கக் கூட இப்ப வழியில்லை. பாலுக்கு விலை கட்டுப்படியாகலே. அதே சமயம் டென்மார்க்கில் இருந்து பால் பவுடர் இறக்குமதியாகுது. இந்தப் பால் பவுடரை வாங்கி, இதுல கெமிக் கல்லைக் கலந்து, அதை 'ஆரோக்கியா' பாலுன்னு விக்கிறான். நாடு முழுவதும், அப்படி உலக வர்த்தகக் கழகத்திற்கு ஏஜெண்டுகள் இருக்கிறாங்க.”

“ஒரு பக்கம் வறட்சி; இன்னொரு பக்கம் அரசின் தாக்குதல். இதுக்கு நடு வுல மாட்டிக்கிட்ட விவசாயிகளால, தன்னோட குழந்தைகளைப் படிக்க வைக்க முடியல; நோய்க்கு வைத்தியம் பார்க்க முடியில; நோயோடவே உழைக் கிறான்; நோயோடவே போராடுறான். ஆதிச்சபுரம் கிராமத்துல வந்து பேசிய விவசாயப் பெண்கள் இதைத்தானே சொன்னாங்க” என விவசாயிகளின் வாழ்க்கை அழிவதைத் தொட்டுக் காட்டிய அவர், “இந்த அரசாங்கம் எங்க ளுக்குத் தொந்தரவு கொடுக்காம இருந்

## “இது மக்கள் விரோத அரசுதான்”

### — ஜெயாவின் ஒப்புதல் வாக்குமூலம்

“வறட்சி பாதித்ததாக மாவட்டங் களை அறிவித்தால் நிலவரி ரத்து மூலம் 6 கோடி இழப்பு ஏற்படும். உள்ளாட்சி அமைப்புகளுக்கு உள்ளூர் நில வரி ரூ.5.74 கோடி, தல மேல்வரி ரூ.29.15 கோடி இழப்பு ஏற்படும். இதையெல்லாம் கருத்தில் கொண்டு, ஏற்கனவே நிதிச் சிக்கலில் உள்ள உள்ளாட்சிகளுக்கு மேலும் சுமையை ஏற்படுத்துவதைத் தவிர்க்கவே வறட்சி மாவட்டங்கள் குறித்த அறிவிப்பு எதுவும் வெளி யிடவில்லை” என ஜெயா வறட்சி மாவட் டங்களை அறிவிக்காததற்கு விளக்கம் அளித்திருக்கிறார்.

8,000 கோடி ரூபாய் வரி பாக்கிவைத் துள்ள முதலாளிகளுக்குக் கிடுக்கப் போட்டு வரி பாக்கியை வசூலிக்க விரும்பாத ஜெயா, ரேசன் அரிசி விலையை உயர்த்துகிறார்; அடுத்த வேளை சோற்றுக்குத் திண்டாடும் விவ சாயிகளையும், உழைக்கும் மக்களையும் சுரண்டித்தான் அரசை நடத்துவேன் எனப் பகிரங்கமாகவே அறிவிக்கிறார் எனில், இது எத்தகைய மக்கள் விரோத அரசாக இருக்கும்?


படிப்பகம்

www.padippakam.com

தாலே போதும்'' என்றார்.

கிராமப்புற விவசாயிக்கு உலக வர்த்தகக் கழகம்னு சொன்னா புரியாது. மீட்டர் பொட்டி வைக்கப் போறான்னு சொன்னா போராட்டத்துக்கு வந்துடுவான்'' எனக் குறிப்பிட்ட டாக்டர் சிவசாமி, இலவச மின்சாரம் தமிழக விவசாயத்தின் உயிர்நாடி என விளக்கினார்.

''கிராமப்புற விவசாயிகளின் ஓட்டைப் பெறுவதற்காக, அரசியல்வாதிகள் கொடுத்திருக்கிற சலுகை இலவச மின்சாரம்னு சொல்றாங்க. ஆனா, இலவச மின்சாரம் தமிழக விவசாயிகள் போராடிப் பெற்ற உரிமை. 1970 தொடங்கி 1980 வரை மின்சாரக் கட்டணம் கட்ட முடியாது என போராடி, 43 விவசாயிகளைப் பலி கொடுத்துப் பெற்ற உரிமை''

''மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட பொழுது, தமிழகத்தின் ஆற்று நீர்ப் பிடிப்பு பகுதியெல்லாம் அண்டை மாநிலங்களுக்குப் போய் விட்டது. மழை மேகங்களைத் தடுக்க தமிழகத்தில் மலைகள் கிடையாது. தமிழகம் சமவெளிப் பகுதி. அதனால், தமிழக விவசாயத்திற்கு நிலத்தடி நீரைப் பயன்படுத்துவது அவசியமாகிறது.''

''இந்தியாவின் மற்ற மாநிலங்களிலெல்லாம் கால்வாய்ப் பாசனம், மானாவாரி பாசனம் – இரண்டுதான். கிணற்றுப் பாசனத்தை அதிகமாகப் பார்க்க முடியாது. இந்தியாவில் இருக்கிற 60 இலட்சம் விவசாய பம்ப் செட்டுகளில், 20 இலட்சம் விவசாய பம்ப் செட்டுகள் தமிழகத்தில்தான் இருக்கு. காவிரியில தண்ணி வராததால, காவிரிப் பாசனப் பகுதியிலேயே 3 இலட்சம் பம்ப் செட்டுகள் புதிதா வந்திருக்கு. கிணற்றுப் பாசனம் தமிழகத்தோட தனி அம்சம். இலவச மின்சாரம் அதுக்கு ஆக்ஸிஜன் மாதிரி''

''மற்ற மாநிலங்களிலெல்லாம் அரசு தன்னோட சொந்த செலவில் பாசன வசதியை ஏற்படுத்தித் தருது. ஆனால் தமிழகத்தில விவசாயி தன்னோட சொந்த செலவில கிணறு தோண்டி, போர் போட்டு பாசனத்தை ஏற்படுத்துறான். அதுக்குத்தான் மின்சாரம். அதனால, இது இலவச மின்சாரம் இல்ல; பாசனம்.''

''மற்ற மாநில மொழிகளுக்கும் சமஸ்கிருதத்துக்கும் தொடர்பிருக்கலாம். ஆனால், தமிழுக்கும் சமஸ்கிருதத்துக்கும் தொடர்பே கிடையாதுன்னு சொல்லித்தானே திராவிடக் கட்சிகள் இந்தி மொழியைத் தமிழ்நாட்டுல இருந்து துரத்தினாங்க. அது மாதிரி, மற்ற மாநில பாசனத்துக்கும், தமிழகப் பாசனத்துக்கும் வேறுபாடு இருக்கு. அதனால, மற்ற மாநிலங்களில் இலவச மின்சாரத்தை ரத்து செஞ்சாலும், தமிழகத்துல ரத்து செய்யக் கூடாது''

''எப்ப அரசாங்கம் தமிழக விவசாயிக்குப் பாசன வசதி செஞ்சி தருதோ, அப்ப நாங்களும் மின்சாரத்திற்குக் கட்டணம் செலுத்த தயாரா இருக்கோம். மகாநதி – கோதாவரி – காவேரி – கிருஷ்ணா ஆகிய தென்னக நதிகளை இணைத்தாலே, தமிழகத்துக்கு வருசத்துக்கு 460 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்கும், காவிரிக்காகக் கர்நாடாகத்துக்காரன் கிட்ட கெஞ்ச வேண்டிய அவசியம் இல்லை. கேரளாவில் மேற்கே ஓடி கடல்ல கலக்கிற நதி நீரைக் கிழக்கே திருப்பி விட்டா 2000 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்கும். இதைச் செய்யாம, மின்சாரக் கட்டணம் கட்ட முடியாது. இலவச மின்சாரம் விவசாயிக்குப் போடுற பிச்ச இல்ல''

## சந்திரன் குடும்பத்தில் நடந்த பட்டினிச் சாவு பிற குடும்பத்தில் நடக்காதா?

***— ஆதிச்சபுரம் கிராம விவசாயக் கூலிப் பெண்களின் வாக்குமூலம்***

''மத்தவங்க பரிகாசம் பண்ணுவாங்கன்னு சொல்லி சந்திரன் பொண்டாட்டி தன்னோட புள்ளைகளை அடுத்த வீட்டுக்குப் போகக்கூடாது. தண்ணி வாங்கிக் குடிக்கக் கூட கூடாதுன்னு கட்டுப்பாடு போட்டுருச்சு. எங்க ஊர்ல பதினெட்டாம் பெருக்கு அன்னிக்கி இருக்கப்பட்டவங்க வீட்ல வேல செஞ்சு அரிசி வாங்குவோம். அந்த அரிசிய வாங்கிச் சாப்பிட்டான்னு தெரிஞ்சவுடனே, சந்திரன் பொண்டாட்டி பிரகாச இழுத்துப் போயி அடிச்சுச்சு. நாலு புள்ளைங்க பட்டினியா இருக்கப்ப நீ அப்படி செய்யலாமான்னு சொல்லி அடிச்சுச்சு. செத்தப்ப அந்தப் பையனோட இரப்பையெல்லாம் சுருங்கிப் போச்சு. பட்டினி அந்த வீட்ல மட்டுமா? நாங்க கூட ஒரு வேளைதான் சாப்பிடுறோம். பிரகாசு பட்டினியால சாகல, வயித்த வலியாலதான் செத்தான்னு சொல்ற யாரும் சந்திரன் குடும்பத்துல புகுந்து பார்க்கல''

''இப்ப விவசாய வேலை இல்லாததால ராட்டி தட்டி விக்கிறேன். 100 ராட்டிய 25 ரூபாய்க்கு கேக்குறாங்க. 10 ரூபாய்க்கு அரிசி, 5 ரூபாய்க்கு எண்ணெய், 10 ரூபாய்க்கு மளிகை சாமான் வாங்கி ஒரு வேளதான் சாப்பிடுறோம்'' என்றார் பஞ்சவர்ணம்.

''நான்கு நாட்களா அந்தப் பையன் கஞ்சியும், தண்ணியும்தான் சாப்பிட்டது. சத்துணவு சாப்பிட்டு வர்றேம்மான்னு சொல்லிட்டு போன புள்ளதான் சுருண்டு விழுந்து செத்துப் போச்சு''

''ரேசனில் அரிசி தர்றோமே, பிறகு ஏன் பட்டினிச் சாவுன்னு கேட்குறாங்க. 20 கிலோ அரிசி போதுமா? பத்து நாளைக்குத்தான் வரும். இருபது நாள் பட்டினிதான், விவசாயம் செய்தாதானே அரிசி வாங்க முடியும்''

''எங்க ஊரில் 500 குடும்பம்; 350 குடும்பம் ரேசன் அட்டையைக்கூட அட்குக்கடையில வச்சாச்சு. மைய அரசோட வெளயாட்டுக்கு கூலி விவசாயிகள் தானா கிடைச்சோம்'' எனத் தனது ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்தார், விஜயவள்ளி.

''ஜெயாவுக்கு ஓட்டுப் போட்டீங்கள்ள... அனுபவிங்கன்னு சொல்றாங்க'' என்று எதிர்கட்சிகளின் 'இரக்கத்தை' அம்பலப்படுத்தினார் பானுமதி.

''டெஸ்ட் பண்ண, புதைச்ச குழந்தைய எடுக்கணும்னு சொன்னப்ப நாங்க எல்லாம் மறியல் பண்ணி தடுத்துட்டோம். சந்திரன் குடும்பத்தில் நடந்தது, பிற குடும்பத்தில் நடக்காதா?'' என்ற கேள்வியை எழுப்பி ஆதிச்சபுரம் கிராமம் பட்டினியின் பிடிக்குள் சிக்கிக் கொண்டிருப்பதைக் கூறினார் உமாதேவி.

பிரகாஷ் பட்டினியால் சுருண்டு விழுந்து இறந்ததை அந்தப் பெண்கள் சொல்லத் தொடங்கியவுடனேயே, அவர்கள் நெஞ்சில் நிறைந்திருந்த சோகம், தொண்டையை வந்து அடைத்து விட்டது. அவர்கள் கண்களில் திரண்ட கண்ணீரும், தட்டுத் தடுமாறி வந்து விழுந்த வார்த்தைகளும் பார்வையாளர்களுக்கு அந்தக் கொடுமையைப் புரிய வைத்தன.

சென்ற ஆண்டு ஒரிசாவில் நடந்த பட்டினிச் சாவுகள் பற்றி விசாரணை நடத்திய தேசிய மனித உரிமைக் கமிசன் செத்துப் போனவர்களின் வயிற்றில் மாங்கொட்டை இருந்ததைக் காட்டி, நடந்தது பட்டினிச் சாவல்ல எனச் சாதித்துவிட்டது. ''நாங்கள் தான் ரேசனில் அரிசி போடுகிறோமே, பிறகு எப்படி பட்டினிச் சாவு?'' எனத் திமிரோடு கேட்கிறார் ஜெயா.

பிரான்சு நாட்டு மக்கள் ரொட்டி வாங்க முடியாமல் பசியால் துவண்டு கிடந்த பொழுது, அந்நாட்டின் ராணியாக இருந்த மேரி ஆன்டனாய்ட், ''ரொட்டி கிடைக்கவில்லை யென்றால், கேக் சாப்பிடுங்கள்'' எனத் திமிரோடு கூறினாள். அந்த எதேச்சதிகாரத் திமிருக்கு எதிராக பிரெஞ்சு மக்கள் கலகத்தில் இறங்கினர். மன்னர் குடும்பம் கில்லட்டினில் ஏற்றிக் கொல்லப்பட்டது. ஆனால், இந்தியாவோ அமைதியாக இருக்கிறது. கலகம் பிறந்தால்தான் நியாயம் கிடைக்கும். அமைதிக்குப் பட்டினிச் சாவுகள் தான் பரிசாகக் கிடைக்கும்.


படிப்பகம்

www.padippakam.com



# போராட்டங்கள் தேங்கி நிற்கின்றன; மாற்று வழி என்ன?

— தோழர். மருதையன், மாநிலச் செயலாளர்,
மக்கள் கலை இலக்கியக் கழகம், தமிழ்நாடு.

''இக்கருத்தரங்கம் பற்றிய செய்தி பரவலாக மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும், போராடும் ஆயிரக்கணக்கானோர் இக்கருத்தரங்கிற்கு வரவில்லை. ஏனென்றால், அவர்களுக்கு வேறுவிதமான நம்பிக்கை இருக்கிறது. சுரண்டல் லாட்டரி, வாஸ்து, குரு சாஸ்திரம் என விதவிதமான நம்பிக்கைகள் இருப்பதைப் போல, இந்த அரசாங்கம் ஏதாவது செய்யாதா என்று மக்கள் நம்புகிறார்கள்'' என இந்த இக்கட்டான நேரத்திலும் மக்கள் ஓட்டுச் சீட்டு அரசியலின் மீது நம்பிக்கை வைத்திருப்பதை தோழர். மருதையன் ஆதங்கத்தோடு குறிப்பிட்டார்.

''சென்ற தேர்தலில் மக்கள் ஜெயாவிற்கு ஓட்டுப் போட்டார்கள். ஜெயா ஆட்சிக்கு வந்தால் பணப்புழக்கம் பெருகும் என்ற நம்பிக்கை அவர்களிடம் இருந்தது. ஜெயா ஏற்கனவே அம்பலமான கொள்ளைக்காரியாச்சே எனக் கேட்ட பொழுது, சம்பாரிச்சா என்ன சார்? இலஞ்சம் வாங்கினா என்ன சார்? எனப் பலர் பணப்புழக்கத்தை முன் வைத்து ஜெயாவின் கொள்ளையைக் கூட நியாயப்படுத்தினார்கள். ஆனால், இன்று பணப்புழக்கம் இல்லை. அப்படியென்றால் ஜெயா திருந்திவிட்டாரா?'' என நக்கலாகக் கேள்வி எழுப்பிய தோழர். மருதையன், ''தாராள இறக்குமதியால் பணப்புழக்கம் ஏற்படாது என்பதை நாங்கள் உலக வர்த்தகக் கழக ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்து போட்ட நாளில் இருந்தே கூறி வருகிறோம்'' எனக் குறிப்பிட்டார்.

''கருணாநிதியின் ஆட்சி இந்தளவிற்கு மோசமாக இருக்காது எனப் பலர் நம்புகிறார்கள். அதனால்தான் மக்களின் போராட்டங்கள் நடந்து கொண்டு இருக்கும்பொழுது, கருணாநிதி கோவாவுக்குப் போகிறார், அடுத்த தேர்தலில் நம்மிடம்தான் வரவேண்டும் என்ற நம்பிக்கை கருணாநிதிக்கு'' என்றார் மருதையன்,

''அரசுக் கல்லூரிகளைப் பல்கலைக் கழகத்துடன் இணைப்பதை எதிர்த்துப் போராடிய பேராசிரியர்கள் ஜெயாவின் வாக்குறுதியை நம்பி, போராட்டத்தைக் கைவிட்டு விட்டார்கள். ஆனால், மாணவர்கள் நம்பிக்கை வைக்கவில்லை. உலக வர்த்தகக் கழக ஒப்பந்தத்தின்படி 2005-இல் இந்தியாவில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் நுழைந்துவிடும். பிறகு பி.ஏ., பி.எஸ்சி., படிப்புகள் இருக்காது. பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தேவைப்படும் படிப்புகள்தான் இருக்கும். நட்டு, போல்டுகளைப் போல, மாணவர்களைத் தயார் செய்து, வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் அவர்களை ஏற்றுமதி செய்யும்.''

''இலவச மின்சாரத்திற்குக் கொடுத்து வந்த மானியத்தில் 300 கோடி ரூபாயை வெட்டிய தமிழக அரசு, மீட்டர் பொருத்த 400 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது.''

''கைத்தறிக்கு ஒதுக்கப்பட்ட இரகங்கள் அனைத்தையும் ஒழித்துக் கட்ட வேண்டும் என மைய அரசிற்குப் பரிந்துரை செய்திருக்கிறது சத்யம் கமிட்டி.''

''2000-க்குப் பின் நியமிக்கப்பட்ட அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் கிடையாது; அரசு வேலைக்கு ஊழியர்கள் இனி ஒப்பந்த அடிப்படையில் மட்டுமே நியமிக்கப்படுவார்கள்''

''காப்பீடு துறையில் நுழைந்திருக்கும் பன்னாட்டு காப்பீடு நிறுவனங்களுக்குச் சாதகமாகத்தான் சிவில் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன'' - இவையனைத்தும் வெறும் பொருளாதாரத் தாக்குதல்கள் அல்ல. மறுகாலனியாதிக்கம். ஓட்டுக் கட்சிகள் தங்களின் ஓட்டு வங்கியைவிட, உலக வங்கிக்குத்தான் விசுவாசமாக நடந்து கொள்கின்றன'' என நாட்டைக் கவ்வியிருக்கும் அபாயத்தை எடுத்துக் கூறினார்.

சிட்டி பாங்க் என்ற அமெரிக்க வங்கியின் தலைவர், ''நம்மைப் பொறுத்தவரை உலக மக்கள் 80 கோடிதான்'' எனப் பேசியிருப்பதை எடுத்துக் கூறிய அவர், ''உலக மக்கள் தொகையில் மீதமுள்ள 520 கோடி பேரும் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தேவையற்றவர்கள். பன்னாட்டு நிறுவனங்கள் தயாரிக்கும் பொருட்களில் விவசாயி எதை வாங்கப் போகிறான்? நெசவாளியால் எதை வாங்க முடியும்? உதிரித் தொழிலாளி எதை வாங்குவான்? அதனால் இவர்களெல்லாம் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தேவையற்றவர்கள்'' என அந்நிறுவனங்களின் மக்கள் விரோதத் தன்மையைத் தோலுரித்துக் காட்டினார்.

''இலவச - வேட்டி - சேலை திட்டத்திற்காக நெசவாளர்கள் நெய்த வேட்டி - சேலைகளை ரேசன் கடைகளின் மூலம் விற்க ஏற்பாடு செய்கிறது தமிழக அரசு. இந்த வேட்டி - சேலைகளை வங்கி ஊழியனோ, அரசு ஊழியனோ வாங்க அரசு நிர்ப்பந்திக்கவில்லை. மாறாக, ரேசனில் புழுத்த அரிசி வாங்கிச் சாப்பிடும் ஏழைகளின் தலையில்தான் கட்டப்படுகிறது. ஏழைகளின் சுமையை ஏழைகள்தான் தாங்க வேண்டும் என்ற நிலையை உருவாக்குகிறார்கள்'' எனக் குறிப்பிட்ட தோழர் மருதையன், ''இந்தத் தாக்குதல்களுக்கு எதிராக நடத்தப்படும் போராட்டங்கள் ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்கு மேல் தேங்கி நின்று விடுகின்றன. இதற்கு மாற்று வழி என்ன?'' என்ற கேள்வியை எழுப்பினார்.

''பிரான்சு நாட்டில் வேலையிழந்த உழைக்கும் மக்கள் கூட்டமாக பெரிய, பெரிய டிபார்ட்மெண்ட் ஸ்டோர்களுக்குள் நுழைகிறார்கள். அவர்கள் கடை முதலாளியிடம், ஐயா, எங்களுக்கு வேலையில்லை; கையிலும் காசில்லை. எங்களுக்கு உணவு தேவை. கொடுத்து விட்டால் பிரச்சினையில்லை எனக் கலகத்தில் இறங்கி வருகிறார்கள். அர்ஜெண்டினா நாட்டுப் பொருளாதாரம் திவாலானதையடுத்து அந்நாட்டில் பெரும் உணவுக் கலகமே நடந்தது.''

''சட்டத்தை மீற வேண்டும் என்ற நிலையை அரசாங்கமே உருவாக்குகிறது. இந்த நிலையில் சட்டப்படி தான் நடந்து கொள்ள வேண்டும் என்பது மக்களை அவமதிப்பதாகும்'' என மறுகாலனியாதிக்கத்திற்கு எதிராகக் கலகத்தில் இறங்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார், தோழர். மருதையன்.

**செய்தி தொகுப்பு: பு.ஜ.தொ.மு., சென்னை.**




படிப்பகம்

www.padippakam.com

''மறுகாலனியாதிக்க பயங்கரவாதத்தை முறியடிப்போம்'' என்ற தலைப்பில் செப். 14, 2002 அன்று திருச்சியில் நடந்த கருத்தரங்க உரையின் ஒலிப்பேழைகள் விற்பனைக்கு....




**இலவச மின்சாரம் சலுகையல்ல;**
**உழவனின் உரிமை.**
***- டாக்டர் சிவசாமி, தலைவர்,***
***தமிழக விவசாயிகள் சங்கம்.***
**விலை: ரூ. 30/-**

பாகம் - 1
**சிவில் சட்டத் திருத்தம்:**
**கட்டப் பஞ்சாயத்துக்குச்**
**சட்ட அங்கீகாரம்.**
***- வழக்குரைஞர் தோழர். பானுமதி.***

பாகம் - 2
**கல்லூரி ஆசிரியர் போராட்டம் ஏன்?**
***- பேரா. சாந்தாராம், தலைவர்,***
***அரசுக் கல்லூரி ஆசிரியர் மன்றம்.***
**விலை: ரூ. 30/-**

●○●




**போ என்றால் போய் விடுமா ?**
**போராடு! - இது**
## பேயாட்சி!
***- தோழர். மருதையன், ம.க.இ.க.***

**விலை: ரூ. 60/-**

**ஒலிப்பேழைகள் கிடைக்குமிடம்**

**இரா. சீனிவாசன், 18, முல்லைநகர் வணிக வளாகம்,**
2-வது நிழற்சாலை, 15-வது தெரு அருகே,
அசோக்நகர், சென்னை - 600 083.

***ஒலிப்பேழைகளை அஞ்சலில் பெற விரும்புவோர் அஞ்சல் கட்டணம் ரூ. 20/- சேர்த்து அனுப்ப வேண்டுகிறோம்.***

**11-ஆம் பக்கத் தொடர்ச்சி**

தண்டவாள பராமரிப்பு நிறுவனம், அடுத்த நான்காண்டுகளுக்கு தமது நிறுவனத்தின் செலவுகளை அரசே ஏற்க வேண்டும் என்றது. ரயில்வேயின் அடிக்கட்டுமான பணிகளை அரசாங்கம் செய்யாவிட்டால், நாங்கள் விலகிக் கொள்கிறோம் என்று எச்சரித்தன.

ஏற்கனவே நிதி நெருக்கடியால் தத்தளித்துக் கொண்டிருக்கும் டோனிபிளேயரின் அரசு, தனியார்மயத்தை ஆதரித்த போதிலும் இவற்றைச் செயல்படுத்த முடியாமல் விழிபிதுங்கி நின்றது. மேலும், தனியார்மயத்தின் கோரமான விளைவுகளை அனுபவித்த மக்களின் அதிருப்தி அதிகரித்துள்ள நிலையில், தனியார்மயத்தை மீண்டும் தாங்கிப் பிடித்தால் மேலும் அம்பலப்பட்டு விபரீத விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று அஞ்சியது.

கடந்த ஜூன் 28-ஆம் தேதியன்று டோனிபிளேயர் அரசின் போக்குவரத்துத் துறை செயலாளர், பிரிட்டிஷ் ரயில்வே துறை திவாலாகி விட்டதைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டு, தனியார்மயத்தின் படுதோல்வியை வேறுவழியின்றி ஏற்றுக் கொண்டார். பிரிட்டிஷ் ரயில்வே துறை மீண்டும் நாட்டுடமையாக்கப்பட்டு பொதுத்துறையாகவே இயங்கும் என்றும் அறிவித்தார். பிரிட்டனில் தனியார்மயமாக்கம் வெற்றிகரமாக பீடு நடை போட்டு முன்னேறி வருவதாக தனியார்மய தாசர்கள் மாய்மாலம் செய்துவந்த நிலையில், பிரிட்டிஷ் அரசின் இந்த முடிவானது அவர்களுக்கு மரண அடியைக் கொடுத்துள்ளது. பிரிட்டிஷ் ரயில்வே துறை மீண்டும் நாட்டுடமையாக்கப்பட்டதைத் தொடர்ந்து ''ராயல் மெயில்'' எனப்படும் பிரிட்டிஷ் அஞ்சல் துறையின் தனியார்மயமாக்கமும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

போட்டி காரணமாக தனியார்மயத்தால் சேவைகள் சிறப்பாக நடக்கும்; கட்டணம் அதிகரித்தாலும் அதற்கேற்ப தரம் உயரும்; லஞ்சமும், ஊழலும் அராஜகமும் இருக்காது; தனியார்மயத்தால் முதலாளிகள் மறுமுதலீடு செய்வது அதிகரிக்கும்; இதனால் வேலைவாய்ப்பு பெருகும்; பொருளாதார வளர்ச்சி பூத்துக் குலுங்கும் என்றெல்லாம் தனியார்மய தாசர்கள் கதையளந்தார்கள். ஆனால் அத்தனையும் பொய்; பித்தலாட்டம்; மோசடி; தனியார்மயம் என்றால் பகற்கொள்ளை, ஊழல், அராஜகம்தான் என்பதை பிரிட்டிஷ் ரயில்வே தனியார்மயத்தின் படுதோல்வி உலகுக்குப் பறைசாற்றிக் காட்டிவிட்டது.

● குமார்



படிப்பகம்

www.padippakam.com



## மூத்திரம் குடிக்க வைத்து சாதி வெறியாட்டம் பீகாருக்குப் போட்டியாகத் தமிழகம்

திருச்சி மாவட்டம் திண்ணியத்தில் தாழ்த்தப்பட்டோரை மலம் தின்ன வைத்த சாதிவெறிக் கொடுஞ்செயலைக் கண்டு தமிழகம் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளாத நிலையில், திண்டுக்கல் மாவட்டம் பள்ளப்பட்டியை அடுத்துள்ள கவுண்டம்பட்டியைச் சேர்ந்த சங்கன் என்ற தாழ்த்தப்பட்டவரை மூத்திரம் குடிக்க வைத்த சாதிவெறிக் கொடுமை அண்மையில் நடந்துள்ளது.

கவுண்டம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ணசாமி கவுண்டர் என்ற பண்ணையார் வீட்டுத் தோட்டங்களில் பரம்பரைக் கொத்தடிமையாக இருந்தவர், சங்கன். பாண்டியராஜபுரம் மலையடிவாரத்தில் இப்பண்ணையார் வாங்கிய கட்டாந்தரையை பருத்தி, கடலை பயிரிடும் விளைநிலமாக்கிப் பாடுபட்டனர், சங்கன் குடும்பத்தினர். அவரது கடும் உழைப்பைக் கண்டு பூரித்துப் போன பண்ணையார், பத்தில் ஒரு பங்கு வருவாயை அவருக்குத் தருவதாகக் கூறியுள்ளார். அத்தொகையை பாதுகாப்பாக வைத்திருக்குமாறும் பின்னர் மொத்தமாகப் பெற்றுக் கொள்வதாகவும் எஜமான விசுவாசத்தோடு சங்கன் கூறியதையும் அவர் ஏற்றுக் கொண்டார்.

பண்ணையார் மரணமடைந்தபிறகு அவரது வாரிசுகள் சொத்தைப் பங்கிட்டுக் கொண்டனர். அசோகன் என்பவரது பொறுப்பில் வந்த மலையடிவார நிலத்தை சங்கன் தொடர்ந்து பராமரித்து வந்ததோடு, தனக்குத் தரவேண்டிய வருவாயையும் அவரிடமே தொடர்ந்து பாதுகாப்பாக வைத்திருக்குமாறு கூறியுள்ளார். சிலகாலம் கழிந்து ஒரு பிரச்சினையைச் சாக்கிட்டு சங்கனை நிலத்தை விட்டு வெளியேறுமாறு அசோகன் மிரட்டியுள்ளார். அவர் காலில் விழுந்து கெஞ்சிய போதிலும் மசியாததால், அசோகனும் அவரது தந்தையும் தர வேண்டிய கூலியையும், பத்தில் ஒரு பங்கு வருவாய்க்கு ஈடாக ஒன்றரை ஏக்கர் நிலம் தருமாறும் சங்கன் கோரியுள்ளார். எதுவும் தரமுடியாது என்று அசோகன் திமிராக மறுக்கவே, வேறுவழியின்றி சங்கன், வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் மூன்றாண்டுகளுக்கு முன்பு வழக்கு தொடுத்தார். அதிகாரிகள் வந்து விசாரணை நடத்திய பிறகு, முப்பதாண்டுகளாக கொத்தடிமையாக உழைத்த சங்கனுக்கு ஒன்றரை ஏக்கர் நிலமும், ஒரு லட்ச ரூபாயும் அசோகன் தரவேண்டுமென தீர்ப்பு வந்தது.

ஆனால், அத்தீர்ப்பை ஏற்காமல் அசோகன் அடுத்த சில நாட்களிலேயே தனது தோட்டத்தை தேவர் சாதியைச் சேர்ந்த ஒருவரிடம் குத்தகைக்கு விட்டுள்ளார். குத்தகைதாரர் அடியாட்களுடன் வந்து சங்கன் குடும்பத்தினரை அடித்து விரட்டி, அவரது குடிசையையும் பண்டபாத்திரங்களையும் நாசமாக்கினர்.

பின்னர் சங்கன் தனக்கு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்ட ஒன்றரை ஏக்கர் நிலத்தில் வேலிகட்டி சீரமைக்க முயன்றதும், அசோகன் கொடுத்த பொய்ப் புகாரின் அடிப்படையில் போலீசார் சங்கனைக் கைது செய்து வதைத்துச் சிறையிலடைத்தனர். அவர் விடுதலையாவதற்குள் அந்த நிலத்தை அசோகன் ''பிளாட்'' போட்டு விற்றுவிட்டார். அதை வாங்கிய கண்ணன் என்பவரும் சங்கன் வந்ததும் விரட்டியடித்துள்ளார்.

இந்த அநீதியை எதிர்த்து சங்கன் மீண்டும் வழக்குத் தொடர முயற்சிப்பதாக அறிந்ததும், கண்ணன் தனது கூட்டாளிகள் ஐந்து பேருடன் சேர்ந்து கடந்த செப்டம்பர் 7–ஆம் தேதியன்று பள்ளப்பட்டியில் சங்கனை வழிமறித்துத் தாக்கினர். அவர் நிலைகுலைந்து கீழே விழுந்ததும், ஒருவர் கன்னத்தை அழுத்திப் பிடித்து வாயைத் திறக்கச் செய்ய, அண்ணாதுரை என்பவன் அவர் வாயில் சிறுநீர் கழித்துள்ளான். சங்கனை எட்டி உதைத்து வீதியில் வீசியெறிந்துவிட்டுச் சென்ற கண்ணனின் குண்டர்கள் மீண்டும் மறுநாள் வந்து, போலீசில் புகார் கொடுத்தால், உன்னையும் உன் குடும்பத்தையும் உயிரோடு கொளுத்தி விடுவோம் என்று மிரட்டியுள்ளனர். உயிருக்கு அஞ்சிய சங்கன், மதுரையிலுள்ள ''பீப்பிள்ஸ் வாட்ச்'' என்ற மனித உரிமைக்கான தன்னார்வக் குழுவினரிடம் தஞ்சமடைந்துள்ளார்.



சங்கன்

சாதிவெறி ஆண்டைகளை எதிர்க்கத் துணிந்த அடிமைக்கு எதிராக நடத்தப்பட்டுள்ள மிக வக்கிரமான வன்கொடுமை இது. சங்கன் மட்டுமின்றி எந்தவொரு தாழ்த்தப்பட்ட கூலி விவசாயியும் நிலத்துக்கான உரிமை கேட்டால் இந்தக் கதிதான் ஏற்படும் என்று சாதிவெறி ஆண்டைகள் விடுத்துள்ள எச்சரிக்கைதான் இது. பல்வேறு மனித உரிமைக் குழுக்களும் தன்னார்வ அமைப்புகளும் பள்ளப்பட்டிக்கு நேரில் சென்று விசாரித்து, இத்தாக்குதலை உறுதிப்படுத்தி அறிக்கைகள் வெளியிட்ட பின்னரும் சாதிவெறியர்கள் இன்னமும் கைது செய்யப்படவில்லை. நடப்பது சட்டத்தின் ஆட்சியல்ல; சாதிய–வர்க்க ஆதிக்க ஆட்சிதான் கோலோச்சுகிறது; பீகாருக்குப் போட்டியாக தமிழகமும் சாதிவெறியாட்டத்தில் முன்னேறி விட்டது என்ற உண்மையை இந்த வன்கொடுமைத் தாக்குதல் மீண்டும் நிரூபித்துக் காட்டிவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com



## மரணக்கிடங்காக அரசு மருத்துவமனை "இடதுசாரி" ஆட்சியின் கோரம்




குழந்தைகளின் தொடர் மரணத்துக்குக் காரணமான மே.வங்க 'இடதுசாரி' அரசின் அலட்சியத்தைக் கண்டித்து கொல்கத்தாவில் குழந்தைகள் நடத்தும் ஆர்ப்பாட்டம்.

மேற்கு வங்கத்தில் 'இடது முன்னணி' அரசு தொடர்ந்து ஆட்சியில் நீடித்து வருவதையும் அதன் சாதனைகளையும் விளக்கிப் பிரசுரம் வெளியிட்டு 'மார்க்சிஸ்டுகள்' சுயதம்பட்டம் அடித்துக் கொள்கிறார்கள். ஆனால் மே.வங்க மக்களோ அடிப்படை மருத்துவ வசதிகளைக்கூட அறவே புறக்கணித்து வரும் கொலைகார போலி கம்யூனிஸ்டு ஆட்சியின் மீது காறி உமிழ்கி றார்கள்.

மே.வங்கத்தில் குழந்தைகளுக் கான ஒரேயொரு மருத்துவ மனைதான் உள்ளது. தலைநகர் கொல்கத்தாவிலுள்ள இம்மருத் துவமனையில் கடந்த செப்டம்பர் முதல் நாளன்று 10 குழந்தைகள் மரணமடைந்ததைக் கண்டு அக்குழந்தைகளின் பெற்றோரும் உற்றாரும் கதறித் துடித் தார்கள். மாநில மக்கள் இச்செய்தியை அறிந்து அதிர்ச்சியடைந் தார்கள். ஆனாலும், 'மார்க்சிஸ்டு' கட்சியின் சுகாதார அமைச்ச ரான சூரியகந்தா மிஸ்ரா பதறவில்லை; குழந்தைகளைப் பறிகொ டுத்த பெற்றோருக்கு ஆறுதல் சொல்லக்கூட மருத்துவமனைக்கு மருத்துவமனைக்கு வரவில்லை. மாறாக, "ஒரே நாளில் 10 மர ணங்கள் என்பது புதிய விசயமல்ல; வழக்கத்துக்கு மாறானதும் அல்ல" என்று வக்கிரத்தோடு அலட்சியப்படுத்தினார். ஆனால், அடுத்தடுத்து குழந்தைகள் மரணமடைவது தொடர்ந்தது. பத்தி ரிகைகள் அமைச்சரின் அலட்சியப் போக்கை அம்பலப்படுத்திய பிறகு, 3 நாட்கள் கழித்து அவர் மருத்துவமனைக்கு வந்தபோது சாவு எண்ணிக்கை 18 ஆக உயர்ந்திருந்தது.

மே.வங்கத்தை உலுக்கிய இத்தொடர் சாவுகளுக்குக் காரண மென்ன? "எங்கள் மருத்துவ சேவையில் குறையேதுமில்லை; நோயின் தீவிரம் காரணமாகவே குழந்தைகள் இறந்துள்ளன" என்று அரசின் கூற்றையே மருத்துவமனை நிர்வாகம் கிளிப் பிள்ளை போல ஒப்பிக்கிறது. ஆனால், "பிராணவாயுவும் படுக் கைகளும் பற்றாக்குறை காரணமாகவே குழந்தைகள் இறந்துள் ளன" என்று உண்மையைப் போட்டு உடைத்துள்ளார், இம்மருத் துவமனையின் தலைமைக் கண்காணிப்பாளரான அனுப் மண்டல். "நோயுற்ற குழந்தைகளைச் சீரான இளஞ்சூட்டில் வைத்துப் பராமரிக்க இம்மருத்துவமனையில் 'இன்குபேட்டர்' சாதனம் இல்லை. மயக்க மருந்து கொடுக்கும் மருந்தாளுனர் இல்லை; எக்ஸ்ரே மற்றும் நோய்க்குறிகளைக் கண்டறியும் துறைகள் முறையாக இயங்குவதுமில்லை. உரிய அளவுக்கு தொழில் நுட்ப ஊழியர்கள் இல்லை;அரசிடம் பலமுறை முறை யிட்டும் பலனில்லை. இங்கு 175 படுக்கைகள்தான் உள்ளன. ஆனால், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயுற்ற குழந்தைகளின் எண்ணிக்கை 300–க்கும் மேலாக உள்ளதால், நூற்றுக்கணக்கான குழந்தைகள் தரையிலே கிடத்தப்பட்டு நோய் தீவிரமாகி மாண்டு போயுள்ளன" என்று அவர் குற்றஞ் சாட்டி யுள்ளார்.

குழந்தைகள் மருத்துவமனையில் இத்தகைய அவலம் நீடிப் பதை அறிந்ததும் போலி கம்யூனிஸ்டுகள் உடனடியாக நடவ டிக்கை எடுத்தனர். என்ன நடவடிக்கை தெரியுமா? இம்மருத்து வமனையின் தலைமைக் கண்காணிப்பாளரான அனுப் மண்டல் உடனடியாக வேறிடத்துக்குத் தூக்கியடிக்கப்பட்டு பழி வாங்கப்பட்டார்.

போலி கம்யூனிஸ்டுகள் எவ்வளவுதான் கோயபல்சு பாணியில் பிரச்சாரம் செய்தாலும், மே.வங்க மருத்துவம னைகள், நம்ம ஊர் ஆரம்ப சுகாதாரா நிலையங்களைவிடக் கேவலமான நிலையில்தான் உள்ளன. அவற்றில் குழந்தைக ளுக்குச் சிகிச்சையளிக்க உரிய சாதனங்களோ, மருந்துகளோ இருப்பதில்லை. நோய் தீவிரமான நிலையில் பெற்றோர்கள் குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு கொல்கத்தாவுக்கு ஓடி வருகி றார்கள். ஆனால், அங்கேயும் அடிப்படை மருத்துவ வசதிகள் புறக்கணிக்கப்படுவதால், இம்மருத்துவ மனையானது மனித உயிர் பறிக்கும் பலிபீடமாகி விட்டது. கடந்த 8 மாதங்களில் மட்டும் இம்மருத்துவ மனையில் 863 குழந்தைகள் பலியாகியுள் ளன. மூன்றாண்டுகளுக்கு முன்பு இரு நாட்களில் 10 குழந் தைகள் மரணமடைந்தபோது, போலி கம்யூனிஸ்டுகள் விசா ரணை நாடகமாடினர். ஆனால் இன்றுவரை அந்த விசார ணையின் முடிவுகள் அறிவிக்கப்படவில்லை.

உலக வங்கியின் ஆதிக்கத்தை எதிர்ப்பதாக சவடால் அடிக்கும் இப்போலி கம்யூனிஸ்டுகள், தாங்கள் ஆளும் மே.வங்கத்தில் உலக வங்கியின் உத்தரவுப்படி அடிப்படை மருத்துவ சேவைக்கான மானியங்களைக் குறைத்ததால் ஏற்பட்ட கோரமான விளைவுதான், குழந்தைகளின் மரணங்கள். அரசு மருத்துவமனை எனும் மரணக் கிடங்கில் மக்களைத் தள்ளி விட்டு தமக்கும் தமது வாரிசுகளுக்கும் அமெரிக்காவிலும் ஐந்து



படிப்பகம்

www.padippakam.com



நட்சத்திர தனியார் சொகுசு மருத்துவமனைகளிலும் சிகிச்சை எடுத்துக் கொள்ளும் இத்துரோகிகளிடம் உழைக்கும் மக்கள் இனியும் நம்பிக்கை வைக்கத்தான் முடியுமா?

## பிச்சை தடுப்புச் சட்டம்: பிச்சை ஒழிப்பா? வறியவர்கள் ஒழிப்பா?

கடந்த செப்டம்பர் 6-ஆம் நாளன்று டெல்லி பெருநகர போக்குவரத்து போலீசார் விதித்துள்ள வக்கிரமான - குரூரமான சட்டத்தால், இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட தெருக் குழந்தைகள் வாழ்விழந்து நிற்கிறார்கள்.

தலைநகர் டெல்லியில் இலட்சக்கணக்கான மக்கள் தெருவோரங்களிலும் நடைபாதைகளிலும்தான் வாழ்கிறார்கள். வீடற்றவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், முதியவர்கள், வாழ்விழந்தவர்கள், நிராதரவான குழந்தைகள் - எனப் பலதரப்பட்ட இவர்கள் கூலி வேலை செய்தும், பிச்சை எடுத்தும், போக்குவரத்து சந்திப்புகளில் செய்தித்தாள்களை விற்றும் வாழ்க்கையை ஓட்டுகிறார்கள். இத்தகைய பஞ்சைப்பராரிகளை டெல்லி நகரை விட்டே விரட்டியடிக்கும் நோக்கத்தோடு பிச்சை தடுப்புச் சட்டத்தைக் கொண்டுவந்து போலீசார் முனைப்பாக செயல்படுத்தி வருகின்றனர்.



டெல்லி மாநகரின் போக்குவரத்துச் சந்திப்பில் பிச்சை எடுக்கும் சிறுவன்; போலீசின் புதிய தடைச் சட்டப்படி இனி இவன் ஒரு குற்றவாளி!

இந்தியாவிலேயே முதன்முறையாகக் கொண்டு வரப்பட்டுள்ள இந்த வக்கிரமான போலீசு சட்டப்படி, போக்குவரத்து சந்திப்புகளில் எவரும் பிச்சை போடவோ, பிச்சை வாங்கவோ கூடாது; போக்குவரத்து சந்திப்புகளில் எவரும் எந்தப் பொருளையும் வாங்கவோ விற்கவோ கூடாது. இதை மீறினால் முதன்முறையாக ரூ. 100 அபராதமும், அடுத்தமுறை அதே குற்றத்தைச் செய்தவர்களுக்கு ரூ. 300 அபராதமும் விதிக்கப்படும். எந்த இடத்தில் குற்றம் நடந்ததோ அதே இடத்திலேயே அபராதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும். அபராதத்தை செலுத்த முடியாதவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு பின்னர் சிறையிடப்படுவார்கள்.

இச்சட்டம் நடைமுறைக்கு வந்தவுடனேயே, ஒரு நாளைக்கு சராசரியாக 150 பேர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டு - அபராதம் விதிக்கப்பட்டவர்கள் அனைவருமே உடல் ஊனமுற்ற பிச்சைக்காரர்களும், செய்தித்தாள் விற்கும் சிறுவர்களும்தான். போக்குவரத்து சந்திப்புகளில் மாலை நேர செய்தித்தாள் விற்பனை மூலம் இச்சிறுவர்களுக்கு ரூ. 20 முதல் ரூ. 25 வரை வருவாய் கிடைத்து வந்தது. இப்போது அதுவும் பறிபோனதோடு, போலீசார் செய்தித்தாள்களையும் பிடுங்கிக் கொண்டு அபராதம் விதிக்கின்றனர். இதற்கென்றே தனி போலீசுக்குழு உருவாக்கப்பட்டு அவர்கள் வாகனங்களில் ரோந்து சுற்றுவதும், இத்தகைய சிறுவர்களைக் கைது செய்வதும் தீவிரமாகிவிட்டது.

''போக்குவரத்து சந்திப்புகளில் பிச்சைக்காரர்களாலும் செய்தித்தாள் விற்கும் சிறுவர்களாலும் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகிறது; நெரிசல் அதிகமாகி பிரச்சினையாகிறது; இதைத் தவிர்க்கவே இப்படி அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளோம். மற்றபடி, எவரும் தருமம் செய்யக்கூடாது என்று தடைபோடவில்லை. அதை போக்குவரத்து சந்திப்புகளில் செய்யாதீர்கள் என்றுதான் கூறுகிறோம்'' என்று நியாயவாதங்களை அடுக்குகிறார் டெல்லி மாநகரப் போக்குவரத்து போலீசு இணை இயக்குநரான, மாக்ஸ்வெல் பெரைரா. ஆனால் பிச்சைக்காரர்கள் மற்றும் தெருவோர சிறார்களின் மறுவாழ்வைப் பற்றி அவர் வாயே திறப்பதில்லை.

தனியார்மய - தாராளமயத்தால் மரணக் குழியில் வீழ்த்தப்பட்ட உழைக்கும் மக்கள் பிழைப்புக்காக நகரங்களை நோக்கி ஓடி வருகிறார்கள். தெருவோரங்களில் தங்கிக் கொண்டு பல்வேறு உதிரித் தொழில்களில் ஈடுபட்டு வயிற்றைக் கழுவுகிறார்கள்; சிலர் பிச்சை எடுக்கிறார்கள். இவர்களால் நகரத்தின் அழகும் தூய்மையும் சீரான போக்குவரத்தும் கெடுகிறது என்று கூறிக் கொண்டு, அவர்களின் வாழும் உரிமையையும் பறிக்கக் கிளம்பி விட்டது. டெல்லி போலீசு, நிராதரவான தெருவோரக் குழந்தைகளுக்கு செய்தித்தாள் விற்பது ஒப்பீட்டு ரீதியில் எளிய வேலை. அதைத் தடை செய்ததன் மூலம் இக்குழந்தைகள் மிகக் கடினமான வேலைகளுக்குச் செல்லுமாறு நிர்ப்பந்தமாக தள்ளப்படுகிறார்கள்.

போக்குவரத்தை முறைப்படுத்தும் நடவடிக்கை என்ற பெயரில் செயல்படுத்தப்படும் இந்த வக்கிரமான சட்டம், பிச்சைக்காரர்களை டெல்லியிலிருந்து விரட்டியடிப்பதோடு மட்டும் நின்று விடப் போவதில்லை. அடுத்த கட்டமாக, சைக்கிள் ரிக்ஷாக்களால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாகக் கூறி, அதையும் தடை செய்ய போலீசார் முயற்சித்து வருகின்றனர். இனி நகரங்கள் மேட்டுக்குடியினருக்கு மட்டுமாகவே இருக்கும். ஏழை - எளிய மக்களை இனி நகரங்களில் நுழையக் கூட விடாமல் ''அந்நியர்கள் பிரவேசிக்கக் கூடாது'' என்ற அறிவிப்புப் பலகையுடன் தடை விதிக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



படிப்பகம்

## சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

### மாமியார் உடைத்தால் மண்குடம்

தமிழகத்தில் கொண்டு வரப்பட்டுள்ள தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை எதிர்ப்பதாகக் கூறும் சி.பி.எம்., மேற்கு வங்கத்தில் ''ஒப்பந்த பண்ணைத் திட்டம்'' என்ற பெயரில் விவசாய நிலங்களைப் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தூக்கிக் கொடுக்கும் திட்டமொன்றை அமல்படுத்தவுள்ளது. தமிழக முதல்வர் ஜெயா கூட தரிசு நிலங்களைத்தான் முதலாளிகளுக்குக் குத்தகைக்கு விடப் போவதாகக் கூறி வருகிறார். ஆனால், மே.வங்கத்தை ஆளும் இடதுசாரிக் கூட்டணி வளமிக்க நிலங்களைப் பன்னாட்டு நிறுவனங்கள் அபகரித்துக் கொள்வதற்கு வசதியாக, சிறிய, நடுத்தர விவசாயிகளோடு பன்னாட்டு நிறுவனங்கள் ஒப்பந்தக் கூட்டு (எப்பேர்பட்ட வர்க்கக் கூட்டணி!) வைத்துக் கொள்ளவும் அனுமதித்துள்ளது. மே.வங்க அரசுக்கு இத்திட்டத்தைத் தயாரித்து கொடுத்ததுகூட, மெக்கின்ஸே என்ற அமெரிக்க நிறுவனம்தான்!

### வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் இந்து மதவெறிக் கும்பல்

குஜராத்தில் நடந்த இனப்படுகொலையின் பொழுது கொல்லப்பட்ட முசுலீம்களின் உறவினர்களுக்கு நட்டஈடு வழங்குவதைத் தட்டிக் கழிப்பதற்காக, அடையாளம் காட்டமுடியாதபடி கொல்லப்பட்டவர்களைக் காணாமல் போனவர் பட்டியலில் சேர்த்தது இந்து மதவெறிக் கும்பல். இந்தச் சதித்தனத்திற்கு எதிராகக் கண்டனக் குரல் எழும்பவே, இப்பொழுது இந்து மதவெறிக் கும்பல் தன்னை நியாயவானாகக் காட்டிக் கொள்ள, நட்டஈடு வழங்குவது தொடர்பாக ஒரு வக்கிர ஆணையைப் பிறப்பித்திருக்கிறது. இதன்படி, கொல்லப்பட்டவருக்கு ஒருவர் சாட்சியம் அளிக்க வேண்டும். மேலும், அப்படி சாட்சியம் அளிப்பவர் கொல்லப்பட்டவருக்கு வழங்கப்படும் நட்டஈடுத் தொகையைப் போல மூன்று மடங்கு, அதாவது நாலரை லட்ச ரூபாய் பெறுமான அளவிற்கு கடன் தீர்வு பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

### சாதனையா? வக்கிரமா?

இந்திய உணவுக் கழகத்தின் கையிருப்பில் இருந்து கடந்த இரண்டு ஆண்டுகளில் 1.5 கோடி டன் அரிசியையும், கோதுமையையும் இந்தியா வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருப்பதாகவும்; இந்த ஆண்டு இறுதிக்குள் மேலும் 39 இலட்சம் டன் உணவு தானியங்களை ஏற்றுமதி செய்யப் போவதாகவும், இந்தியாவின் இந்த வேகத்தைப் பார்த்து அரிசி ஏற்றுமதியில் உலகிலேயே முதல் இடத்தில் இருக்கும் தாய்லாந்து நடுங்கிப் போயிருப்பதாகவும் மத்திய அரசு தம்பட்டம் அடித்துக் கொண்டு திரிகிறது. சமீபத்தில் தஞ்சை மாவட்டத்தில் ஆதிச்சபுரம் கிராமத்தைச் சேர்ந்த பிரகாஷ் என்ற சிறுவன் பட்டினியால் இறந்து போனான். மகாராஷ்டிரா மாநிலத்தில் பழங்குடி இனத்தைச் சேர்ந்த 22 குழந்தைகள் போதிய உணவு இல்லாததால், அடுத்தடுத்து இறந்து போயின. இப்படி உள்நாட்டு மக்களைப் பட்டினிச் சாவிற்குள் தள்ளிவிட்டுவிட்டு, உலகச் சந்தையைப் பிடிப்பதில் முதல் ஆள் எனத் தம்பட்டம் அடிப்பது சாதனையா? வக்கிரமா?

ஜார்கண்ட் மாநிலத்தில் பரவிவரும் பட்டினி பற்றி நடந்த பொது விசாரணையில் கலந்து கொண்ட பழங்குடி இன மக்கள் (உள்படம்) பட்டினியால் இறந்துபோன தஞ்சை - ஆதிச்சபுரம் கிராமத்தைச் சேர்ந்த சிறுவன் பிரகாஷ்.



### பா.ஜ.க.வின் இந்து மதவெறி காங்கிரசின் இந்து மிதவாதம்

குஜராத் மாநிலத்தில் பா.ஜ.க. நடத்தும் ''கௌரவ் யாத்ரா'' செல்லும் இடங்களில் எல்லாம், ''முசுலீம்களுக்கு ஐந்து பெண்டாட்டி, இருபத்தைந்து குழந்தைகள்'' என இந்து மதவெறியைக் கக்கிக் கொண்டு போகிறார், நரேந்திர மோடி. இதை எதிர்த்துப் போராட வக்கற்ற 'மதச்சார்பற்ற' காங்கிரசோ, இந்து மிதவாத மூடநம்பிக்கைகளின் மூலம், பா.ஜ.க.வின் இந்து மதவெறியை முறியடித்து விடலாம் எனக் கனவு காண்கிறது. மோடியின் யாத்திரை ராஜ்கோட் மாவட்டத்திலுள்ள உப்லேதா நகருக்கு வந்து சென்றபின், அந்நகர காங்கிரசின் மகளிர் அணி, யாத்திரை சென்ற தெருக்களில் எல்லாம் பசுவின் மூத்திரத்தைக் கொண்டு வந்து கொட்டி, நகரைத் 'தூய்மைப்படுத்தியது'. ''பசு மூத்திரம் யாத்திரை விட்டுச் சென்ற கெட்ட ஆவிகளை விரட்டி விடும்'' என காங்கிரசு கட்சியின் முன்னாள் மந்திரி பல்வந்த் மன்வார் இந்த மூத்திர மழைக்கு விளக்கமளித்துள்ளார். கெட்ட ஆவி போகிறதோ இல்லையா, மக்களுக்குத் தொற்று வியாதி வராமல் இருந்தால் சரி!

### மனித உரிமை - கிலோ என்ன விலை?

மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த ஆனேஷ் தாஸ், நிமாய் கோஷ் என்ற இரண்டு விசாரணைக் கைதிகள் கடந்த ஆகஸ்டு 1-ந் தேதியன்று, மால்டா நீதிமன்றச் சிறைச்சாலையில் மிகவும் பரிதாபகரமான முறையில் இறந்து போயினர். மால்டா நீதிமன்றத்திலுள்ள சிறைச்சாலையில் 40 கைதிகளைத் தான் அடைக்க முடியும். ஆனால், சம்பவம் நடந்த அன்று மே.வங்க போலீசு 262 கைதிகளை அந்தச் சிறைச்சாலைக்குள் அடைத்திருக்கிறது. மேலும், அந்தச் சிறை அறையில் காற்றோ, வெளிச்சமோ வருவதற்கு ஒரு சிறு ஜன்னல்கூட கிடையாது. இதனால் சிறை அறையின் உள்ளே நெரிசலும், புழுக்கமும் அதிகமாகி, அந்த இரண்டு விசாரணைக் கைதிகளும் மூச்சுத் திணறி இறந்து போய்விட்டனர். 'மார்க்சிஸ்டு'கள் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் இலட்சணம் இதுதான்!

### மின்சார வாரியம் நட்டமடைவது யாரால்?

உ.பி. மாநில முன்னாள் முதல்வர் கல்யாண் சிங், அம்மாநில மின் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மின் கட்டண பாக்கி 2.18 இலட்ச ரூபாய். காங்கிரசு கட்சியைச் சேர்ந்த முன்னாள் முதல்வர் என்.டி. திவாரியின் மின் கட்டண பாக்கி 5.7 இலட்ச ரூபாய். இப்படி உ.பி.யின் சர்வகட்சி பிரமுகர்கள் செலுத்த வேண்டிய மின் கட்டண பாக்கி 74 இலட்ச ரூபாயைத் தொட்டுவிட்டது. இத்தொகையை வசூலிக்கும் நோக்கத்தோடு, மின் ஊழியர்கள் இந்தப் பிரமுகர்களின் வீட்டு மின் இணைப்பைத் துண்டித்து விட்டனர். ஆனால் மாயாவதி அரசோ, நாணயமாக நடந்து கொண்ட ஊழியர்களை மிரட்டியதோடு, மின் இணைப்பைத் துண்டித்ததற்காக இரண்டு பொறியாளர்களைத் தற்காலிக வேலை நீக்கம் செய்துவிட்டது.

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

படிப்பகம்

www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா

இந்தப் படத்தில் ஜெயாவுடன் இருக்கும் மாணவர்கள், தமிழகப் போலீசாரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பள்ளி இறுதி வகுப்பு மற்றும் +2 தேர்வுகளில் அதிக மதிப்பெண் எடுத்துத் தேர்வு பெற்ற போலீசார் குடும்பத்துக் குலக் கொழுந்துகளுக்குப் பரிசுகள் வழங்கிவிட்டு, அவர்களோடு சேர்ந்து புகைப் படமும் எடுத்துக் கொண்டார் ஜெயா. போலீசாரின் பிள்ளைகளை இப்படித் தனியாகக் கவனிப்பதற்கு, ''மிகவும் கடுமையான சூழ்நிலையில் பணியாற்றும் காவலர்கள், தங்கள் பிள்ளைகளின் படிப்பைக் கவனித்துக் கொள்வதற்கான வாய்ப்புகள் குறைவு... யாரும் கவனிப்பாரற்ற நிலையில் இந்த மாணவ, மாணவியர் சுயமாகவே படித்து, தேர்ச்சி பெற்று சிறந்த மதிப்பெண் பெற்றுள்ளனர்'' எனக் காரணங்களை அடுக்கினார் ஜெயா.

எத்தனையோ கூலித் தொழிலாளிகளின் பிள்ளைகள் கூடத்தான், கவனிப்பாரற்ற சூழ்நிலையில் படித்து, அதிக மதிப்பெண் எடுத்துத் தேர்ச்சி பெறுகின்றனர். அந்தக் கூலித் தொழிலாளிகளின் பிள்ளைகள் மீதெல்லாம் காட்டாத பரிவை, ஜெயா, போலீசார் வீட்டுப் பிள்ளைகள் மீது காட்டுவதற்குக் காரணமே, ஜெயாவின் பார்ப்பன - பாசிச ஆட்சிக்கு போலீசுதான் காவல்நாயாக இருக்கிறது என்பது தவிர வேறில்லை.

ஜெயா ஆட்சிக்கு வந்த பிறகு போலீசாருக்குத் தனிக் கவனிப்புதான் நடந்து வருகிறது. போலீசு குடும்பம் மட்டும் ஓட்டுப் போட்டு ஜெயா ஆட்சியைப் பிடித்துவிடவில்லை. கருணாநிதி போய் ஜெயா ஆட்சிக்கு வந்தால் ஏதாவது நல்லது நடக்கும் என நம்பித்தான், அவருக்குப் பல இலட்சக்கணக்கான தமிழர்கள் வாக்களித்தார்கள். அப்படி வாக்களித்தவர்களின் வாழ்வைப் பற்றி, அவர்களின் பிள்ளைகள் பற்றி ஜெயா கொஞ்சமாவது அக்கறை கொண்டிருக்கிறாரா?

இதோ, இந்தப் படத்தில் தங்களின் முகங்களை மூடிக் கொண்டுள்ள இந்தச் சிறுமிகள் அனைவரும் தென்காசி, திருநெல்வேலி, புளியரை பகுதிகளைச் சேர்ந்தவர்கள். இவர்களையும் உள்ளிட்டு 41 பெண்களை செப்டம்பர் 19 அன்று சென்னை - சென்ட்ரல் ரயில் நிலையத்தில் சுற்றி வளைத்துப் பிடித்தது ரயில்வே போலீசு. ஆனால் இவர்களுள் ஒருவரும் குற்றவாளிகள் இல்லை. இப்பெண்கள் அனைவரும் குஜராத்துக்குக் கடத்தப்பட இருந்தபொழுது, அவர்களைப் பிடித்து மீட்டுவிட்டதாகத் தம்பட்டம் அடித்துக் கொள்கிறது தமிழக அரசு. இது போன்ற சிறார்கள் கடத்தல் தடுப்பு - மீட்பு சம்பவம் செப்டம்பர் மாதத்தில் மட்டும் மூன்று நடந்திருக்கிறது.

மீட்கப்பட்ட இச்சிறுமிகள் அனைவரும் தாங்கள் விருப்பப்பட்டுதான் குஜராத்துக்குச் செல்வதாகக் கூறுகிறார்கள்.



படிக்க வேண்டிய வயதில், குடும்பத்தோடு சேர்ந்து வாழ வேண்டிய வயதில், அதையெல்லாம் விட்டுவிட்டு, இந்தச் சிறுமிகள் மொழி தெரியாத வேற்று மாநிலத்துக்குச் செல்ல வேண்டிய அல்லது கடத்தப்பட வேண்டிய அவசியம் என்ன?

விவசாயக் கூலி வேலைகூடக் கிடைக்காத நிலையில்தான் இந்த வருடம் தானும் தனது மகளும் முதல்முறையாக குஜராத்துக்குப் போக முடிவு செய்ததாகச் சொல்கிறார், பேச்சியம்மாள். மீட்கப்பட்ட அனைவரும் இப்பொழுது அவர்களின் சொந்தக் கிராமங்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டு விட்டனர். ஆனால், அவர்களை குஜராத்துக்குத் துரத்திய வறுமைக்கு தமிழக அரசின் பதில் என்ன?

மிகவும் கடுமையான சூழ்நிலையில் பணியாற்றுவது போலீசுதான் என ஜெயாவின் கண்களுக்குப் பட்டால், இவர்களைப் போன்ற தமிழகத்தின் கூலித் தொழிலாளர்களின் குடும்பங்களெல்லாம் உட்கார்ந்து கொண்டு சாப்பிடுகிறதா? ஏழைகளுக்கு அரைகுறையாகக் கிடைத்து வந்த அரசு சலுகைகள் அனைத்தையும், ''கஜானா காலி'' என ஒப்பாரி வைத்து வெட்டித் தள்ளிய ஜெயா, போலீசு துறைக்கு மட்டும் அள்ளி அள்ளிக் கொடுக்கிறார். வேலை கேட்டும், கல்வி கேட்டும், நெல் கொள்முதலைத் தொடரக் கேட்டும், ரேசனில் அரிசி கேட்டும் உழைக்கும் மக்களும், அவர்களது பிள்ளைகளும் போராடும்பொழுது, ஜெயா போலீசை ஏவிவிட்டு ஒடுக்குகிறார். ஆனால், போலீசாரின் குறைகளை மட்டும், அவர்களை நேரடியாகச் சந்தித்து, கேட்டு நிவர்த்தி செய்து கொடுக்கிறார். போலீசு, அவனது குடும்பமும் மட்டும்தான் வாழ உரிமை பெற்றதென்றால், தமிழ்நாட்டில் இருப்பது ஜனநாயகமா? போலீசு நாயகமா?